DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004 | BRAMPTON / MISSISSAUGA 905 457 1700 | MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative — kailain.thillai@gmail.com
Ragu Thillainathan, Sales Representative — homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road, Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX Community

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1525
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday June 27, 2025

## ஒன்ராறியோ மாகாணத்தில் முதியோர் மாதத்தைக் கொண்டாடும், வகையில் நடைபெற்ற முதலாவது ஸ்கார்பரோ முதியோர் கண்காட்சி

### அமைச்சர் றேமண்ட் சோ அவர்களின் தொகுதி அலுவலகம் ஏற்பாடு செய்த அற்புதமான விழா



“சுறுசுறுப்பான வாழ்க்கை, ஆரோக்கியமான முதுமை“ என்ற தொனிப் பொருளில் 2025ஆம் ஆண்டு கொண்டாடப்படும் “ஒன்ராறியோ முதியோர் மாதத்தை சிறப்பிக்கும் வகையில் ஸ்காபரோ சட்டமன்ற உறுப்பினரும், முதியோர் விவகார, அணுகுமுறை அமைச்சருமான ரேமண்ட் சோ ஏற்பாடு செய்த முதலாம் ஆண்டு முதியோர் கண்காட்சி சீன கலாசார மண்டபத்தில் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வெற்றிகரமாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ரேமண்ட் சோ, சுறுசுறுப்பான, ஆரோக்கியமான வாழ்க்கைக்குத் தேவையான உபகரணங்களையும் சேவைகளையும் உள்ளூர் அமைப்புகள், வணிக நிறுவனங்களிடம் முதியோர் பெறுவதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைந்தேன். எங்கள் முதியோர் இந்த வாய்ப்புக்களைப் பெற முழுமையாக தகுதியானவர்கள்.“ என்று தெரிவித்தார்.

(தொடர்ச்சி 21ம் பக்கம்)

## தமிழ்க் கனடியர்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற முதலாமவர் என்ற புகழுக்குரிய மாகாண சபை உறுப்பினர் லோகன் கணபதி அவர்களைச் சந்தித்த அனுபவம் மறக்க முடியாதது

### பிரித்தானியாவின் கிங்ஸ்ரன் நகரின் மேயராகக் கடமையாற்றி தற்போதும் கவுன்சிலராக தொடர்ந்தும் பணியர்றறும் வைத்தீஸ்வரன் தயாளன் கனடா உதயன் ஆசிரிய பீடத்திடம் தெரிவிப்பு



”ஐந்து இலட்சத்திற்கும்அதிகமாக கனடிய தேசத்தில் புகழோடும் பெருமையோடும் வாழும் தமிழ்க் கனடியர்களில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற முதலாமவர் என்ற புகழுக்குரிய மாகாண சபை உறுப்பினர் லோகன் கணபதி என்னும் அரசியல் தலைவரைச் சந்திக்கக் கிட்டிய வாய்ப்பு மிகவும் பெருமதியானது . கனடாவாழ் தமிழ் மக்கள் மாத்திரமல்ல ஏனைய சமூகத்தவர்களும் நன்கு நேசிக்கும் அரசியல் தலைவரான அவர்களைச் சந்தித்த அனுபவம் மறக்க முடியாதது”

இவ்வாறு, பிரித்தானியாவின் கிங்ஸ்ரன் நகரின் மேயராகக் கடமையாற்றி தற்போதும் கவுன்சிலராக தொடர்ந்தும் பணியாற்றுபவரும் மற்றும் இலத்திரனியல் பொறியியலாளர் அத்தடன் அங்கு சிறந்த அரசியல் செயற்பாட்டாளராகவும் விளங்கும் வைத்தீஸ்வரன் தயாளன் என்னும் மக்கள் சேவையாளர் கனடா உதயன் ஆசிரிய பீடத்திடம் மகிழ்ச்சியோடு தெரிவித்தார்.


(தொடர்ச்சி 17ம் பக்கம்)

Vacancies Motel & Restaurant
நயாகரா நகரப் பகுதியில் உள்ள Motel & Restaurant ஒன்றில் சமையறை உதவியாளர் மற்றும் சுத்திகரிப்பு வேலைக்காரர் ஆகியோர் உடனடியாகத் தேவை. கணவன் -மனைவி தம்பதியாக இருந்தால் நன்று.சம்பளம் பேசித்தீர்க்கலாம். தொடர்புகளுக்கு
416 560 6025

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிறாம்ரனிலும் அமைந்துள்ள எமது அடைவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East (2nd fl) Mississauga, ON, L5A 1W7 — 905-272-1222
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
PRIME LEGAL SERVICES
905-334-6851


HAPPY CANADA DAY!
The True North Strong and Free
VIJAY
THANIGASALAM
MPP - Scarborough-Rouge Park
8130 Sheppard Avenue East, Unit 105
Scarborough, ON M1B 3W3
416-283-8448 • vijay.thanigasalam@pc.ola.org
vijaythanigasalam.ca


அனைவருக்கும் கனடா தின நல்வாழ்த்துக்கள்!
HAPPY CANADA DAY!!
SCARBOROUGH CENTRE
JOIN MPP DAVID SMITH FOR HIS ANNUAL SUMMER FUN FAIR, A SIGNATURE COMMUNITY EVENT FILLED WITH MUSIC, GAMES, FAMILY FUN, AND DELICIOUS FOOD FOR RESIDENTS OF ALL AGES TO ENJOY!
SATURDAY
JULY 12, 2025
12 PM – 4 PM
FREE!
RSVP:
david.smith1@pc.ola.org
416-615-2183
KNOB HILL PARK
625 BRIMLEY RD,
SCARBOROUGH, ON
M1J 1B7
Ontario

Canada

We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 | Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | உதயன் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# கனடிய தமிழ் அச்சு ஊடகங்களைக் காப்பாற்றி வேண்டிய பொறுப்பு யாருடையது?

உலகில் இலத்திரனியல் ஊடகங்களுக்கு முன்னரேயே தோன்றியவை பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளான அச்ச ஊடகங்கள் என்பதை அறியாதவர்கள் சிலரே. அதுவும் வாசிப்பு பழக்கம் மற்றும் உலக அரசியல் செய்திகளில் நாட்டம் கொண்டவர்களுக்கு அச்சு ஊடகங்கள் மீது உள்ள நேசம் சொல்லில் அடங்காதவை.

தமிழ்ப் பத்திரிகைகள எடுத்துக் கொண்டால் இலங்கை, இந்தியா, மலேசியா மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளில் பத்திரிகை வாசிப்பதில் உயர் கல்வி கற்றவர்களை விட தொழிலாளர்களும் விவசாயிகளும், மத்திய தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களும் அதிகளவில் உள்ளார்கள் என்பதை தரவுகளிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். எனினும் கல்வியறிவில் உயர்ந்தவர்களும் தனவந்தர்களும் வாசிப்பு பழக்கம் அற்றவர்கள் என்பதை அழுத்திச் சொல்லுவது எமது நோக்கமும் அல்ல.

சாதாரணமானவர்கள் வாசிப்பு பழக்கத்தை தினந்தோறும் கடைப்பிடிக்கின்றனர் என்பதற்கு ஒரு நல்ல உதாரணத்தை யாழ்ப்பாணத்திலிருந்து நாம் எடுத்து வருகின்றோம். "திருநெல்வேலி சந்தை"யை பற்றி கேள்விப்படாதவர்கள் வட இலங்கை யாருமே இருக்கமாட்டார்கள். அந்த சந்தை நல்லூர் பிரதேசச் சபையினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. அங்கு பணியாற்றும் சுத்திகரிப்புத் தொழிலாளி ஒருவர் தினமும் பத்திரிகைகளை வாசிக்கும் கொண்டவர் அதி-காலையிலேயே சந்தைக்கு செல்லும் தனது சுத்திகரிப்பு பணியை சீராகச் செய்த பின்னர் தனது உணவருந்தும் வேளையில் அங்குள்ள கடைகளிலிருந்து தமிழ்ப் பத்திரிகைகளை ஒவ்வொன்றாக எடுத்து வாசித்துவிட்டு அப்படியே திரும்பவும் அந்த தட்டுக்களில் வைத்துவிடுவார்களாம். கடைக்காரர்கள் கூட அவரது வாசிப்புக்கு தடையாக இருக்க மாட்டார்களாம். தேநீர்க் கடைக்காரர்கள் அவருக்கு இலவசமாக தேநீரும் சிற்றுண்டிகளும் வழங்குவார்களாம்.

இவ்வாறு தனது பணிகளையும் பத்திரிகை வாசிப்பையும் நிறைவு செய்த பின்னர் அவர் நல்லூர் பிரதேச சபை அலுவலகத்திற்குச் சென்று ஓரமாக ஒரு இடத்தில் நிற்பாராம். அங்கு பணியாற்றும் கற்றவர்களான உத்தியோகத்தர்கள் அவரிடம் கேட்பார்களாம். "இன்று என்ன செய்தி? சொல்லப்பா! என்று.

அவரும் தான் வாசித்த உலக மற்றும் உள்ளூர்ச் செய்திகளையும்
அரசியல் செய்திகளையும் விபரங்களுடன் எடுத்துச் சொல்வாராம். இந்த விடயம் அங்கு வாரத்தில் ஐந்து நாட்களும் நடைபெறும் ஒன்றாகும். வூாசிப்பு பழக்கம் கொண்ட அந்த தொழிலாளிக்காக காத்திருந்த கற்றவர்கள் இருந்த காலம் இன்றிலிருந்து சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர். இப்போது எப்படி இருக்கும் என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம். அலுவலகத்தில் பணி செய்யும் உத்தியோகத்தர்கள் தங்கள் பணிகளை சரியாகச் செய்யாமல்
தொலைபேசியைத் தட்டிக் கொண்டிருப்பார்கள்.

இப்போது இவ்வார "கதிரோட்டத்தின்" தலைப்பிற்கு வருவோம். கனடாவில் சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன்னர் பத்துக்குக் குறையாத பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருந்தன. அவற்றில் வாராந்த மற்றும் மாதாந்த பத்திரிகைகள் அடங்குவன. ஆனால் காலப்போக்கில் தற்போது வாராந்தம் வெளிவருகின்ற தமிழ்ப் பத்திரிகைகள் இரண்டாக "சுருங்கிக்" கொண்டன. இந்த "சுருக்கம்" என்பது எண்ணிக்கையில் மாத்திரமல்ல பத்திரிகைகளின் பக்கங்களிலும் தங்கியிருக்கின்றது.

எனினும் எமது "உதயன்" மற்றும் "உலகத் தமிழர்" ஆகியவற்றின் வாராந்த வெளியீடுகள் தவறாமல் வெளிவந்தாலும் ஒவ்வொரு வாரமும் அவை "சுகமான பிரசவமாக" இல்லை என்பதை இரண்டினதும் வெளியீட்டாளர்களும் பத்திரிகை ஆசிரியர்களும் நன்கு உணர்ந்து சவால்களுடன் தங்கள் ஊடகப் பணிகளை தொடர்ந்த வருகின்றார்கள்.

சவால்களுக்கு மத்தியில் எமது சமூகத்தின் வர்த்தகர்கள் சிலரும் மத்திய மற்றும் மாகாண அரசில் உள்ள உறுப்பினர்கள் சிலரும் அச்சு ஊடகங்களை காப்பாற்றும் வகையில் விளம்பரங்களை அவ்வப்போது தந்த வண்ணம் உள்ளார்கள்.

கனடாவில் வெளிவரும் நூற்றுக்கணக்கான பல்லினப் பத்திரிகைகளும் மத்திய அரசின் சிறிய உதவிகள் வருடத்திற்கு ஒரு தடவை வழங்கப்பெறுகின்றன. அதற்கு மேலாக பல் மொழிப் பத்திரிகைகளின் அவசியமும் அவற்றின் தேவையும் பற்றி பல வருடங்களாக கனடாவின் சில மாகாண முதல்வர்களும் பிரதமர்களும் பல்லினப் பத்திரிகையாளர்கள் மத்தியில் தெரிவித்த ஆரோக்கியமான கருத்துக்களையும் பத்திகைகளை இன்னும் நேசிக்கும் இதயங்களுக்காக இங்கு பதிவு செய்கின்றோம்.

அந்த அரசியல் தலைவர்கள் தெரிவித்த அல்லது உணர்ந்து பகிர்ந்து கொண்ட கருத்துக்கள் இவைதான். "ஒரு இனம் சார்ந்த பத்திரிகை ஒன்று குறிப்பிட்ட அந்த இனத்தின் அல்லது மொழியின் அடையாளமாகவே திகழ்கின்றது" என்பதை அவர்கள் பகிரங்கமாக வெளியிட்டு வருகின்றனர். அதன் காரணமாகவே அச்சு ஊடகங்களுக்கு தங்கள் ஆகக்குறைந்த ஆதரவை அவர்கள் வழங்கி வருகின்றார்கள். எனவே நாம் மேற்கூறிய கருத்துக்களின் முடிவுரையாக எமது சமூகத்தின் ஆதரவும் நேசிப்பும் எமது அச்சு ஊடகங்களுக்கு தொடர்ந்தும் இருக்க வேண்டிய ஒன்றே என்ற நம்பிக்கையுடன் நாம் காத்திருக்கின்றோம் என்பதை வெளிப்படையாகவே நாம் பதிவு செய்கின்றோம்.!




வல்மொறின் முருகன் ஆலய வருடாந்த தேர் உற்சவத்திற்கான வி-சேட சொகுசு பஸ் சேவை - TORONTO வில் இருந்து.....
யூலை 19ம் 20ம் திகதிகளில் சனி ஞாயிறு தினங்களில்
ஹோட்டல் மற்றும் சொகுசு பஸ் கட்டணங்கள் 199.00 டாலர்கள் மட்டுமே.
பக்தர்ளை ஏற்றும் இடங்கள்: Ajax-Markham- Scarborough-Vaughan-Etobicoke-Brampton ஆகியனவாகும் .பயணச் சீட்டுகளுக்கு அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்: 416.317.0052 / 647.821.7895

**Kantharmadam Makkal Ontrium Summer Picnic/ Get-Together.**
**It is being held on Saturday, June 21, 2025 at Thomson Park, Picnic area 2, starting at 10am to 8pm. Barbecue, food, snacks and drinks will be served. All are welcome!**

**Room for Rent**

**McLevin/Sewells வீட்டில் மேல் தளத்தில் அறை ஒன்று வாடகைக்கு உள்ளது. பெண்கள் விரும்பத்தக்கது.**
**தொடர்புகளுக்கு:**
**John 416-664-666**



# யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவம் தொடர்பாக மூவர் பொலிஸாரால் கைது!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்ற வாள் வெட்டு வன்முறைச் சம்பவம் தொடர்பாக மூன்று சந்தேகநபர்கள் 21ம் திகதி அ ன்றையதினம் கைதுசெய்யப்பட்டனர்.

யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவால் மேற்கொள்ளப்பட்ட கைது நடவடிக்கையின்போது மூன்று கூரிய வாள்களும் மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டன.

உதயபுரம் பகுதியில் சில வாரங்களுக்கு முன்பு சகோதரர்கள் மீது இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவம் தொடர்பான விசாரணைகளின்போதே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அரியாலை நாயன்மார்கட்டை சேர்ந்த 25,28,30 வயதுடைய மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# யாழ்ப்பாணத்தில் பல்வேறு குற்றச்செயல்கள் புரிந்த மூவர் தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டனர்

கொழும்புத்துறை பகுதியைச் சேர்ந்த குறித்த மூவரும் யாழ்ப்பாணம், கோப்பாய், பருத்தித்துறை மற்றும் அச்சுவேலி ஆகிய பொலிஸ் பிரிவுகளில் இடம்பெற்ற கொலை, கொள்ளை, வாள்வெட்டு ஆகிய குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் மூவரும் கடந்த 20ம் திகதி இலங்கை - தலைமன்னாரில் இருந்து கடல் மார்க்கமாக இந்தியாவிற்கு தப்பிச் செல்ல முயற்சித்தவேளை கடலில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளானர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மூவரும் தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை தலைமன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆடையில் தீப்பிடித்ததால் குடும்பஸ்தர் உயிரிழப்பு – யாழ்ப்பாணம் அராலியில் இடம்பெற்ற துயரச் சம்பவம்!

யாழ்ப்பாணம் - அராலி பகுதியில் தீ விபத்தில் சிக்கிய குடும்பஸ்தர் ஒருவர் 24ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்றையதினம் உயிரிழந்துள்ளார். இதன்போது அராலி தெற்கு, வட்டுக்கோட்டை பகுதியைச் சேர்ந்த அம்பலவாணர் நாகேந்திரம் (வயது 69) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த நபர் நடக்க முடியாத நீரிழிவு நோயாளி ஆவார். கடந்த 22ஆம் திகதி விசிய பலத்த காற்றுடன் கூடிய மழையால் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இதன்போது மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டது. ஏற்றப்பட்ட மெழுகுவர்த்தியானது அவரது ஆடையில் பற்றியதில் அவர் தீ காயங்களுக்கு உள்ளாகினார்.

இந்நிலையில் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி 24ம் திகதி செவ்வாய்கிழமை அன்றையதினம் உயிரிழந்தார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 1000க்கு மேற்பட்ட சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டோம் என்கிறார் வைத்திய கலாநிதி கோபி சங்கர்




யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 2014 முதல் ஏறத்தாழ ஒவ்வொரு வருடமும் 1000க்கு மேற்பட்ட பாரிய சத்திரசிகிச்சைகளும், 2000 வரையிலான நடுத்தர மற்றும் சிறிய சத்திரசிகிச்சைகளும் மேற்கொண்டதாக யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் என்பும் முறிவு சத்திர சிகிச்சை நிபுணராக கடமையாற்றி கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு பணி இடமாற்றம் பெற்று செல்லும் வைத்திய கலாநிதி கோபி சங்கர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு வருடத்திற்கு 4000 வரையிலான புது நோயாளர்களையும் 1300க்கு மேற்பட்ட பழைய நோயாளகளிற்குமான சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளது.

வளைபாதத்திற்கான சிறப்பு கிளினிக் மற்றும் வடமாகாணத்திற்கான வளைபாத சிகிச்சைக்கான பயிற்சிப் பட்டறைகளை வடமாகாண விளையாட்டு மருத்துத்துறையின் ஒருங்கிணைப்பாளர், யாழ் போதனா வைத்தியசாலையின் விளையாட்டு மருத்துவ அலகின் பொறுப்பு வைத்திய நிபுணராகவும் செயற்பட்டேன்.

யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் நிறுவனத்தின் ஆலோசனைக்குழு உறுப்பினரும், ஜெய்ப்பூர் நோயாளிகளிற்கான வழிகாட்டலும் சிகிச்சை வழங்கியதோடு வடமாகாண வீதிப் பாதுகாப்பு சபைத் தலைவர், அதைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டது.

2014 முதல் 2021 வரை (நிரந்தர வைத்தியர் கடமையேற்கும் வரை) முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி வைத்தியசாலையில் மாதாந்த என்பு முறிவு சத்திரசிகிச்சை கிளினிக் மூலம் வருடந்தோறும் 4000 மேற்பட்ட நோயாளிகளுக்கான ஆலோசனைகளும் சிகிச்சைகளும் வழங்கப்பட்டது.

மேலும் இரத்ததான முகாங்கள் ஒழுங்கமைப்பு விளையாட்டு வீரர்கள், போதனாசிரியர்கள், பயிற்சியாளர்களுக்கான விளையாட்டு, பயிற்சி, உபாதைகளை தடுத்தல், சத்துணவு, முதலுதவி சம்மந்தமான கருத்தரங்குகள், பயிற்சிகள் வழங்கப்பட்டன.

தேசிய, சர்வதேச அளவிலான என்பியல் கருத்தரங்குகள், சத்திரசிகிச்சை பயிற்றுவிப்புக்கள், மற்றும் கல்வியூட்டல் நடவடிக்கைகளை மேற்கொண்டதோடு போதனா வைத்தியசாலையின் புனருத்தாபண அலகின் அமைப்பை உருவாக்கி அதனை செயற்படுத்தினோம். (Rehabilitation centre)

வைத்தியர், தாதிகளிற்கான அவசர மற்றும் அனர்த்த முகாமைத்துவ பயிற்சிகளும் செயலமர்வுகளை ஒழுங்கு படுத்தி நடாத்தியது (ATLS based training and disaster management drills).

விஞ்ஞான ஆராய்ச்சிக்கான ஆய்வுகளை வைத்தியசாலையில் மேற்கொள்வதற்கான அங்கிகரிக்கும் சபையை உருவாக்கி செயற்படுத்தினோம். (ethical review committee).

விளையாட்டு மருத்துவம், மற்றும் என்புமுறிவு சத்திரசிகிச்சை பட்டப்பின்படிப்பு ஆய்வு வாரியம் (Board of study) முறையே தலைவர், செயாலாளர் பதவி இலங்கை என்பு முறிவு வைத்திய சங்கத் தலைவர் (President of Srilanka Orthopaedic Association).

சர்வதேச சத்திரசிகிச்சை இலங்கை அத்தியாயத்தின் தலைவர் (President International College of Surgeons- Srilankan Chapter).

இலங்கை விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் விளையாட்டு உபாதைகள் தவிர்த்தல் சம்மந்தமான குழுவின் தலைவர்.

இலங்கை சுகாதார அமைச்சின் புனருத்தாரண அமைப்பின் ஆலோசகர் (Rehabilitation committee), விபத்து மற்றும் காயங்களின் தடுப்புக் குழு (Injury prevention committee).

மருத்துவ உபகரண, மருந்துகள் கட்டுப்பாட்டு அலகின் என்பு முறிவு தொடர்பான ஆலோசனைக்குழு உறுப்பினர் Member of NMRA committee for orthopaedic devices போன்ற பதவிகளில் என்னால் முடிந்த வரை பணியாற்றியுள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட சர்வ மத பேரவை
*Jaffna District Inter Religious Council*
යාපනය දිස්�ත්රි�ක් අන්තර්� ආගමි�ක සභාව

# மனிதப் புதைகுழிக்கு எதிர்ப்பு தெரிவித்து யாழ். மாவட்ட சர்வமத பேரவையின் கண்டன அறிக்கை!

யாழ்ப்பாணம் மாவட்ட சர்வமத பேரவையாக, செம்மணி மனித புதைகுழி அகழ்வாராய்ச்சி மூலம் அதிர்ச்சிக்குட்படுத்தியுள்ளது. வெளிப்பட்டுள்ள பேரவலம் எங்களை என்பதைக் குறிப்பிட்டு எமது கண்டனத்தைத் தெரிவிக்கிறோம் என யாழ்ப்பாணம் மாவட்ட சர்வமத பேரவையின் கண்டன அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, மனித வாழ்க்கை, எமது சமய விழுமியங்களின்படி, மாண்புமிக்கது. அதனை மதிப்புடன் நோக்குவதும் அறம் மைய ஆன்மிகத்துடன் வாழ்க்கையை வாழவேண்டும் என்பதை, இஸ்லாம், கிறிஸ்தவம், இந்து சமயம் மற்றும் பௌத்தம் தெளிவாக விளக்கியுள்ளது. அன்புடனும் நல்லெண்ணத்துடனும் வாழ வேண்டிய நாம், எம்மவரது எலும்புகளை செம்மணி உட்பட பல இடங்களிலும், மனித புதைகுழிகளிலிருந்து அகழ்ந்து எடுக்கிறோம் என்பது மிகமிக வேதனைக்குரியது.

இது கடவுளுக்கு எதிரான, சமய விழுமியங்களுக்கு எதிரான கொடுமையான செயல். இந்தக் கொடுமையுடன் தொடர்புபட்டவர்கள் அனைவரும் நீதியின் முன்கொண்டுவரப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் மன்றின் 46/1 தீர்மானத்தின்படி, இனப்படுகொலை, போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களைக், காலம் தாழ்த்தாது. விரைவாகச் சேகரிக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அழைப்புவிடுக்கிறோம்.

“காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், இந்த புதைகுழிகளுக்குள் எமது உறவுகள் உள்ளனரா?” எனும் கேள்வியை எழுப்புவதை சர்வதேச சமூகம், இலங்கையில் வாழ்வோர் அனைவரும் தெளிவாக செவிமடுத்து, அவர்களுக்கு நீதி கிடைக்க முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என வலியுறுத்துகிறோம். எமக்குத் தெரியவந்துள்ள அனைத்து மனித புதைகுழிகளையும் மீளப்பார்ப்பதும், சர்வதேச கண்காணிக்கப்புடன் அகழ்வாராய்ச்சி மிக வேகமாக நடைபெறவேண்டும்.

இனப்பிரச்சினை தீர்க்கப்பட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதும் இந்த விடயத்தைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு எடுத்துச் செல்ல உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என நாம் முன்மொழிகிறோம். நீதியில்லாமல் அமைதி இலங்கையில் மட்டுமல்ல எங்கும் சாத்தியமில்லை என்பதை இலங்கைக்கும், உலகிற்கும் வலியுறுத்த விரும்புகிறோம். இனம், சமயம், மொழி, நிறம்... எனும் அனைத்து வரையறைகளையும் கடந்து, இலங்கை உட்பட உலகெங்கும் பாதிக்கப்பட்டவர்கள் நிம்மதியாக வாழவும், எதிர்கால நம்பிக்கையை இன்று விதைக்கவும், கேவலமான மனித அழிப்பிலே ஈடுபட்டவர்களுடைய மனமாற்றம் தேவை என்பதை சமய விழுமியங்களின்படி வலியுறுத்துகிறோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.




# "அமெரிக்கா தீயை மூட்டியுள்ளது. ஆனால் தீயின் வேகத்தை கட்டுப்படுத்த முடியவில்லை":

## தனது அணு தளங்களில் மீதான அமெரிக்கத் தாக்குதலுக்கு பதிலடி கொடுப்போம் என ஈரான் அறிவிப்பு"

### உடைந்த எல்லை

ஈரானின் மூன்று அணுவாயுதத் தளங்கள் - ஃபோர்டோ, நத்தான்ஸ் மற்றும் இஸ்பஹான் - மீது அமெரிக்கா துல்லியமான வான் தாக்குதல்களை நடத்தியது. இந்த தாக்குதல்களை டொனால்ட் டிரம்ப், "அசத்தலான இராணுவ வெற்றி" என்றும், "ஈரானின் அணு திட்டத்தை முற்றாக அழித்துவிட்டோம்" என்றும் கூறினார். சில மணி நேரங்களுக்குள், ஈரானின் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்பாஸ் அராக்சி, இஸ்தான்புல்லில் OIC உச்சிமாநாட்டில் நிருபர்களிடம் தோன்றி, இந்த தாக்குதல்களை "தெளிவான ஆக்கிரமிப்பு", "அனைத்துலக சட்டம் மற்றும் UN சாசனத்தின் மீறல்" என்று கடுமையாகக் கண்டித்தார்.

### அன்றைய செய்தியாளர் மாநாடு - முழு விவரம்

ஜூன் 22, 2025 அன்று இஸ்தான்புல்லில் பேசிய அராக்சி, ஈரானின் கடும் கோபத்தை வெளிப்படுத்தினார்:

- இந்த தாக்குதல்களை "அவமானகரமானது" என்று குறிப்பிட்டு, "நிரந்தரமான பின்விளைவுகள்" இருக்கும் என்று எச்சரித்தார். "அமெரிக்கா மீறாத ஒரு எல்லை கோடுகூட எங்கும் இல்லை" என்று அவர் கூறினார்.
- தற்காப்பு நியாயப்படுத்தல்களை நிராகரித்து, இந்த தாக்குதல்கள் "பிராந்தியத்தின் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையைக் குலைத்தது" என்றும், "காட்டு விதிகளின் மனோபாவத்தை ஊக்குவித்தது" என்றும் குற்றம் சாட்டினார்.
- ஈரான் சட்டரீதியான, இராஜதந்திர மற்றும் இராணுவ வழிகளில் நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்தார். இதில் UN பாதுகாப்பு சபைக்கு புகார், IAEA இன் இயக்குநருக்கு பொறுப்பு கேட்பது, மற்றும் தற்காப்பு உரிமையை பேணுதல் ஆகியவை அடங்கும்.
- முன்னர் அமெரிக்கா மற்றும் EU உடன் நடந்த பேச்சுவார்த்தைகள் இந்த தாக்குதல்களால் "வெடிக்கப்பட்டன" என்று குறிப்பிட்டார்:
- "நாங்கள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தபோது, இஸ்ரேல் அந்த இராஜதந்திரத்தை இல்லாமற் செய்தது. இந்த வாரம், ஐரோப்பிய யூனியன் உடன் பேச்சுவார்த்தை நடந்தபோது, அமெரிக்கா அதைத் தகர்த்துவிட்டது. இதிலிருந்து என்ன முடிவு செய்வீர்கள்?"
- UN பாதுகாப்பு சபை, செயலாளர்-ஜெனரல் குட்டெர்ஸ் மற்றும் அனைத்துலக அமைப்புகள், இந்த "பொறுப்பற்ற மற்றும் சட்டவிரோத செயலுக்கு" தடை விதிக்கத் தவறியதற்கு கடுமையாகக் கண்டித்தார்.
- IAEA-வை உளவு நிறுவனம் என்று குற்றம் சாட்டி, "அமெரிக்கா இதன் விளைவுகளை ஏற்க வேண்டும்" என்று எச்சரித்தார்.

### முக்கிய பகுப்பாய்வு ரூ தாக்கங்கள்

### இராஜதந்திரம் சாகடிக்கப்பட்டது

இந்த தாக்குதல்கள் ஜெனீவாவில் நடந்த ஐரோப்பிய யூனியன் உடனான பேச்சுவார்த்தைகளை முறித்துவிட்டன. அராக்சியின் குற்றச்சாட்டு - அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இராஜதந்திரத்தைக் குலைத்தது - நம்பிக்கையின் முறிவை உறுதிப்படுத்துகிறது.

### வெளிப்படையான போருக்கு திரும்புதல்

சில மணி நேரங்களுக்குள், ஈரான் இஸ்ரேலின் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது, தெல் அவீவ் மற்றும் ஹைஃபாவில் பலர் காயமடைந்தனர். ஹெஸ்புல்லா மற்றும் ஹூதி பிராக்ஸிகள் போருக்கு தயாராகின்றன. இது மறைமுகப் போரிலிருந்து வெளிப்படையான மோதலுக்கு மாற்றம் என்பதைக் காட்டுகிறது.

### சட்டரீதியான மிகப்பெரிய மீறல்

அராக்சி இந்த தாக்குதல்களை "UN சாசனம் மற்றும் NPT-யின் மோசமான மீறல்" என்று குறிப்பிட்டார். ஆனால் அமெரிக்கா, "தடுப்பு தாக்குதல்" என்று நியாயப்படுத்தியது.

### ஈரானில் தேசிய ஒற்றுமை

உள் குழப்பங்கள் இருந்தபோதிலும், காமெனி மற்றும் IRGC தளபதிகள் "அளவான பதிலடி" கொடுக்க ஒப்புக்கொண்டனர்.

### டிரம்பின் அதிக ஆபத்து கொண்ட தந்திரம்

இந்த தாக்குதல் நுரு பேச்சுவார்த்தைகளை குலைக்கவும், டிரம்பின் கடுமையான வெளி விவகாரக் கொள்கை படத்தை வலுப்படுத்தவும் உதவியது. ஆனால் காங்கிரஸைத் தவிர்த்ததற்காக வாஷிங்டனில் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது.

### உலக வர்த்தக அதிர்வுகள்

எண்ணெய் விலை $110/பாரர்ல் ஐத் தாண்டியது. கலப்பகுதி "போர் ஆபத்து மண்டலம்" என அறிவிக்கப்பட்டது. IMF, எண்ணெய் மற்றும் உணவு விலை உயர்வு குறித்து எச்சரித்துள்ளது.




அன்றைய செய்தியாளர் மாநாடு ஒரு திருப்புமுனை "இராஜதந்திரம் எரிந்தது, ஏவுகணைகள் விடப்பட்டன, உலக சட்ட ஒழுங்கு சவாலுக்கு உள்ளானது. அராக்சி எச்சரித்தது போல், "அமெரிக்கா கட்டுப்படுத்த முடியாத தீயை மூட்டிவிட்டது."

அடுத்த 72 மணி நேரம், இந்த மோதல் முழு அளவிலான போராக மாறுமா என்பதை தீர்மானிக்கும்.

**- ஈழத்து நிலவன் - 22-06-2025**



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தேசியத்திற்கு எல்லை வேலி போடுவதை விட தேசியத்திற்குள்ளேயே இருக்கவுள்ளோர் யார் என்ற கேள்வியே முக்கியமானது என்கிறார் ஆறு திருமுருகன்!

தமிழ்த் தேசியத்திற்கு எல்லை வேலி போடுவதை விட எமது தமிழ்த் தேசியத்திற்குள்ளேயே இருக்கவுள்ளோர் யார் என்ற கேள்வியே முக்கியமானது என்று உறுதிபடத் தெரிவித்தார் சமூகச் செயற்பாட்டாளரும் மக்கள் பணியாளரும் பேச்சாளருமான திரு. ஆறு திருமுருகன்!

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் நிறுவுனர் நினைவு தானமும் பரிசளிப்பு விழாவும் செவ்வாய்க்கிழமை 24ம் திகதி அன்று நடைபெற்ற நிலையில் இந் நிகழ்வில் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கிய சந்தர்ப்பத்திலே அவர் அங்கு உரையாற்றினார்.

இன்று தேசியம், தமிழ்த் தேசியம் மற்றும் சுதேசியம் ஆகிய சொற்களெல்லாம் அரசியல்வாதிகளிடத்தே அடிக்கடி நடமாடினாலும் மகாஜனாக் கல்லூரி ஸ்தாபகர் பாவலர் துரையப்பா பிள்ளை அவர்கள் இந்த மண்ணிலே பிறந்த நாங்கள் ஏன் சுதேசியத்தைப் பாதுகாக்கக்கூடாது அதைப்பற்றி பேசக் கூடாது என்று அன்றே அடியெடுத்துக்கொடுத்தவர். அதனாலேயே அவரது சிலையின் பெயர்ப்பலகையில் சுதேசியக் கவிஞன் என்ற பதம் பெயருடன் இணைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக 55000 குடும்பம் இருந்த காரைநகரில் தற்போது 5000 குடும்பங்களே உள்ளது. மலையகத் தமிழர்கள் கஸ்டப்பட்டாலும் யாழ்ப்பாணத்தில் வந்து குடியேற குடியேற மறுக்கின்றனர்.

அவர்களுடன் பேசிய போது 1977ம் ஆண்டிலே கிளிநொச்சியிலே எமது பிள்ளைகள் போராட்டத்தில் பங்குபற்றி பலர் இறந்து விட்டார்களெனவும் இன்றும் தாம் நிர்க்கதியாக வாழ்வதாகவும் தெரிவித்தனர்.

இதைவிட மலையகத் தமிழர்கள் இலங்கைக்கு அடிமையாக வந்து 200 வருடங்கள் கொண்டாடப்படுகின்றது.

10 இலட்சம் தமிழர்களை ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தத்தில் இந்தியாவிற்கு அனுப்பிய போது யாழ்ப்பாணத்தில் தமிழர்கள் உண்ணாவிரதம் செய்தார்கள், ஆர்ப்பாட்டம் செய்தார்கள், தாங்கள் நிலம் தருகின்றோம் வாருங்கள் என மறித்தனர். ஆனால் தலைமன்னாரிலே கூடாரங்களை விரித்து விட்டு இராமானுயம் கப்பலில் அனுப்பும் போது எங்கே உங்கள் தமிழ் உணர்வு என்று கேட்கின்றனர்.



பாவமும் பழியும் நாங்கள் தேடியதால் இன்று எம் இனம் வற்றிக்கொண்டு போகின்றது. உயர்தரப் பிரிவு கற்கும் எதிர்காலச் சந்ததியிடம் இலட்சியம் பற்றி வினாவினால் ஒரு தடவை உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி பெறுபேறு சாதகமாக அமைந்தால் பல்கலைக்கழகம் இல்லையாயின் வெளிநாடு என்பதே இன்று வாய்ப்பாடாகக் காணப்படுகின்றது.

நிறைய மேல்வீடுகள் யாழ்ப்பாணத்தில் கட்டப்பட்டுக்கொண்டிருந்தாலும் மேல்வீட்டிலும் கீழ்வீட்டிலும் யாருமற்ற நிலையில் பூட்டிவிட்டு சாவியை எடுத்துச் செல்கின்றனர்.

எனவே தான் அரசியல்வாதிகளோ சான்றோர்களோ இதற்கு அடுத்த கட்டப் பரிகாரம் என்ன என்பது பற்றி நாளும் பொழுதும் பிரசாரம் செய்து பாதுகாக்க வேண்டும்.

நாங்கள் தேசியத்திற்கு எல்லை வேலி போடுவதை விட தேசியத்திற்குள் இருக்கவுள்ளோர் யார்? அவர்களை எப்படி அதிகரிக்கலாம்? என்பதைப்பற்றிச் சிந்தித்து அதனைச் சிந்திக்கின்ற சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் எனத் தெரிவித்தார்.

# யாழ்ப்பார மாவட்ட அரச அதிபராக பிரதீபன் சம்பிரதாயபூர்வமக பொறுப்பேற்பு!



யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபராக மருதலிங்கம் பிரதீபன் அவர்கள் செவ்வாய்க்கிழமை 24ம் திகதி அன்றையதினம் சம்பிரதாயபூர்வமக பொறுப்பேற்றுக்கொண்ட நிலையில் அவருக்கு சக ஊழியர்களால் சிறப்பு வரவேற்பும் அளிக்கப்பட்டது.

குறித்த பதவியேற்பு நிகழ்வு யாழ் மாவட்ட செயலகத்தில் மேலதிக மாவட்ட அரச அதிபர் ஸ்ரீமோகன் தலைமையில் மதத் தலைவர்கள், மாவட்ட செயலக ஊழியர்கள், பிரதேச சபையின் செயலர்கள், மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பல்துறைசார் பொறுப்பு நிலை அதிகாரிகள் பிரசன்னத்துடன் நடைபெற்றது.

முன்பதாக மாவட்ட செயலகத்துக்கு தனது பாரியாருடன் வருகைதந்த மாவட்ட செயலாளரை, மேலதிக மாவட்ட அரச அதிபர் ஸ்ரீமோகன் கைலாகு கொடுத்து மாலை அணிவித்து வரவேற்றிருந்தார்.

அதைத்தொடர்ந்து சக ஊழியர்களால் வரவேற்கப்பட்ட அரச அதிபர் பிரதீபன் மாவட்ட செயலரின் அதிகாரபூர்வ அலுவலகத்தில் கடமைகளை பொறுப்பேற்றிருந்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பல மாதங்களாக மாவட்ட அரச அதிபர் வெற்றிடம் இருந்துவந்த நிலையில் பதில் அரச அதிபராக கடமையாற்றிவந்த ம.பிரதீபன் சில தினங்களுக்கு முன்னர் யாழ் மாவட்டத்தின் நிரந்தர அரச அதிபராக நியமிக்கப்பட்டிருந்தார்.

அமைச்சரவை அனுமதியின் பிரகாரம் நியமிக்கப்பட்ட பிரதீபனுக்கான நியமனக் கடிதம் கடந்த 20.06.2025 அன்று அமைச்சரவை செயலாளர் திரு. W.M.D.J. பெர்னாண்டோ அவர்களினால் நியமனக் கடிதத்தை பெற்றிருந்தார்.

இன்நிலையில் 24ம் திகதி அன்றையதினம் கடமையை பொறுப்பேற்ற நிலையில் சக ஊழியர்களால் சிறப்பு வரவேற்பளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது

இதே நேரம் ம.பிரதீபன் 2024 மார்ச் 09 ம் திகதி முதல் யாழ்ப்பாண மாவட்டத்தின் பதில் அரசாங்க அதிபராக கடமையாற்றி வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.





# இலங்கை அரசாங்கத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பரிந்துரைக்க பிரித்தானியாவிடம் கோரிக்கை



வடக்கில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழிகளால் தாங்கள் மிகவும் மன உளைச்சலுக்குள்ளாகியுள்ளதாக, காணாமல் ஆக்கப்பட்ட தமது அன்புக்குரியவர்களைத் தேடும், யாழ்ப்பாண மாவட்ட போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் தாய்மார்கள், இலங்கையில் உள்ள பிரித்தானிய உயர் ஸ்தானிகரிடம் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தினர் மற்றும் இலங்கையில் உள்ள பிரித்தானிய உயர் ஸ்தானிகர் அன்ரூ பெட்ரிக் ஆகியோருக்கு இடையில், கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சந்திப்பில், இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட அண்மைய பாரிய மனித புதைகுழியின் அகழ்வுப்பணிகளில் சர்வதேச தலையீடு தேவை என வலியுறுத்தியுள்ளனர்.

“எங்கள் பகுதியில் அடிக்கடி காணப்படும் புதைகுழிகள் பற்றி அறியும்போது நாங்கள் மன அழுத்தத்தில் இருக்கிறோம். இந்த புதைகுழிகள் அகழ்வாராய்ச்சி சர்வதேச விதிகள் மற்றும் விதிமுறைகளின்படியும், சர்வதேச சமூகத்தின் மேற்பார்வையின் கீழும் செய்யப்பட வேண்டும்.”

செம்மணியில் உள்ள சித்துபாத்தி மனித புதைகுழியின் அகழ்வுப்பணிகள், நிதி பற்றாக்குறை காரணமாக 7ஆம் திகதி தற்காலிகமாக நிறுத்தப்பட்டபோது, 19 பேரின் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டிருந்தன.

இந்த எலும்புக்கூடுகளில் 10 மாதங்களுக்கும் குறைவான மூன்று குழந்தைகளின் எலும்புக்கூடுகளும் இருந்ததாக அகழ்வாராய்ச்சிக்கு தலைமை தாங்கும் தடயவியல் தொல்பொருள் ஆய்வாளர் பேராசிரியர் ராஜ் சோமதேவ சர்வதேச ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

தற்போதைய பணிகளுக்கான நிதிக்கான நிபுணர்களின் கோரிக்கையை அரசாங்கம் பெற்றுள்ளதாக நீதி அமைச்சர் ஹர்‘ன நாணாயக்கார நாடாளுமன்றத்தில் உறுதிப்படுத்தினார்.

சந்திப்பின் பின்னர், தமது கோரிக்கைகள் அடங்கிய ஒரு கடிதத்தை, இலங்கையில் உள்ள பிரித்தானிய உயர் ஸ்தானிகரிடம், யாழ்ப்பாண மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் செயலாளர் லீலாதேவி ஆனந்தநடராஜா கையளித்தார்.

அந்தக் கடிதத்தில், இலங்கையில் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதிகள் போர்க்குற்றங்களில் குற்றம் சாட்டப்பட்ட இராணுவ அதிகாரிகளை தண்டிக்கமாட்டோம் எனக் குறிப்பிடுவதாகவும், சட்டமா அதிபர் திணைக்களம் உள்ளிட்ட சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாக்க வேண்டிய நிறுவனங்கள் தமிழ் இனப்படுகொலையைச் செய்தவர்களின் பாதுகாப்பிற்கு துணை நிற்பதாகவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்திடம் சரணடைந்த அல்லது ஒப்படைக்கப்பட்ட நமது அன்புக்குரியவர்களின் கதியை விசாரித்து வெளிப்படுத்த அழுத்தம் கொடுக்கப்பட வேண்டுமென குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதோடு, அந்த நேரத்தில் முக்கிய சோதனைச் சாவடிகளுக்குப் பொறுப்பாக இருந்த தளபதிகளை விசாரிப்பதன் மூலம் இதைச் செய்ய வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் குறைகள் மற்றும் நீதிக்கான தொடர்ச்சியான போராட்டம் குறித்து கேட்டறிந்ததாக அன்ரூ பெட்ரிக் சமூக ஊடகங்களில் பதிவிட்டுள்ளார்.

போர்க்குற்றங்களின் அடிப்படையில் மனித உரிமை மீறல்களுக்கு இலங்கையின் பொறுப்புக்கூறல் குறித்து 2015 இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜெனீவா தீர்மானத்தை இணைந்து எழுதிய ஐந்து நாடுகளில் பிரித்தானியாவும் ஒன்றாகும்.

எதிர்வரும் செப்டெம்பரில் நடைபெறவுள்ள ஜெனீவா அமர்வில் கொண்டுவரப்படவுள்ள ஒரு தீர்மானத்தின் மூலம் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பரிந்துரைக்க வேண்டும் என பிரித்தானிய உயர்ஸ்தானிகரிடம் கையளிக்கப்பட்ட கடிதத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இனப்படுகொலை நடைபெற்ற சில நாடுகளில் குற்றவாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதைப் போலவே, இலங்கையில் தமிழ் சமூகத்திற்கு நீதியை உறுதி செய்ய சர்வதேச சமூகம் முன்வர வேண்டுமென வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் செயலாளர் லீலாதேவி ஆனந்த நடராஜா குறிப்பிடுகின்றார்.

ஐக்கிய நாடுகள் சபையால் நிறுவப்பட்ட இலங்கை பொறுப்புக்கூறல் திட்டம் (SLAP) சேகரித்த ஆதாரங்களைப் பயன்படுத்தி அவ்வாறு செய்ய வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அழைப்பு விடுக்கின்றனர்.

“தீர்மானம் 46/1 இன் கீழ், இலங்கை பொறுப்புக்கூறல் திட்டம் (SLAP) நம்பகமான ஆதாரங்களை சேகரித்து ஆவணப்படுத்தியுள்ளது மற்றும் வலுவான அறிக்கைகளை வெளியிட்டுள்ளது. இதன் அடிப்படையில், ஒரு புதிய நீதி பொறிமுறையை நிறுவி, செப்டம்பர் 2025 இல் நடைபெறவிருக்கும் மனித உரிமைகள் கவுன்சிலின் 60வது அமர்வில் ஒரு தீர்மானமாக தாக்கல் செய்ய வேண்டும். இலங்கையை சர்வதேச நீதிமன்றுக்கு (ICC) முன் கொண்டுவருவதற்கான இந்த முயற்சியை அனைத்து நாடுகளும் ஆதரித்து ஊக்குவிக்க வேண்டும்.”

இலங்கை பொறுப்புக்கூறல் திட்டத்தை கடுமையாக எதிர்க்கும் இலங்கை அரசாங்கம், உள்நாட்டு நீதித்துறை அமைப்பு பொறுப்புக்கூறல் தொடர்பான நடவடிக்கைகளை எடுக்க வல்லது எனக் கூறுகிறது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# கண் பார்வை அற்றவர்களுக்குரிய மேம்படுத்திய வெள்ளைப் பிரம்பை கண்டுபிடித்த வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவர்கள்



கண் பார்வை அற்றவர்கள் பயன்படுத்தும் மேம்படுத்திய வெள்ளைப் பிரம்பை கண்டுபிடித்த வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தை சேர்ந்த மாணவர்கள் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்களை ஆளுநர் செயலகத்தில் 23ம் திகதி அன்று திங்கட்கிழமை சந்தித்து தமது புத்தாக்கம் தொடர்பில் தெரியப்படுத்தினர்.

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தை சேர்ந்த லின்டன் ஜெனிஸ் அறோன் அஜேய் மற்றும் திருச்செல்வம் செர்வின் ஆகிய தரம் எட்டில் கற்கும் மாணவர்களே மேற்கொண்டனர்.

கண் பார்வையற்றவர்கள் பயன்படுத்தும் வெள்ளைப் பிரம்பை இலத்திரனியல் உபகரணங்களை கொண்டு பல்வேறுபட்ட வசதிகளை மேம்படுத்தி அவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில் இக்கண்டுபிடிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த கண்டுபிடிப்பானது எதிர்காலத்தில் சட்ட விதிமுறைகளுக்கு அமைய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு எதிர்காலத்தில் கண்பார்வையற்றவர்களுக்கு விநியோகிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருக்கிறன.

இந்த மாணவர்களின் கண்டுபிடிப்பு தொடர்பில் கண் மருத்துவ சத்திர சிகிச்சை நிபுணர் மருத்துவர்.மு.மலரவன் தெரிவிக்கையில் வவுனியா பல்கலைக்கழகத்தின் வழிகாட்டுதலுக்கு அமைய மாணவர்களின் கண்டுபிடிப்பை பதிவு செய்வதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுவதற்கு உதவ தயார் என தெரிவித்தார்.

இயலாமைக்கு உள்ளானவர்களுக்கான தேசிய சபை அங்கத்தவர் வெ. சுப்பிரமணியம் கருத்து தெரிவிக்கையில், கண்டுபிடிக்கபட்ட கருவியில் இன்னும் சிறிய மேம்படுத்தவேண்டிய செயல்பாடு உள்ளது என்றும், அதனை நிவர்த்தி செய்து பயன்பாட்டிற்கு வந்தால் விழிப்புலன் அற்றவர்களுக்கு மிகவும் உதவியாக அமையும் எனகூறினார்.

இம் மாணவர்கள் இருவரையும் ஆளுநர் வாழ்த்தியதோடு இவ்வாறான புத்தாக்க கண்டுபிடிப்புகள் எமது மாணவர்கள் மத்தியில் இருந்து இன்னும் பல தோற்றம் பெறவேண்டும். அவை எமது மக்களுக்கு பயன்படக்கூடிய வகையில் உருவாக்கப்பட வேண்டும். என கோரிக்கை விடுத்ததோடு, இம்மானவர்கள் மேலும் இதனை மேம்படுத்தி கண்பார்வை அற்றவர்களுக்கு வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆதரவு அளிப்போம் எனவும் தெரிவித்தார்.

# மின் மற்றும் இலத்திரனியல் கழிவு சேகரிப்பு வாரம், கிளிநொச்சியில் ஆரம்பித்து வைக்கப்பெற்றது!





மின் மற்றும் இலத்திரனியல் கழிவு சேகரிப்பு வாரம் - 23ம் திகதி அன்று திங்கட்கிழமை கிளிநொச்சியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வடமாகாண அலுவலகத்தின் ஏற்பாட்டில், கரைச்சி பிரதேச சபையில் குறித்த நிகழ்வு நடைபெற்றது.

“சுற்றாடல் எம்மைக் காக்கும் நாம் சுற்றாடலைக் காப்போம்” எனும் தொனிப்பொருளில் 23.06.2025ம் திகதி தொடக்கம் 27.06.2025ம் திகதி வரை வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந் நிலையில் அன்று காலை 9.30 மணிக்கு இலத்திரனியல் மற்றும் மின்கழிவு சேகரிப்பு நிகழ்வு கரைச்சி பிரதேச சபையில் இடம்பெறறது.

நிகழ்வை கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் அவர்கள் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வட மாகாண




பணிப்பாளர் R.M. Jaltota அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன், கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி திணைக்களத்தின் உள்ளூராட்சி உதவியாளர் மணிமேகலை, கரைச்சி பிரதேச சபை செயலாளர் த.ஞானராஜ் மற்றும் துறை சார்ந்த திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.


Thana Insurance Inc

T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker

THANA INSURANCE Inc.



Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road ,
unit D218,
Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100%
ONLINE SERVICES,24/7."

# ஈரானில் ரஷ்யா மற்றும் சீன வகிபாகம்!

## - ஐங்கரன் விக்கினேஸ்வரா




(மத்திய கிழக்கின் வரலாற்று பகைமையாக கருதப்படும் இஸ்ரேல் - ஈரான் இடையேயான தொடரும் போரினால் உலகளாவிய எண்ணெய் விலை உயர்வு அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இப்போரின் நிலை எதிர்வரும் நாட்களில் மாறினாலும், எண்ணெய் வளத்தை நோக்கிய மேற்குலக பொருளாதார ஆதிக்கம் தொடரவே உள்ளது)

ஈரானை நிபந்தனையின்றி சரணடையுமாறு அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அழைப்பு விடுத்த போதிலும், இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையே பரஸ்பரம் ஏவுகணைத் தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இந்த போரில் மிகப்பெரிய திருப்பம் ஏற்படும் வகையில் அமெரிக்கா நேரடியாக தலையிட சாத்தியம் உள்ளது.

டிரம்ப் ஈரானை தாக்கும் திட்டங்களுக்கு ஒப்புதல் முதலில் அளித்துள்ள போதிலும், இந்நிலையில் இருந்து பின்வாங்கியுள்ளார். தற்போது ஈரான் நாட்டைத் தாக்கலாமா வேண்டாமா என்பது குறித்து இறுதியான தீர்க்கமான முடிவை அடுத்த இரண்டு வாரங்களுக்குள் எடுப்பேன் என்று டிரம்ப் தெரிவித்துள்ளார்.

ஆனாலும் இரு நாடுகளுக்கும் இடையிலான ஏவுகணை மோதல் தொடர்ந்து நீடித்து வருகிறது.

### மத்திய கிழக்கில் ரஷ்யாவின் இழப்பு:

ஈரான் இஸ்ரேலுடனான மோதலால் மத்திய கிழக்கில் மற்றொரு அரசியல் - பொருளாதார இழப்பு ரஷ்யாவுக்கு ஏற்படும் என்று கருதுகிறது. இஸ்ரேல் ஆபரேஷன் ரைசிங் லயனைத் தொடங்கிய போது, ரஷ்யா வெறுமனே மத்திய கிழக்கு ஆபத்தான போரை நோக்கி செல்கிறது என்று மட்டுமே விவரித்தது.

நீண்ட கால ஈரானுடனான தனது அரசியல் - இராணுவ உறவு முடிவுக்கு வருகிறதோ என மாஸ்கோ கருத வேண்டிய அவசியமும் உள்ளது. இப் போரில் உடனடியாக மாஸ்கோ அரசு ஈரானுக்கு இராணுவ உதவி செய்ய வரவில்லை. இருப்பினும், ரஷ்ய ஊடகங்கள் மாஸ்கோ அரசின் உதவியின் அவசியத்தை வலியுறுத்தி வருகின்றன.

இருப்பினும் மோதலில் மத்தியஸ்தம் செய்ய கிரெம்ளினின் முன்மொழிவு ஏற்றுக்கொள்ளப்பட சாத்தியங்கள் குறைவாகவே உள்ளன. உக்ரைனில் போர் நடவடிக்கைகள் தொடர்கின்ற போதிலும், ரஷ்யா மத்திய கிழக்கில் ஒரு முக்கிய பங்காளியாகவும், அமைதியை நிலைநாட்டுபவராகவும் தன்னைக் காட்டிக் கொள்ள முடிவதாக மேற்குலக நாடுகள் கருதுகின்றன.

எவ்வாறாயினும் இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கை நீண்ட காலம் நீடிக்கும் போது, தற்போதைய நிகழ்வுகளிலிருந்து ர்'யா நிறைய இழக்க நேரிடும் என்பதை மறுக்க முடியாது.

### ரஷ்ய - ஈரானிய இராணுவ உறவு?

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினும், ஈரான் ஜனாதிபதி மசூத் பெஷேஷ்கியனும் கடந்த ஜனவரி 17, 2025 அன்று மாஸ்கோவில் உள்ள கிரெம்ளினில் நடந்த பேச்சுவார்த்தைக்குப் பிறகு மூலோபாய நல்லுறவு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். ரஷ்ய - ஈரானிய மூலோபாய கூட்டாண்மை ஒப்பந்தம் ஆனது இராணுவ உறவை வலுப்படுத்த உதவும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ், இந்த ஒப்பந்தம் "பிராந்திய மற்றும் உலக மட்டங்களில் அமைதி மற்றும் பாதுகாப்பின் நலன்களுக்காக ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவதற்கும், பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு குறித்த மாஸ்கோ மற்றும் தெஹ்ரானின் நெருக்கமான ஒத்துழைப்புக்கான விருப்பத்திற்கும் சிறப்பு கவனம் செலுத்தியது" என்று தெரிவித்தார்.

ஐந்து மாதங்களுக்கு முன்பு ஒரு விரிவான மூலோபாய கூட்டாண்மையில் கையெழுத்திட்ட ஒரு நாட்டின் மீது இஸ்ரேல் நடத்திய ஒரு பெரிய தாக்குதலை ரஷ்யாவால் தடுக்க முடியவில்லை என்பது உண்மைதான். இந்த விஷயத்தில் ரஷ்யாவின் வெளியுறவுக் கொள்கையில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் தான் காரணம் என்று கூறப்படுகிறது.

ஏனெனில் இஸ்ரேலைக் கண்டிக்கும் அரசியல் அறிக்கைகளுக்கு அப்பால் செல்ல மாஸ்கோ தயாராக இல்லை என்பது தெளிவாகிறது. உண்மையில் உடனடியாக ஈரானுக்கு இராணுவ உதவி வழங்க ரஷ்யா தயாராக இல்லை என்பது தெளிவாக தெரிகிறது.

### சீனாவின் மத்திய கிழக்கு இராஜதந்திரம்:

இஸ்ரேல் - ஈரான் போர் தொடங்க முன், பெய்ஜிங்கின் மத்திய கிழக்கு இராஜதந்திரம் இது வரையில் திடமாகவே இருந்தது.

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் 2023 இல் அப்போதைய ஈரானிய ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியை பெய்ஜிங்கிற்கு வரவேற்று, சீனா ஈரானுடனான தனது உறவை வளர்க்க முயன்றார்.

2023 ஆம் ஆண்டில் பிராந்திய எதிரிகளான ஈரான் மற்றும் சவுதி அரேபியா இடையே நல்லிணக்கத்தை வெற்றிகரமாக மத்தியஸ்தம் செய்தது. தற்போது இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையில் அதிகரித்து வரும் மோதலில் அமைதியை ஏற்படுத்தத் தயாராக இருப்பதாகவும் பெய்ஜிங் கூறியுள்ளது.

இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையே போர் வெடித்தன் காரணமாக பெய்ஜிங்கின் ராஜதந்திர நிலைப்பாடு ஈரான் சார்பாகவே இருந்திருக்க வேண்டும். பொருளாதார இராணுவ ரீதியிலான உறுவுகளை பேணும் வகையில் ஈரான் அரசுக்கு சீனாவின் ஆதரவு தேவை உள்ளது. ஆனால் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் விரைவில் மோதலைத் தணிக்க அழைப்பு விடுத்தார்.

### சீனாவின் மூலோபாய பங்காளியான ஈரான்:

பெய்ஜிங் பாருளாதார ரீதியாக தெஹ்ரானுக்கு மிக நெருக்கமான உறவில் உள்ளது. முக்கியமாக ஈரானின் எரிசக்தி வளங்கள் காரணமாக, சீனாவின் மூலோபாய பங்காளியாக ஈரான் விளங்குகிறது.

சீனா இதுவரை ஈரானிய எண்ணெயை அதிகம் இறக்குமதி செய்யும் நாடாகும். ஈரான் உட்பட வளைகுடா நாடுகளின் பெரும்பாலான எண்ணெய் ஏற்றுமதிகள், ஹார்முஸ் ஜலசந்தியின் வழியாகவே செல்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஜலசந்தி மூடப்பட்டால், அது சீனாவில் பெரிய பொருளாதார தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சாத்தியங்கள் உள்ளன.

அண்மைக் காலங்களில் சர்வதேச அரங்கில் இராஜதந்திர செல்வாக்குடன் கூடிய வல்லரசாக சீனா தன்னைக் காட்டிக் கொள்ள விரும்புகிறது. அமெரிக்காவிற்கு மாற்றாக ஒரு மத்தியஸ்தராகச் செயல்படும் திறன் கொண்டதாக சீனா முயல்கிறது. ஆனால் தற்போதைய மோதல் அதன் சர்வதேச செல்வாக்கின் வரம்புகளை மீறி வர முடியாது என்பதை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

### பெண்டகன் போருக்கு தயார்?

ஈரானில் தொடரும் போர் சிலவேளைகளில் பெரும் போராக உருவெடுத்து பல நாடுகளுக்கும் பரவி செல்லவும் வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. காரணம் ஈரானை காப்பாற்ற துருக்கி, ரஷ்யா, சீனா உள்ளிட்ட நாடுகள் அரை மனதோடு நிற்கிறார்கள். இந்த நாடுகளின் கொள்கை மாறினால் போர் சர்வதேச அளவில் வளர்கின்ற நிலைக்கு ஏற்படும்.

டிரம்ப் முதலில் ஈரானை தாக்க ஒப்புதல் வழங்க தயங்கினாலும், ஈரானின் அணுசக்தி தளங்களை குறிவைத்து தாக்கத் தயார் என கூறியுள்ளார். பெண்டகன் போருக்கு தயாராகிறது என்பது தெளிவாக தெரிகிறது. அதனாலேயே ஈரான் நிபந்தனை இல்லாமல் சரணடைய வேண்டும் என வலியுறுத்தினர்.

இதற்கு ஈரான் உயர் தலைவரான அயத்துல்லா காமேனி கடுமையாக எதிர்ப்பு தெரிவித்து, "பதிலளிக்க முடியாத விளைவுகள் ஏற்படும்" என எச்சரிக்கை விடுத்தார். ஈரானில் இதுவரை 450 பேர் இஸ்ரேல் வான்வீச்சில் உயிரிழந்துள்ளனர். 24 இஸ்ரேலியர்கள் பதிலடி தாக்குதல்களில் பலியாகியுள்ளனர். போரின் விளிம்பில் உலகம் முழுவதும் தள்ளப்பட்டு உள்ளது.

### இரு வாரத்தில் முடிவு!

டிரம்ப் ஈரானை தாக்கும் திட்டங்களுக்கு முன்பு ஒப்புதல் அளித்தாலும், ஈரான் நாட்டைத் தாக்கலாமா வேண்டாமா என்பது குறித்து இறுதி முடிவை அடுத்த இரண்டு வாரங்களுக்குள் ஒரு தீர்க்கமான முடிவை எடுப்பேன் என்று தெரிவித்துள்ளார்.

ஆரம்பத்தில் ஈரான் தனது அணுசக்தி திட்டத்தை கைவிட ஒப்புக்கொண்டால் அமெரிக்க ஜனாதிபதி தாக்குதல்களைத் தொடங்குவதைத் தவிர்த்து வந்ததாக மூத்த உளவுத்துறை தெரிவித்தார்.

தற்போது ஈரானில் உள்ள நிலத்தடி யுரேனியம் செறிவூட்டல் நிலையமான ஃபோர்டோ மீது அமெரிக்கா தாக்குதல் நடத்துவது குறித்து டிரம்ப் பரிசீலித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

மத்திய கிழக்கின் வரலாற்று பகைமையாக கருதப்படும் இஸ்ரேல் - ஈரான் இடையேயான தொடரும் போரினால் உலகளாவிய எண்ணெய் விலை உயர்வு அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இப்போரின் நிலை எதிர்வரும் நாட்களில் மாறினாலும், எண்ணெய் வளத்தை நோக்கிய மேற்குலக பொருளாதார ஆதிக்கம் தொடரவே உள்ளது.









# யாழ்ப்பாண மாவட்டத்திற்கான 1000 மில்லியன் ரூபாவிலான வீதி அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் ஆரம்ப நிகழ்வு!

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்



யாழ்ப்பாண மாவட்டத்திற்கான 1000 மில்லியன் ரூபாவிலான வீதி அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் ஆரம்ப நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானங்கள் சேவைகள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் யாழ்ப்பாண மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வீதி அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் முதற்கட்ட புனரமைப்பு வேலைகள் 21.06.2025 அன்றையதினம் தெல்லிப்பளை காங்கேசன்துறை கல்லூரி வீதியின் புனரமைப்பு மற்றும் பருத்தித்துறை மூன்றாம் வீதியின் புனரமைப்பு வேலைகளுடன் ஆரம்பமாகியது.

அந்த வகையில் காங்கேசன்துறை கல்லூரி வீதியின் புனரமைப்பு பணியின் ஆரம்ப நிகழ்வு கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரும் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகரின் தலைமையில் ஆரம்பமாகியது.

இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சண்முகநாதன் சிறிபவானந்தராஜா, போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு. ஜீவநாதன் அவர்கள், அரசாங்க அதிபர் திரு. மருதலிங்கம் பிரதீபன் அவர்கள், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வடமாகாண பணிப்பாளர் திரு. குருஸ், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.






# யாழ்ப்பாணத்தில் பாவனைக்கு உதவாத சத்துமாவினை வழங்கிய தொண்டு நிறுவனம்!

21ம் திகதி சனிக்கிழமை அன்றையதினம் யாழ்ப்பாணம் - உரும்பிராய் பகுதியில் 20 சிறார்களுக்கு சத்துமா வழங்கப்பட்டது. இந்த சத்துமாவானது யாழ்ப்பாணத்தில் உள்ள தொண்டு நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்டது.

அந்த சத்துமாவினை பரிசோதித்த ஒருவர் அது தரமற்ற சத்துமா என சந்தேகமடைந்த நிலையில் அதனை அரிதட்டின் மூலம் அடித்தபோது அதில் இருந்த புழுக்கள் தென்பட்டன.

இந்நிலையில் சிறார்களிடமிருந்து அனைத்து சத்துமா பைகளையும் பெற்றுக்கொண்ட குறித்த நபர் அதனை ஊரில் உள்ள பொது மண்டபம் ஒன்றில் வைத்தார். இதனை அறிந்த குறித்த தொண்டு நிறுவனத்தினர் அவருடன் முரண்பட்ட பின்னர் அந்த சத்துமா பொதிகளை எடுத்துச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து பொது சுகாதார பரிசோதகர் மற்றும் கிராம சேவகரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதாக குறித்த நபர் தெரிவித்துள்ளார்.

# தர்மபுரம் பிரதேச வைத்தியசாலைக்கு திடீர் விஜயமொன்றை மெற்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன்!



தர்மபுரம் பிரதேச வைத்தியசாலைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் திடீர் விஜயம் மேற்கொண்டிருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் மருங்கன் மோகன் உள்ளிட்ட குழுவினர் தர்மபுரம் வைத்தியசாலைக்கு இவ்வாறு விஜயம் மேற்கொண்டனர்.

இதன் போது, குறித்த வைத்தியசாலைக்கு வருகை தரும் நோயாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பாகவும், வைத்திய சாலையில் வைத்தியர்கள் பற்றாக்குறை காரணமாக நோயாளர்கள் எதிர்நோக்கும் பல்வேறு விடயங்கள் தொடர்பாக நேரடியாக சென்று பார்வையிட்டனர்.

தர்மபுரம் வைத்திய சாலையில் ஒரே ஒரு வைத்தியரே தற்பொழுது கடமை ஆற்றி வருகின்றார். இங்கு நாளாந்தம் 300க்கு அதிகமான வெளி நோயாளர்கள் வருகை தருவதாகவும் அவர்களுக்கான சிகிச்சையை பார்வையிடுவது மட்டுமின்றி வாராந்த சிகிச்சை அவசர தேவை கருதி வரும் நோயாளர்களையும் பார்வையிட வேண்டிய தேவை உள்ளது.

இதன் காரணமாக தொடர்ச்சியாக 24 மணி நேரமும் தம் கடமையில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக வைத்தியர் தெரிவித்தார்.



மற்றும் வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவிக்கையில், இங்கு போதிய அளவிலான கட்டடங்கள் மற்றும் கட்டில் வசதிகள் அனைத்தும் காணப்பட்டிருந்த போதிலும் இங்கு போதிய வைத்தியர் பற்றாக்குறை காரணமாகவும் மற்றும் குருதி பரிசோதனை இல்லாத காரணத்தினால் கிளிநொச்சி வைத்திய சாலையே இங்கிருந்து பல நோயாளர்கள் மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளனர்.

தர்மபுரம் வைத்தியசாலையில் போதிய அளவிலான இட வசதிகள் காணப்பட்ட போதிலும் கிளிநொச்சி வைத்தியசாலையே நம்பி வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இவ்விடயம் தொடர்பாக அதிக அளவு அக்கறை செலுத்தும் என்ற நம்பிக்கையில் எமது தேவையை பூர்த்தி செய்து மக்களுக்கான சிறந்த சேவையை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தனர்.

இவ்விடயம்தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் அவர்கள் தெரிவிக்கையில் வைத்தியசாலை நிர்வாகமும் மற்றும் வைத்தியர்கள் தெரிவித்த விடயங்கள் தொடர்பாக பூர்த்தி வேண்டிய விடயங்களை அனைத்தும் உடனடியாக பூர்த்தி செய்யக்கூடிய அனைத்து விடயங்களும் வைத்தியர் பற்றாக்குறை வைத்தியசாலை பாதுகாப்புக்கான வசதிகள் குருதி பரிசோதனை வசதிகள் என்பனவற்றை விரைவில் பெற்று தர நடவடிக்கை எடுப்பதாக கூறினார்.

இப்பகுதியில் உள்ள 25க்கும் மேற்பட்ட கிராம மக்களுக்கு இலகுவான முறையில் சிறந்த வைத்திய சேவையினை பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படுவதின் மூலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் காணப்படுகின்ற அதிகளவான நோயாளர்களின் நெரிசல்களை குறைக்க முடியும் என தெரிவித்தார்.

# யாழ்ப்பாணத்தில் மனைவியை பிரிந்து வாழ்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துக் கொண்ட துயரச் சம்பவம்!

யாழ்ப்பாணத்தில் மனைவியை பிரிந்து வாழ்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார். கீரிமலை வீதி, நல்லிணக்கபுரம் பகுதியைச் சேர்ந்த சிறிமோகன் கஜேந்திரன் (வயது 30) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், இவர் கடந்த ஒன்றரை வருடங்களாக மனைவியை பிரிந்து வாழ்ந்துள்ளார். இவர் கடந்த 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மனைவியின் தந்தையின் வீட்டுக்கு சென்று தனக்கு தானே மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்துள்ளார்.

பின்னர் உறவினர்கள் அவரை மீட்டு தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு 23ம் திகதி காலை உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# யாழ்ப்பாணத்தில் மூச்செடுக்க சிரமப்பட்டு மூன்று வைத்தியசாலைகளுக்கு மாற்றப்பட்ட 8 மாத பெண் குழந்தை பரிதாபமாக உயரிழப்பு!

யாழில் மூச்செடுக்க சிரமப்பட்ட பெண் குழந்தை ஒன்று செவ்வாய்க்கிழமை 24ம்திகதி அன்றையதினம் உயிரிழந்தது. சாவகச்சேரி, மீசாலை கிழக்கு பகுதியைச் சேர்ந்த கேதீசன் கிஷாரா என்ற 8 மாதங்கள் நிரம்பிய பெண் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த குழந்தைக்கு ஏற்கனவே ஆஸ்துமா நோய் உள்ளது. இந்நிலையில் 22ம் அன்றையதினம் பெற்றோர் குழந்தையை அழைத்துக்கொண்டு பூநகரிக்கு சென்றவேளை மூச்சு எடுப்பதற்கு குழந்தை சிரமப்பட்டது.

இந்நிலையில் பெற்றோர் குழந்தையை பூநகரி வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை வைத்தியர்கள் குழந்தையை கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றினர். பின்னர் குழந்தை அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி 24ம் திகதி அன்று அதிகாலை குழந்தை உயிரிழந்தது. குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார்.



# செம்மணியும் ஜநாவும்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே மோதல் ஏற்பட்டதும் ஒருபுறம் தமிழ் மக்கள் பெட்ரோல் வரிசையில் நின்றார்கள். இன்னொருபுறம் சமூகவலைத்தளங்களில் இரண்டு நாடுகளில் ஒன்றை எதிர்த்தும் ஆதரித்தும் கருத்துக்களை முன் வைத்தார்கள்.

தமிழர்களில் பெரும்பாலானவர்கள் இஸ்ரேலுக்கு எதிராகவே காணப்பட்டார்கள். அதற்கு பிரதான காரணம் காசாவில் இஸ்ரேல் நடத்தும் இன அழிப்புதான். இந்த விடயத்தில் தமிழ் மக்கள் பெரும்பாலும் இன அழிப்புகளுக்கு எதிராகவே காணப்படுகிறார்கள். காசாவில் நடப்பது ஏறக்குறைய 15 ஆண்டுகளுக்கு முன் வன்னி கிழக்கில், முள்ளிவாய்க்காலில் என்ன நடந்ததோ அதுதான். ஆனால் சில வித்தியாசங்கள் உண்டு.

2009 ஆம் ஆண்டு தமிழ் மக்கள் ஏறக்குறைய உலகின் பெரும்பாலான நாடுகளால் சுற்றி வளைக்கப்பட்டிருந்தார்கள். பிராந்தியத்தில் ஒன்றுக்கொன்று முரணாக காணப்பட்ட நாடுகளும், உலக அளவில் ஒன்றுக்கொன்று போட்டியாக முரணாக காணப்பட்ட நாடுகளும் முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்களுக்கு எதிராக அரசாங்கத்தோடு அணி திரண்டு நின்றன. உதாரணமாக பாகிஸ்தானும் இந்தியாவும் எதிரிகள். ஆனால் இரண்டும் தமிழ் மக்களுக்கு எதிராக ஓரணியில் நின்றன. ஈரானும் இஸ்ரேலும் எதிரிகள். ஆனால் தமிழ் மக்களுக்கு எதிராக மஹிந்தவோடு நின்றார்கள். அரசுகளின் உலகம் அப்படித்தான் இருக்கும்.

அரசுகள் நலன்களின் அடிப்படையில்தான் இடையூடாடும். ஏன் அதிகம் போவான்? பாலஸ்தீன சுயாட்சி பிரதேசத்தை ஆளும் பலஸ்தீன அதிகார சபை தமிழ் மக்களோடு நிக்கவில்லை. குறிப்பாக 2009க்கு பின்னர்தான் அவை மஹிந்தவை கூப்பிட்டு அவருக்கு நாட்டின் உயர் விருதை வழங்கி, அவருடைய பெயரில் ஒரு வீதி யையும் திறந்து வைத்தார்கள். அரசுகளின் உலகம் அத்தகையதுதான். அது அறம் சார்ந்ததோ அல்லது நீதி நியாயங்களின் அடிப்படையிலானதோ அல்ல. நலன்களின் அடிப்படையிலானதுதான்.

ஆனால் அரசு இல்லாத சிறிய மக்கள் கூட்டமாகிய தமிழ் மக்கள் அவ்வாறு சிந்திப்பதில்லை. அதனால்தான் காசாவில் நடப்பதற்கு எதிராக அவர்கள் இஸ்ரேலை ஒரு எதிரியாகப் பார்த்தார்கள். ஈரானும் இஸ்ரேலும் மோதிக்கொண்ட பொழுது தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் ஈரானின் பக்கம்தான்.

இந்த முடிவு பூகோள அரசியல் தொடர்பான அறிவினால் ஏற்பட்டது அல்ல. ஒரு இன அழிப்புக்கு எதிராக ஏற்பட்ட கூட்டுணர்வு. அதனால் ஈரான் இஸ்ரேலுக்கு அடித்த பொழுது அதைக் கண்டு மகிழ்ந்த தமிழர்களே அதிகம். அது தொடர்பாக வெளிவந்த காணொளிகளை பகிர்ந்து மகிழ்ந்த தமிழர்களே அதிகம். தங்களுடைய பொது எதிரி அடி வாங்குகிறான் என்ற மனோநிலைதான் கணிசமான தமிழர்களிடம் காணப்பட்டது.

ஆனால் இப்படிப்பட்ட உணர்வு பூர்வமான, அறம் சார்ந்த, அப்பாவித்தனமான நிலைப்பாடுகளோடு தமிழ் மக்கள் உலக சமூகத்தை அணுக முடியாது என்பதுதான் இங்குள்ள குரூருமான ராணுவ, பொருளாதார, அரசியல் மற்றும் ராஜதந்திர யதார்த்தம் ஆகும்.

இக்கட்டுரை எழுதப்படும் நாளன்று ஐநாவின் மனித உரிமைகள் ஆணையாளர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தருகிறார். இங்கே அவர் செம்மணி புதை புதை குழியைப் பார்வையிட செல்வார் என்றும் என்றும் எதிர்பார்த்து அந்தப் பிரதேசத்தில் தமிழ் மக்கள் ஒரு போராட்டத்தை ஒழுங்குபடுத்தியிருக்கிறார்கள். "அணையா விளக்கு" என்று அழைக்கப்படுகின்ற அந்த கவன ஈர்ப்பு போராட்டமானது மூன்று நாட்களாக தொடர்ந்து நடைபெற்றது. வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட காலகட்டத்தில் ஒன்றிணைந்த தன்னார்வலர்களைக் கொண்ட ஒரு சிறு அணி செம்மணி விவகாரத்திலும் அவ்வாறு தன்னார்வமாக ஒரு போராட்டத்தை ஒழுங்குபடுத்தியது.

செம்மணிச் சந்தியில் உள்ள சிவலிங்கத்துக்கு அருகே அவர்கள் தற்காலிக கொட்டைகளை நிறுவி அங்கே அமர்ந்திருக்கிறார்கள். ஒரு தீபத்தை ஏற்றி அதை அணையாமல் பாதுகாத்தபடி ஐநா மனித உரிமைகள் ஆணையாளருடைய வருகைக்காக காத்திருந்தார்கள்.

அது செம்மணி வெளியில் காணப்படும் ஒரு சந்தி. அந்த சந்தியில் கடல் காற்று பலமாக வீசிக் கொண்டே இருக்கும். அந்த தீபத்தை கடும் காற்றில் அணைய விடாமல் மூன்று நாட்களாக இரவும் பகலும் பாதுகாத்து வந்தார்கள். தமிழ் மக்கள் போராட்ட நெருப்பை அணையவிடாது தொடர்ந்து பாதுகாக்க வேண்டும் என்பதனை அது குறிக்கிறது. அது சரி. தமிழ் மக்கள் போராட வேண்டும். போராடினால்தான் இனமாக திரளலாம். அணையா விளக்கு போராட்டம் கட்சி கடந்து அரசியல் செயற்பாட்டாளர்களை ஊடகங்களை அந்த இடத்தை நோக்கி ஈர்த்துக் கொண்டு வந்தது. இவ்வாறான கட்சி கடந்த போராட்டங்கள் தமிழ் மக்களை இனமாகத் திரட்டும். எனவே தமிழ் மக்கள் போராட வேண்டும். ஆனால் தொடர்ந்து போராட வேண்டும்.

ஒன்பது ஆண்டுகளுக்குப் பின் ஒரு ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு வந்திருக்கிறார். அவர் இலங்கைக்கு வரக்கூடாது என்று தமிழ் சிவில் சமூகங்கள் இணைந்து கடந்த மார்ச் மாதம் 22ஆம் தேதி ஐநாவுக்கு ஒரு கடிதத்தை அனுப்பின. அந்த கடிதத்தின் பின் ஐநா அலுவலர்கள் சிவில் சமூகங்களோடு ஒரு மெய் நிகர் சந்திப்பை ஒழுங்கு படுத்தினர். அதன்போது சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான ஐநா அலுவலகத்தோடு இலங்கை அரசாங்கம் ஒத்துழைக்க மறுப்பதையும் அந்த அலுவலர்கள் இலங்கைக்குள் வருவதற்கு விசா வழங்கப்படுவதில்லை என்பதையும் சிவில் சமூகங்கள் சுட்டிக்காட்டின. அந்த அலுவலகம் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வருகிறது. அந்த அலுவலகத்தோடு ஒத்துழைக்க மறக்கும் ஒரு நாட்டுக்குள் வருவது அந்த நாட்டை அங்கீகரிப்பதாக அமையும் என்றும் சுட்டிக்காட்டினர். அப்பொழுது ஐநா ஒரு காரணத்தை கூறியது. இந்த அரசாங்கத்தை எதிர் நிலையில் வைத்திருந்தால் அதனைக் கையாள முடியாது. எனவே இந்த அரசாங்கத்தை பொறுப்பு கூற வைப்பதென்றால் அதோடு ஏதோ ஒரு வகையில் என்கேஜ் பண்ண வேண்டும் என்று அவர்கள் விளக்கம் சொன்னார்கள்.

இது தமிழ் மக்களுக்கு ஒரு புதிய விளக்கமல்ல. கடந்த 15 ஆண்டுகளாக ஐநா அலுவலகங்களும் மேற்கத்திய தூதரகங்களும் தமிழ் சிவில் சமூகங்களுக்கு அப்படிப்பட்ட விளக்கங்களைத்தான் வழங்கி வருகின்றன. இந்த விளக்கங்கள் முழு அளவுக்கு உண்மையானவை அல்ல. இந்த விளக்கங்களின் பின்னால் வெளியில் சொல்லப்படாத ராஜதந்திர இலக்குகள் உண்டு.

இப்போதுள்ள இலங்கை அரசாங்கம் சீனச் சார்பு இடதுசாரி பாரம்பரியத்தில் வந்த ஜேவிபியை அடித்தளமாகக் கொண்டது. ஜேவிபியின் தீர்மானிக்கும் தலைவர் என்று அழைக்கப்படுகின்ற ரில்வின் சில்வா அண்மையில் சீனாவில் காணப்பட்டார். சீனாவின் செல்வாக்கு மண்டலத்துக்குள் எளிதாக விழக்கூடிய ஒரு அரசாங்கம் இதுவென்று மேற்கு நாடுகளும் இந்தியாவும் ஐநாவும் அஞ்சுகின்றன. எனவே இந்த அரசாங்கத்தை பகை நிலைக்கு தள்ளினால் அது சீனாவை நோக்கிப் போய்விடும் என்றும் அவை அஞ்சுகின்றன. அதனால் இந்த அரசாங்கத்தோடு என்கேஜ் பண்ண வேண்டும் என்றும் அவை சிந்திக்கின்றன. நவீன ராஜதந்திரம் என்பது ஒரு என்கேஜ்மென்ட்தான். அரசுகளும், அரசுகளும் அரசுகளும் உலகப் பெரு நிறுவனங்களும் தங்களுக்கு இடையே என்கேஜ் பண்ணிக் கொள்கின்றன. அரசு இல்லாத தரப்பு ஆகிய தமிழ் மக்களைப் பொறுத்தவரை அதனால் என்ன கிடைத்திருக்கிறது?

கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக அதாவது 2022 இலிருந்து ஓர் அலுவலகம் ஐநா மனித உரிமைகள் ஆணையகத்துக்குள் இயங்கி வருகின்றது. ஸ்ரீலங்காவை பொறுப்புக்கூற வைப்பதற்கான அலுவலகம் என்று அது அழைக்கப்படுகிறது. போர்க்குற்றம் தொடர்பான சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான ஓர் அலுவலகம் அது. அந்த அலுவலகத்தைச் சேர்ந்தவர்கள் இலங்கைக்குள் வருவதற்கு தொடர்ச்சியாக விசா மறுக்கப்பட்டு வருகிறது. இதைத்தான் முன்சொன்ன சிவில் சமூக கூட்டணிவு ஐநா அலுவலர்களுக்கு சுட்டிக்காட்டியது. இப்பொழுது ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்குள் வருவதால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது பொறுப்புக் கறலுக்கான. அந்த அலுவலகத்தின் அலுவலர்கள் நாட்டுக்குள் வருவதற்கு அனுமதி வழங்கி விடுமா?

ஆனால் கடந்த ஜெனிவா கூட்டத் தொடரின் போது, அங்கு பேசிய புதிய வெளிவகார அமைச்சராகிய விஜித ஹேரத் தமது அரசாங்கம் பொறுப்பு கூறல் தொடர்பில் உள்நாட்டு பொறிமுறையைத்தான் வலியுறுத்துவதாகவும் அனைத்துலக பொறிமுறையை ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் தெளிவாகச் சொல்லிவிட்டார். இதுதான் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் நிலைப்பாடு என்றால் அந்த அலுவலகம் நாட்டுக்குள் வந்து சான்றுகளையும் சாட்சிகளையும் விசாரிப்பதற்கும் சேகரிப்பதற்கும் அரசாங்கம் அனுமதிக்குமா? அவ்வாறு அனுமதிக்குமாறு அரசாங்கத்தை நிர்பந்திக்க ஐநாவால் முடியுமா?

காசாவில் நடப்பதில் இருந்து தமிழ் மக்கள் கற்றுக்கொள்ள வேண்டும். 15 ஆண்டுகளுக்கு முன் தமிழ் மக்களின் விடயத்தில் ஐநா கையாலாகாத ஒரு சாட்சியாக இருந்தது. அதுதொடர்பாக ஐநா நடத்திய உள்ளக விசாரணை அறிக்கையின்படி ஐநா, முள்ளிவாய்க்கால் பொறுத்து கையாலாகாத ஒரு சாட்சியாக இருந்தது என்பது தெரிய வந்தது. முள்ளிவாய்க்காலில் மட்டுமல்ல, காசாவில் மட்டுமல்ல, அரசற்ற இனங்கள் நசுக்கப்படுகையில் ஐநா தொடர்ந்து கையாலாகாத ஒரு சாட்சியாகவே இருந்து வந்துள்ளது. இப்படிப்பட்டது ஒரு பின்னணிக்குள், தமிழ் மக்கள் ஐநாவிடம் நீதியை கேட்பது சரியா என்ற கேள்வி எழும்.

உலகப் பெரு மன்றம் என்ற அடிப்படையில் ஐநாவிடம்தான் முறைப்பாடு செய்ய வேண்டும். அரசுகள் ஐநாவுக்குள்தான் என்கேஜ் பண்ணுவது போல அரசு இல்லாத தரப்பாகிய தமிழ் மக்களும் என்கேஜ் பண்ண வேண்டும். ஆனால் ஐநாவை நம்பி, ஐநா தமிழ் மக்களுக்கு நீதியை பெற்றுத்தரும் என்று நம்பி காத்திருக்க தேவையில்லை. மாறாக தமிழ் மக்கள் போராட வேண்டும். போராடினால் தான் இனமாக திரள்வார்கள். இனமாக திரண்டால்தான் பேரபலம் அதிகரிக்கும். பேரபலம் அதிகரித்தால் தான் அரசுகளும் உலக பொது நிறுவனங்களும் தமிழ் மக்களுக்கு செவி கொடுக்கும். எனவே தமிழ் மக்கள் போராட வேண்டும். விடாது போராட வேண்டும். போராட்ட நெருப்பை அணையாது பாதுகாக்க வேண்டும்.

அதன் பொருள் ஐநா நீதியை பெற்று தரும் என்று நம்பி ஏமாறுவது அல்ல. மாறாக தமிழ் மக்கள் தங்களுடைய பேர பலத்தைத் திரட்டுவதற்காக போராட வேண்டும். தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை அம்பலப்படுத்துவதற்காகப் போராட வேண்டும். உலக சமூகத்தின் கவனத்தை தங்களை நோக்கி ஈர்த்து வைத்திருப்பதற்காக போராட வேண்டும். அதைவிட முக்கியமாக தமிழ் மக்கள் தாங்கள் ஒரு தேசமாகத் திரண்டால்தான் உலக சமூகத்தில் தங்களுக்கு ஆதரவான சக்திகளைத் திரட்டலாம். தங்களுக்கு ஆதரவாக நாடுகளையும் நிறுவனங்களையும் திரட்டினால்தான் நீதிக்கான போராட்டத்துக்கான அனைத்துலக அழுத்தத்தை அதிகப்படுத்தலாம்.

எனவே உலகத்தை திரட்டிக் கொள்வதென்றால் தமிழ் மக்கள் முதலில் தங்களைத் திரட்டிக் கொள்ள வேண்டும். செம்மணியில் அணையா விளக்குப் போராட்டத்தின் கடைசி நாளன்று சில தமிழ் அரசியல்வாதிகளை அவமதித்தது போன்ற செயல்கள் தமிழ் மக்கள் தங்களை ஒரு தேசமாகத் திரட்ட உதவப் போவதில்லை. தம்மைத் தாமே ஒரு தேசமாகத் திரட்டிக் கொண்டால்தான் உலகத்தை வெற்றிகரமாகத் திரட்டிக் கொள்ளலாம்.

# 2025 ஆம் ஆண்டு உலகின் அணு ஆயுதத் திறன்கள்: போக்குகள் மற்றும் மூலதனப் பங்களிப்புகள்




**அணு ஆயுதங்களின் தற்போதைய நிலை**

2025 ஜனவரி நிலவரப்படி, உலக அணு ஆயுதங்கள் உலக பாதுகாப்புக்கு ஒரு பெரிய அச்சுறுத்தலாக உள்ளன. ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனத்தின் (SIPRI) தரவுகளின்படி, கிட்டத்தட்ட 12,241 அணு ஆயுதங்கள் உலகம் முழுவதும் உள்ளன. இவற்றில் 9,614 ஆயுதங்கள் செயலிலும் இராணுவ பயன்பாட்டிலும் உள்ளன, மீதமுள்ள 2,627 ஆயுதங்கள் பயன்பாட்டிலிருந்து திரும்பப் பெற்றிருந்தாலும், இன்னும் அழிக்கப்படவில்லை.

அமெரிக்கா மற்றும் ரஷ்யா இணைந்து உலகின் 90% அணு ஆயுதங்களை வைத்திருக்கின்றன. அமெரிக்காவிடம் 5,177 ஆயுதங்கள் (1,770 பயன்பாட்டில், 1,930 சேமிப்பில்) உள்ளன. ரஷ்யாவிடம் 5,459 ஆயுதங்கள் (1,718 பயன்பாட்டில், 2,591 சேமிப்பில்) உள்ளன. உலகளவில் 3,912 ஆயுதங்கள் ஏவுகணைகளில் அல்லது இராணுவ தளங்களில் பயன்பாட்டில் உள்ளன. இவற்றில் 2,100 ஆயுதங்கள் உயர் எச்சரிக்கை நிலையில் உள்ளன - நிமிடங்களில் ஏவுதல் நடைபெறும் வகையில் தயாராக உள்ளன.

**முக்கிய அணு ஆயுதங்கள் கொண்ட நாடுகள் மற்றும் அவற்றின் களஞ்சியங்கள்**

- அமெரிக்கா (5,177 ஆயுதங்கள்) - பயன்பாட்டில் உள்ள ஆயுதங்களில் முதலிடத்தில் உள்ளது (1,770).

- ரஷ்யா (5,459 ஆயுதங்கள்) - அமெரிக்காவை விட சற்று அதிகமான ஆயுதங்களை வைத்திருக்கிறது.

- சீனா (600 ஆயுதங்கள்) - வேகமாக அணு ஆயுதங்களை அதிகரித்து வருகிறது. இப்போது 24 ஆயுதங்கள் பயன்பாட்டில் உள்ளன.

- பிரான்ஸ் (290 ஆயுதங்கள்) - பெரும்பாலான ஆயுதங்கள் பயன்பாட்டில் உள்ளன (280).

- இங்கிலாந்து (225 ஆயுதங்கள்) - சிறிய ஆனால் நவீனமயமாக்கப்பட்ட அணு ஆயுதங்களை வைத்திருக்கிறது (120 பயன்பாட்டில்).

- இந்தியா (180 ஆயுதங்கள்) & பாகிஸ்தான் (170 ஆயுதங்கள்)
- தொடர்ந்து புதிய ஏவுகணைகளை உருவாக்கி வருகின்றன.

- இஸ்ரேல் (90 ஆயுதங்கள்) - அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படாத ஆனால் அங்கீகரிக்கப்பட்ட அணு திறன்.

- வட கொரியா (50 ஆயுதங்கள்) - குறைவான எண்ணிக்கையிலான ஆயுதங்கள் உள்ளன, ஆனால் தொடர்ந்து அணு திட்டம் முன்னேற்றம் காண்பிக்கிறது.

**உருவாகும் புதிய போக்குகள் மற்றும் ஆபத்துகள்**

**நவீனமயமாக்கல் மற்றும் விரிவாக்கம்:**

அமெரிக்கா மற்றும் ரஷ்யா தங்களின் பழைய அணு அமைப்புகளை புதுப்பிக்கின்றன.

சீனாவின் வேகமான வளர்ச்சி, அதன் அணு உள்கட்டமைப்பின் தாக்கத்தை பெருக்கும்.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் புதிய ஏவுகணை அமைப்புகளை உருவாக்குகின்றன, இது பிராந்திய அமைதி மீது தாக்கம் செலுத்தும்.

**ஆயுதக் கட்டுப்பாடுகளின் சீரழிவுகள்:**

New START ஒப்பந்தம் 2026ல் முடிவடைய உள்ளது - மாற்றாக எதுவும் முன்வைக்கப்படவில்லை.

பன்முக அணு நிச்சாய்வு பேச்சுவார்த்தைகள் முன்னேற்றமின்றி உள்ளன.

சீனா மற்றும் வட கொரியாவின் வெளிப்படைத்தன்மையின் குறைவு, ஆபத்துகளை மதிப்பீடு செய்வதை கடினமாக்குகிறது.

**தொழில்நுட்பச் சவால்கள்:**

Hypersonic ஏவுகணைகள் முடிவெடுக்கும் நேரத்தை சுருக்குகின்றன - தற்செயல் மோதலுக்கான அபாயம்.

அணு கட்டுப்பாட்டுக் கணினிகளில் உள்ள சைபர் குறைபாடுகள், புதிய அபாயங்களை உருவாக்குகின்றன.

AI அமைப்புகளில் ஏற்பட்ட தவறான மதிப்பீடுகள், மாறுபாடுகளுக்கு வழிவகுக்கக்கூடும்.

**கொள்கைகள் தொடர்பான பரிந்துரைகள் (Policy Recommendations):**

அணு அபாயங்களை குறைக்க, உலக நாடுகள் இணைந்து செயல்பட வேண்டியவை:

- அமெரிக்கா - ரஷ்யா ஆயுதக் கட்டுப்பாடு பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்கவும், சீனாவை எதிர்கால ஒப்பந்தங்களில் சேர்க்கவும்.
- நெருக்கடி தகவல் தொடர்பு சேனல்களை உருவாக்கி தவறான எச்சரிக்கைகள் மூலம் ஏற்படும் போர் ஆபத்துகளை தடுக்கவும்.
- தன்னார்வ தகவல் பரிமாற்றங்களை ஊக்குவித்து அணு ஆயுத நாடுகளுக்கிடையே வெளிப்படைத்தன்மையை அதிகரிக்கவும்.
- முதலில் பயன்படுத்தாமல் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளுமாறு அனைத்து அணு ஆயுத நாடுகளையும் ஊக்குவிக்கவும்.
- அணு ஆயுதங்களின் பங்கைக் குறைக்க உலக பாதுகாப்பு முறைகளை மேம்படுத்தவும்.
- அணு ஆயுதங்கள் பரவாமை ஒப்பந்தத்தை (NPT) வலுப்படுத்தி அனைத்து நாடுகளும் அதன்படி நடக்குமாறு செயல்படவும்.
- இளம் தலைமுறையினருக்கு அணு போரின் அழிவுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் கல்வி திட்டங்களை உருவாக்கவும்.

இந்த நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படாவிட்டால், உலகம் மீண்டும் அணுப் போரின் அச்சுறுத்தலுக்கு ஆளாகும் ஆபத்து உள்ளது. அணு ஆயுதங்களின் பயன்பாடு மனிதகுலத்திற்கு ஏற்படுத்தக்கூடிய பேரழிவுகளை தவிர்க்க, அனைத்து நாடுகளும் இந்தப் பரிந்துரைகளை கடுமையாகக் கருத்தில் கொள்ள வேண்டும்.

**அணு ஆபத்துகளைக் குறைப்பதற்கான கொள்கை பரிந்துரைகள்**

- தகவல் பரிமாற்றங்கள் மூலம் வெளிப்படைத்தன்மையை ஊக்குவிக்கவும் - அணு ஆயுதங்கள் கொண்ட நாடுகள் தன்னார்வ தகவல் பகிர்வு செய்ய வேண்டும்
- முதலில் பயன்படுத்தாமைக் கொள்கைகளை ஊக்குவிக்கவும் - இது அணுப்போர் வாய்ப்புகளைக் குறைக்கும்
- பலதரப்பு உரையாடல்களை விரிவாக்கவும் - அனைத்து அணு ஆயுத நாடுகளையும் பாதுகாப்பு கோட்பாடுகள் குறித்து உரையாடுவதில் ஈடுபடுத்தவும்

**சர்வதேச சமூகம் இன்று ஒரு முரண்பாடான சூழ்நிலையை எதிர்கொள்கிறது:**

- ஒருபுறம், அணு ஆயுதங்களின் எண்ணிக்கை பனிப்போருக்குப் பிந்தைய காலத்தில் குறைந்துள்ளது
- மறுபுறம், ஆயுதங்களின் தரமும் துல்லியமும் முன்பை விட அதிகரித்துள்ளன
- ஆயுதக் கட்டுப்பாடு ஒப்பந்தங்கள் சீரழிந்து வருகின்றன
- புவியியல் அரசியல் பதட்டங்கள் உச்சத்தை நோக்கி செல்கின்றன

இந்த நிலைமைகளில், அணு ஆயுதங்களின் பயன்பாடு - திட்டமிட்டோ, தவறுதலாகவோ அல்லது தவறான கணக்கீட்டின் விளைவாகவோ - ஏற்படும் ஆபத்து கடந்த சில தசாப்தங்களை விட அதிகரித்துள்ளது.

**உலக சமூகம் அணு ஆபத்துகளைக் குறைப்பதற்கான பின்வரும் நடவடிக்கைகளை அவசரமாக மேற்கொள்ள வேண்டும்:**

- புதிய ஆயுதக் கட்டுப்பாட்டு கட்டமைப்புகளை உருவாக்குதல்
- மூலோபாய நிலைப்பாட்டை மேம்படுத்துதல்
- அணு ஆயுதங்களின் பங்கைக் குறைக்கும் உலக பாதுகாப்பு முறைகளை உருவாக்குதல்

இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால், மனிதகுலத்தின் எதிர்காலம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகலாம். அணு ஆயுதங்களின் பயன்பாடு தவிர்க்கப்பட வேண்டிய ஒரு பேரழிவு. இந்த அபாயத்தைத் தவிர்ப்பதற்கான அரசியல் விருப்பம் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு இன்று மிகவும் அவசியமாக உள்ளது.

- இந்த மதிப்பீடுகள் அனைத்தும் ஏற்க்குறைய சரியானவை என்பதும் ஆபத்தான நிலைதான்
- அணு ஆயுதங்கள் குறித்த தரவுகள் தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கின்றன
- சில நாடுகள் (குறிப்பாக இஸ்ரேல் மற்றும் வட கொரியா) தங்கள் அணு திட்டங்கள் குறித்து முழு வெளிப்படைத்தன்மையைக் காட்டவில்லை
- புதிய தொழில்நுட்ப முன்னேற்றங்கள் இந்த மதிப்பீடுகளை மாற்றலாம்

- ஈழத்து நிலவன் - 21-06-2025



இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணம் சுழிபுரத்தில் நடைபெற்ற மாபெரும் கிரிக்கெட் இறுதிச் சுற்றும் தேசிய ரீதியாக சாதித்த யுவதிக்கான கௌரவிப்பும்!




விக்டோரியன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற T20 Bash மாபெரும் கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் திங்கட்கிழமை 23ம் திகதி அன்றையதினம் விக்டோரியா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

விக்டோரியன் விளையாட்டுக் கழகத்தின் தலைவரும் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தவிசாளருமான ச.ஜெயந்தன் தலைமையில் நடைபெற்ற இன்றைய நிகழ்வில் பிரதம அதிதியாக விக்டோரியா கல்லூரியின் முன்னைநாள் அதிபர் வ.சிறீகாந்தன் கலந்து சிறப்பித்தார்.

27 அணிகளுக்கு இடையே நடைபெற்ற இந்த போட்டியில் இறுதிச் சுற்றுக்கு union மற்றும் centralites ஆகிய அணிகள் தெரிவு செய்யப்பட்டன. இரு அணிகளும் அன்றையதினம் மோதிய நிலையில் union அணியானது 10 விக்கெட்டுகள் இழப்பிற்கு 121 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. அத்துடன் centralites அணியானது 8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 122 ஓட்டங்களை பெற்று வெற்றி வாகை சூடியது.

குறித்த நிகழ்வின்போது புதிதாக தெரிவு செய்யப்பட்ட வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் ச.ஜெயந்தன் மற்றும் தேசியமட்ட வேகநடை போட்டியில் தேசிய ரீதியாக மூன்றாவது இடம் பெற்ற தமிழரசி ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.






# செம்மணிப் புதைகுழிகளில் சர்வதேச தலையீட்டின் அவசியத்தை ஐ.நா. அங்கீகரிக்கிறது

## ஐ.நா மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் வோல்கர் டர்க்

கடந்த 25ஆம் திகதி செம்மணி புதைகுழியை ஆய்வு செய்ய யாழ்ப்பாணத்திற்கு வருவதற்கு முன்னர், ஐ.நா மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் வோல்கர் டர்க் சர்வதேச இடம்பெயர்வு அலுவலகத்தின் (IOM - UN Migration) பிரதிநிதிகள், போரால் பாதிக்கப்பட்ட தமிழ் தாய்மார்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சிவில் சமூக ஆர்வலர்கள், மதத் தலைவர்கள் மற்றும் பல அரசியல்வாதிகளைச் சந்தித்ததாக அறிவிக்கப்பெற்றுள்ளது.

மாலை வேளையில் யாழ்ப்பாணத்தில் உள்ள நல்லூர் கோவிலுக்குச் சென்ற ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானி, பின்னர் மாலை 7 மணியளவில் இலங்கை தமிழ் அரசு கட்சி (ITAK) மற்றும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்ததாகவும் அறியப்பெறுகின்றது.

அவர் வீஜயம் செய்த இடங்களில் தமிழ் மக்கள் அனுபவிக்கும் துயரங்களை மிகுந்த கரிசனையோடு செவிமடுத்தார் என்றும் செய்தியாளர் அறிவித்துள்ளனர். இலங்கையில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியின் அகழ்வு நடவடிக்கைகள் சர்வதேச தரத்திற்கு அமையவும் பாரபட்சமின்றியும் நடத்தப்பட வேண்டும் என்ற பாதிக்கப்பட்டவர்களின் தொடர்ச்சியான கோரிக்கையை ஐக்கிய நாடுகள் சபை ஆதரித்துள்ளது. என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவரது கருத்துக்கள் பின்வருமாறு அமைந்தன என்றும் எமது செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர்.

"உண்மையை வெளிக்கொண்டு வரும் திறன் கொண்ட தடயவியல் நிபுணத்துவம் கொண்ட சுயாதீன நிபுணர்களால் நடத்தப்படும் விரிவான, வலுவான விசாரணைகள் மூலம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் வலி மற்றும் துன்பத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதே பாரிய மனித புதைகுழிகள் விடயத்தில் செய்ய வேண்டிய விடயம்" என ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க், யாழ்ப்பாணம், செம்மணி, சித்துபாத்தி மனிதப் புதைகுழிகளுக்கு அருகில் தெரிவித்த கருத்துடன் கூடிய காணொளி ஒன்றை வெளியிட்டுள்ள ஐக்கிய நாடுகள் சபை, நாட்டிலுள்ள உள்ள அனைத்து மனித புதைகுழிகளிலும் சர்வதேச தலையீட்டின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளது.

"விசாரணைகள் சர்வதேச தரத்திற்கு அமைய பாரபட்சமின்றி முழுமையாக நடத்தப்பட வேண்டும். நாடு முழுவதும் ஏராளமான மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன," என இலங்கையில் உள்ள ஐ.நா. அலுவலகம் சமூக ஊடகங்களில் பதிவிட்டுள்ளது.



போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் சமூகம், சர்வதேச தரத்திற்கு அமைய சர்வதேச மேற்பார்வையின் கீழ் மனிதப் புதைகுழிகள் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட வேண்டும் என அழைப்பு விடுத்து வருகிறது.

எனினும், நேற்றைய தினம் (ஜூன் 25) ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க் செம்மணி புதைகுழிக்கு வருகை தந்ததை உள்ளூர் ஊடகவியலாளர்கள் செய்தி சேகரிக்க பொலிஸ் தடை விதித்திருந்தது.

மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் புதைகுழியை ஆய்வு செய்தபோது, அந்தப் பகுதிக்குள் மக்கள் நுழைவதைத் தடுக்க யாழ்ப்பாண பொலிஸார் நீதிமன்றத் தடை உத்தரவைப் பெற்றிருந்ததாக உள்ளூர் ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சிறு குழந்தைகள் உட்பட 19 பேரின் எச்சங்கள் மீட்கப்பட்ட இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட ஐந்தாவது புதைகுழி சட்டவிரோதமானதாகவோ அல்லது இரகசியமாகவோ புதைக்கப்பட்ட இடமாக இருக்கலாம் என அகழ்வாராய்ச்சிகளை நடத்தும் நிபுணர்கள் நீதிமன்றத்திற்குத் தெரிவித்திருந்தனர்.

புதைகுழியை பார்வையிட்ட பின்னர், மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர், செம்மணி புதைகுழிகளுக்கு அருகில் "மக்கள் நடவடிக்கை" அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பொறுப்புக்கூறல் மற்றும் நீதிக்கான ஐ.நா. தலையீட்டைக் கோரும், "அணையா விளக்கு" போராட்ட இடத்திற்குச் சென்று, பொதுச்சுடருக்கு மலர் தூவி, மரியாதை செலுத்தினார்.

யாழ்ப்பாணத்திற்கு வருவதற்கு முன்னதாக நேற்று காலை (ஜூன் 25) ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் திருகோணமலைக்கு விஜயம் செய்திருந்தார்.





கிழக்கு பிராந்தியத்தைச் சேர்ந்த தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் திருகோணமலைக்குச் செல்லும் வழியில் ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரை சந்தித்து, தமிழர் இனப்படுகொலை, படுகொலைகள், காணாமல் ஆக்கப்படுதல்கள், நில அபகரிப்பு, மனித புதைகுழிகள், இராணுவமயமாக்கல் மற்றும் பௌத்தமயமாக்கல் உள்ளிட்ட தீர்க்கப்படாத பிரச்சினைகள் குறித்த ஆவணங்களை ஒப்படைத்தனர்.

திருகோணமலையில் சிவில் சமூக ஆர்வலர்களைச் சந்தித்து கலந்துரையாடல்களை நடத்திய உயர் ஸ்தானிகர், யாழ்ப்பாணத்திற்கு விமானத்தில் செல்வதற்கு முன்னர் கிழக்கு மாகாண ஆளுநரையும் சந்தித்ததாக கிழக்கு பிராந்திய ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.



# யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து ஆரம்பித்து கதிர்காமத்தை சென்றடைந்த பாதையாத்திரிகள்

கதிர்காமத்துக்கான பாதையாத்திரிகள் 5 தினங்களாக காட்டுவழியாக மேற்கொண்டு 26ம் திகதி அன்று வியாழக்கிழமை கதிகாமத்தை சென்றடைந்தனர்.

கதிர்காம முருகப் பெருமான் ஆலைய கொடியேற்றத்தையிட்டு பக்தர்கள் நேத்திக்கடன்களை வைத்து பாதையாத்திரை யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலையத்தில் இருந்து ஆரம்பித்து சுமார் 850 கிலோமீற்றர் தூரத்தை சென்று முடிக்க.

கதிர்காம முருகப் பெருமானுக்கு நேர்த்திகடன் வைத்து பாதையாத்திரையக செல்லும் பகத்தர்கள் யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி முருகன் ஆலையத்தில் இருந்து சுமார் 850 கிலோமீற்றர் தூரம் சுமார் 45 நாட்கள் பாதையாத்திரையாக கதிர்காமத்தை சென்று சென்று நேத்திகடனை முடித்து ஆலையத்தை தரிசிப்பது வழமை.

இந்த வகையில் யாழ் செல்வச்சந்நிதி ஆலையத்தில் இருந்து கடந்த மாதம் ஆரம்பித்த பாதை யாத்திரை குழுவினர் கிழக்கு மாகாணம் பாணமை உகந்தமலை முருகன் ஆலையத்தை கடந்த 19 திகதி சென்றடைந்தனர்.

உகந்தயில் இருந்து கதிர்காமத்துக்கான காட்டுவழிபாதை கடந்த 20 திகதி வெள்ளிக்கிழமை சம்பிராய பூர்வமாக திறக்கப்பட்டு 5 தினங்களாக காட்டுவழியாக ஊடாக ஆரயிக்கணக்காண பக்தர்கள் பாதையாத்திரையாக வியாழக்கிழமை (26) கதிர்காம முருகன் ஆலையத்தை சென்றடைந்தனர்.

இதேவேளை காட்டுவழிபாதை எதிர்வரும் 4ம் திகதி பூட்டப்படும் என்பதுடன் காட்டுவழி பாதையில் பாதையாத்திரிகள் குடிப்பதற்காக தண்ணீர் இல்லாமல் பெரும் சிரமத்தை மேற்கொண்டதாகவும் இவ்வாறான நிலையில் ஒருபோதும் இடம்பெறவில்லை இவ் முறை இடம்பெற்றதாகவும் இதற்கு பொறுப்பான அதிகாரிகள் கவனம்செலுத்தத வேண்டும் என் பாதயாத்திரை மேற்கொண்ட பக்தர்கள் கடும் கவலை தெரிவித்தனர்.






ARIS BABIKIAN, MPP
SCARBOROUGH - AGINCOURT
CANADA DAY
BBQ
DATE: Sunday, June 29, 2025
LOCATION: Terry Fox Park
300 Bamburgh Cir, Scarborough,
ON M1W 3Y1
TIME: 2:00PM – 5:00PM
Free food*
*While supplies last
face painting
drinks
ice cream
FOR MORE INFORMATION, PLEASE CONTACT US AT:
207-4002 Sheppard Ave. E.
Scarborough, ON M1S 1S6
Tel: 416-297-6568
Everyone is welcome

## Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.

அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.


**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**



Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

Clinic Location:
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca

11/24




## SRI LANKA EX-TAMIL POLICE OFFICERS CLUB - CANADA
ஸ்ரீ லங்கா முன்னைநாள் தமிழ் பொலிஸ் அலுவலர் கழகம் - கனடா

ஸ்ரீ லங்கா முன்னைநாள் தமிழ் பொலிஸ் அலுவலர் கழகம் - கனடா
புதிய நிர்வாகசபையின் ஆதரவில்
கனடாவின் 158 பிறந்தநாளை முன்னிட்டு வழங்கும்

**மாபெரும் ஒன்று கூடலும்**
**விளையாட்டுப்போட்டியும்**

**காலம்: 01-07-2025**
**செவ்வாய்க்கிழமை 10:00AM - 6:00PM**

**இடம்: Morningside Park, Lot # 1**

ஸ்ரீ லங்கா முன்னைநாள் தமிழ் பொலிஸ் கழகத்தின் குடும்பத்தினர் நண்பர்கள் மற்றும் நலன்விரும்பிகள் அனைவரையும் வந்து கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


அன்றைய தினம் சிற்றுண்டிகள் மதிய உணவுகள் என்பன அனைவருக்கும் வழங்கப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு


S.ராதாகிருஸ்ணசாமி
தலைவர்
416-412-3838

T. சிவலோகநாதன்
செயலாளர்
416-918-1318

S. அரியதாஸ்
உப செயலாளர்
416-220-3765




கோண்வோல் சிவன் ஆலயம் - கனடா
CORNWALL SHIVAN TEMPLE - CANADA
தெய்வத் திரு. சண்முகலிங்கம் வேலாயுதபிள்ளையின் ஆசீர்வாதத்துடன்
மஹோற்சவ விஞ்ஞாபனம் 2025
15 யூலை 2025 முதல் 26 யூலை 2025 வரை
கொடியேற்றம் 15.07.2025 செவ்வாய்க்கிழமை
சப்பிரத் திருவிழா 22.07.2025 செவ்வாய்க்கிழமை
தேர்த் திருவிழா 23.07.2025 புதன்கிழமை
தீர்த்தத் திருவிழா 24.07.2025 வியாழக்கிழமை
பூங்காவனம் 25.07.2025 வெள்ளிக்கிழமை
வைரவர் மடை 26.07.2025 சனிக்கிழமை
தேர்த் திருவிழாவிற்கு
Toronto,mississauga, Brampton வில் இருந்து பஸ் சேவைகள் நடைபெறவுள்ளதால்
முற்பதிவிற்கு அழையுங்கள் ( கட்டணம் இருவழிச்சேவைக்கு $20)
416-564-9642
www.cornwallshivan.ca
1730 Vincent Massey Dr, Cornwall, ON K6H 5R6
CORNWALL SHIVAN ஆ TEMPLE CANADA




**Andrea Hazell**
Member of Provincial Parliament



**Canada Day Greetings!**

Happy Canada Day! As we gather to celebrate this special day, I want to extend my warmest wishes to all residents of Scarborough–Guildwood and across Ontario.

For 158 years, Canadians across the country have been celebrating Canada Day on July 1st. This is a day to celebrate, cherish and reflect on the values and progress of our country. Canada is a unique country because of our mix of cultures, languages, and traditions. Here in Scarborough–Guildwood, I see the beauty of that diversity every day from the local restaurants to cultural celebrations. I am so proud to be part of a community that uplifts, supports and values one another.

This Canada Day, let us honour the many communities who have worked together to build this great country that we now call home. Whether you're visting the Guild Park and Gardens, catching fireworks, enjoying time with family and friends, or simply taking a walk along Scarborough Bluffs, I hope this Canada Day brings you a sense of pride and peace.

From my family and team to yours, Happy Canada Day! Wishing you a joyful and safe celebration. Let's keep working together to build a stronger Scarborough–Guildwood and Canada.

Sincerely,

*Andrea Hazell*

**Andrea Hazell**
**Member Provincial Parliament**
**Scarborough-Guildwood**
Third Deputy Chair of the Committee of the Whole House
Second Vice-Chair, Standing Committee on Social Policy

Constituency Office 3785 Kingston Road Unit B1, Scarborough, ON M1J 3M4 Tel 416-281-2787 I Fax 416-2360 I Email ahazell.mpp.co@liberal.ola.org
www.andreahazell.onmpp.ca



கனடிய செய்திகள் Canadian News

# தமிழ்க் கனடியர்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற முதலாமவர் என்ற புகழுக்குரிய மாகாண சபை உறுப்பினர் லோகன் கணபதியைச் சந்தித்த அனுபவம் மறக்க முடியாதது

## பிரித்தானியாவின் கிங்ஸ்ரன் நகரின் மேயராகக் கடமையாற்றி தற்போதும் கவுன்சிலராக தொடர்ந்தும் பணியர்றறும் வைத்தீஸ்வரன் தயாளன் கனடா உதயன் ஆசிரிய பீடத்திடம் தெரிவிப்பு

**(ஸ்காபுறோவிலிருந்து ஆர்.என். லோகேந்திரலிங்கம்)**



“ஐந்து இலட்சத்திற்கும்அதிகமாக கனடிய தேசத்தில் புகழோடும் பெருமையோடும் வாழும் தமிழ்க் கனடியர்களில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற முதலாமவர் என்ற புகழுக்குரிய மாகாண சபை உறுப்பினர் லோகன் கணபதி என்னும் அரசியல் தலைவரைச் சந்திக்கக் கிட்டிய வாய்ப்பு மிகவும் பெருமதியானது. கனடாவாழ் தமிழ் மக்கள் மாத்திரமல்ல ஏனைய சமூகத்தவர்களும் நன்கு நேசிக்கும் அரசியல் தலைவரான அவர்களைச் சந்தித்த அனுபவம் மறக்க முடியாதது”.

.இவ்வாறு, பிரித்தானியாவின் கிங்ஸ்ரன் நகரின் மேயராகக் கடமையாற்றி தற்போதும் கவுன்சிலராக தொடர்ந்தும் பணியாற்றுபவரும் மற்றும் இலத்திரனியல் பொறியியலாளர் அத்தடன் அங்கு சிறந்த அரசியல் செயற்பாட்டாளராகவும் விளங்கும் வைத்தீஸ்வரன் தயாளன் என்னும் மக்கள் சேவையாளர் கனடா உதயன் ஆசிரிய பீடத்திடம் மகிழ்ச்சியோடு தெரிவித்தார். புதன்கிழமை 25ம் திகதி பிற்பகல் மார்க்கம் நகரில் உள்ள மார்க்கம்-தோர்னிஹில் தொகுதியின் மாகாண சபை உறுப்பினர் லோகன் கணபதி அவர்களின் அலுவலகத்தில் அவரை சந்தித்த பின்னர் உதயன் ஆசிரிய பீடத்தின் உறுப்பினர்களோடு உரையாடிய போது தெரிவித்தார்.




யாழ்ப்பாணம் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி பழைய மாணவரான வைத்தீஸ்வரன் தயாளன் 1970ம் ஆண்டளவில் இங்கிலாந்துக்குச் சென்று அங்கு இலத்திரனியல் மற்றும் கொம்பியூட்டர் துறையில் பட்டங்களைப் பெற்று பல பதவிகளைப் வகித்த பின்னர் பணியிலிருந்து ஓய்வு எடுத்ததன்ல்வர் பின்னர் பொதுப் பணிகளிலும் தமிழ் மொழி சார்ந்த கற்பித்தல் பணியிலும் அரசியல் செயற்பாடுகளிலும் பங்கெடுத்து முழு நேர மக்கள் பணியாளராக விளங்குகின்றார்.

அன்னாரை தனது அலுவலகத்தில் சந்தித்த மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்களும் மிகவும் மகிழ்ச்சியுடன் தயாளன் அவர்களோடு நீண்ட நேரம் உரையாடிய பின்னர் அவரை கௌரவிக்கும் முகமான மாகாண அரசாங்கத்தின் சார்பிலும் மாகாண முதல்வரின் சார்பிலும் பாராட்டுப் பத்திரம் ஒன்றை தயாளன் அவர்களுக்கு வழங்கினார்.

இருவரும் உரையாடிய சுமார் ஒரு மணிநேரத்தில் பரஸ்பரம் இங்கிலாந்து-கனடிய தமிழ் மக்கள் தொடர்பாகவும் அவர்களது வாழ்வியல் மேம்பாடு தொடர்பாகவும் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

# Middlefield Seniors Wellness Club அமைப்பினர் நடத்திய வருடாந்த கோடைகால ஒன்றுகூடலும் தந்தையர் தினக் கொண்டாட்டமும்










கனடா ஒன்றாரியோ மாகாணத்தில் நீண்ட காலமாக இயங்கிவரும் முது தமிழர்களுக்குரிய சங்கமான **Middlefield Seniors Wellness Club** அமைப்பினர் நடத்திய வருடாந்த கோடைகால ஒன்றுகூடலும் தந்தையர் தினக் கொண்டாட்டமும் கடந்த 25ம் திகதி புதன்கிழமையன்று காலை 10.00 தொடக்கம் ஸ்காபுறோ-மார்க்கம் நகரங்களுக்கிடையில் உள்ள மிலிக்கன் பூங்காவில் இலக்கம்-1 என்னும் கூடாரத்திற்கு அருகில் ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது.

அமைப்பின் தற்போதைய தலைவர் திரு டேவிற் தலைமையில் நடைபெற்ற இந்த ஒன்று கூடல் மற்றும் தந்தையர் தின விழாவில் நூற்றுக்கணக்கான தமிழ் பேசும் மூத்தோர்கள் அன்னையர்கள் தந்தையர்கள் என பல தரப்பினரும் இணைந்து அன்றைய பொழுதை மகிழ்ச்சியுடன் கழிக்க தயாராகிக் கொண்டிருந்தனர்.

மேற்படி நிகழ்விற்கு கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பெற்றிருந்தார்.

வளர்ந்தோருக்குரிய விளையாட்டுக்கள் மற்றும் பொழுது போக்கு அம்சங்கள் பலவும் மற்றும் காலை மற்றும் மதிய உணவும் பரிமாறப்பெற்றன.

அங்கு “தந்தையர் தின“ உரையாற்றிய உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் தனது உரையில் தந்தையர்களின் சிறப்புக்களை எடுத்துரை குறிப்பாக எமது தாய் மண்ணில் தந்தையர்கள் தங்கள் குடும்பத்திற்காகசுவும் தமது பிள்ளைகளுக்கு உணவையும் கல்வியையும் ஊட்டி வளர்க்க கடுமையாக வேலை செய்து தங்கள் உடலை வருத்தி பாடுபட்ட அவர்களின் சிறப்புக்களை உயர்வாக எடுத்துச் சொன்னார்.

அத்துடன் அவர் தனது உரையில் தொடர்ந்து எமது யாழ்ப்பாண மண்ணில் அண்மைக்காலமாக இளம் தந்தையர்கள் பலர் குறிப்பாக 35 வயதுக்கு குறைந்தவர்கள் தங்கள் குடும்பப் பிரச்சனைகள் காரணமாகவும் வறுமைகாரணமாகவும் தற்கொலை செய்வதும் மற்றும் விபத்துக்களில் மரணத்தை தழுவுவது தொடர்பான விபரங்களை எடுத்துரைத்து அங்கு அண்மையில் விபத்துக்களாலும் குடும்ப சச்சரவுகளினாலும் மரணத்தைத் தழுவிய இளம் தந்தையர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக ஒரு நிமிட அஞ்சலி செலுத்தும் வண்ணம் அங்கிருந்தவர்களை வேண்டிக்கொண்டார்.

மேலும் **Middlefield Seniors Wellness Club** அமைப்பின் அங்கத்தவர்களான பல தந்தையர்களும் அன்னையர்களுமாக தங்கள் கலை திறமைகளை சபையோருக்கு சமர்ப்பணம் செய்தார்கள்.

அத்துடன் அங்கு உரையாற்றவென அழைக்கப்பெற்றிருந்த சமூகத் தொண்டரும் பொறியியலாளரும் வீடு விற்பனை முகவருமான கிள்ளிவளவன் செல்லையா அவர்கள் விரைவில் நடைபெறவுள்ள மார்க்கம் நகரசபையின் 7ம் வட்டாரத்திற்கான தேர்தலில் போட்டியிடுவதாக முன்வந்துள்ள தனது விருப்பத்தை அங்கு பகிரங்கமாக அறிவித்து தனது வெற்றிக்காக தனது பக்கம் ஆதரவை வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மாகாண மட்ட தற்காப்பு கலை போட்டிகளில் துணுக்காய் விநாயகபுரம் அ.த.க பாடசாலை வரலாற்றுச் சாதனை!



வட மாகாண பாடசாலகளுக் கிடையே வட மாகாண கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட மல்யுத்தம், யூடோ, தைகொண்டே போட்டிகளில் துணுக்காய் விநாயகபுரம் அ.த.க பாடசாலை 30 பதக்கங்களை பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

இம்மாதம் 22,23,24 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு மாவட்ட உள்ளக விளையாட்டு அரங்கில் இப்போட்டிகள் நடைபெற்றன.

வடமாகாணமட்ட மல்யுத்தம், ஜுடோ, தைகொண்டே போட்டிகளில் இப்பாடசாலையைச் சேர்ந்த 22 மாணவர்கள் பங்குபற்றியிருந்தார்கள். இதில் இப் பாடசாலை அணி மொத்தமாக 30 பதக்கங்களை பெற்று வரலாற்று சாதனையை பதிவு செய்தது.

இதில் பங்குபற்றியோர் 11 தங்கம், 9 வெள்ளி, 10 வெண்கலம் உட்பட 30 பதக்கங்களை பெற்று பாடசாலைக்கும் துணுக்காய் வலயத்திற்கும் பெருமையை சேர்த்துள்ளார்கள்.



அத்தோடு பெண்கள் அணியினர் மல்யுத்தப் போட்டியில் மாகாண சம்பியனாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். கடந்த வருடமும் இப்பாடசாலை 18 பதங்கங்களை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மனிதப் புதைகுழி நீதி போராட்டத்தில் அமைச்சர் சந்திரசேகரனை தடுத்தது தவறு என்கிறார் காணாமல் ஆக்கப்பட்ட சங்கத் தலைவி கனகரஞ்சனி



செம்மணி மனிதப் புதைகுழிக்கான போராட்டத்தில் கலந்து கொள்ள வருகை தந்த அமைச்சர் சந்திரசேகரனை சிலர் தடுத்தமை கண்டிக்கத்தக்க விடையம் என வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி கனகரஞ்சினி தெரிவித்தார்.

கடந்த 25ம் திகதி புதன்கிழமை யாழ்ப்பாணம் வருகை தந்த ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் வோல்டர் ராக் அவர்களை சந்தித்த பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் உரிய முறையில் விசாரணை செய்யப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்.

அதனை வலியுறுத்தி இடம்பெற்ற போராட்டத்தில் அமைச்சர் சந்திரசேகரன் கலந்து கொண்டிருந்த வேளையில் சிலர் அவரை தடுத்தனர் அது தவறு அதற்கு நாம் மனம் வருந்துகிறோம்.

செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி வேண்டி போராடும் தாய்மார்கள் என்ற வகையில் எமது நீதிக்கான பயணத்தில் ஒன்றிணைவபவர்களை புறக்கணிப்பது எமது நோக்கம் அல்ல.

அமைச்சர் எமது போராட்டத்திற்கு வருகை தந்தது நீதியை எதிர்பார்த்து காத்திருக்கின்ற எமக்கு சாதகமான விடயம் அவரும் இந்த போராட்டத்திற்கு கலந்து கொண்டவராய் பொறுப்பு கூறுவதாக இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# போதைக்கு எதிராக சங்கானையில் நடைபெற்ற மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம்!



சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு 25ம் திகதி புதன்கிழமை அன்றையதினம் சங்கானை பேருந்து நிலையத்திற்கு முன்பாக மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

போதைப்பொருள் பாவனையானது அதிகரித்து காணப்படுகின்ற நிலையில் அதன் தாக்கம் மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள், குடும்பத்தவர்கள் என சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவரிடத்திலும் மிகவும் மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்றது. இதனால் குடும்பங்களிடையே பல்வேறு விதமான பிரச்சினைகளும் ஏற்படுகின்றன.

இவ்வாறான பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்கு போதைப்பொருள் பாவனையில் இருந்து அனைவரையும் மீட்கும் நோக்கில் இந்த விழிப்புணர்வு போராட்டமானது முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் "போதை அற்ற வாழ்வே ஆரோக்கியத்திற்கான வழி, எம் சமூகத்தை அழிக்கும் மது எமக்கு தேவை தானா?, அரசே புதிய மதுபான சாலைகளுக்கு அனுமதி வழங்காதே, மது ஒழிப்பில் ஈடுபடும் ஜனாதிபதிக்கு கை கொடுப்போம், போதையெனும் சாக்கடையில் விழாதீர்கள்" எனும் வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தி, கோ'மிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனல்தினர் ஏற்பாடு செய்த இந்தப் போராட்டத்திற்கு சங்கானை பிரதேச செயலகத்தினர், வலிகாமம் மேற்கு பிரதேச சபையினர், சங்கானை பல நோக்கு கூட்டுறவு சங்கத்தினர், மானிப்பாய் பொலிஸார், வட்டுக்கோட்டை பொலிஸார், முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத்தினர், அந்திரான் தோற்பொருள் உற்பத்தி கூட்டுறவு சங்கத்தினர் மற்றும் பொதுமக்கள் என பலரும் ஆதரவு வழங்கினர்.



தமிழ் முற்போக்கு கூட்டணி - இலங்கை
දෙමළ ප්‍රගතිශීලී සංධානය - ශ්‍රී ලංකාව
Tamil Progressive Alliance - SriLanka

# இலங்கையில், ஐநா ஈழத்தமிழரை கைவிட்டது. அதேபோன்று மலையக தமிழரையும் கை விட்டுவிடாதீர்கள்

## மனித உரிமை ஆணையாளர் வொல்கர் டர்க்கிடம் மனோ கணேசன் நேரடியாக வலியுறுத்தினார்

ஐநா சபையும், அதற்குள் வரும் மனித உரிமை ஆணையமும், இலங்கையில் வாழும் ஈழத்தமிழ் மக்களை கை விட்டு விட்டது. கொடும் யுத்தம் நடந்த போது ஐநா சபை வடக்கில் இருந்து முன்னறிவித்தல் இல்லாமல் வெளியேறி, அங்கே சாட்சியம் இல்லாத யுத்தம் (War without Witness) நடக்க காரணமாக அமைந்து விட்டது. இன்று யுத்தம் முடிந்து 15 வருடங்கள் ஆகியும், கொலையானோர், காணாமல் போனோர் தொடர்பில் பொறுப்பு கூறல் நடை பெறவில்லை. அரசியல் கைதிகள் பிரச்சினை முழுமையாக முடிவுக்கு வரவில்லை. யுத்தம் நடைபெற மூல காரணமாக அமைந்துள்ள இனப்பிரச்சினை தீர்வுக்கு வரவில்லை. ஆகவேதான், ஈழத்தமிழ் உடன் பிறப்புகள் ஐநா சபை தங்களை கைவிட்டு விட்டதாக நினைக்கிறார்கள். ஈழத்தமிழ் மக்களை கைவிட்டதை போன்று, இந்நாட்டில் வாழும் மலையக தமிழ் மக்களையும் கைவிட்டு விட வேண்டாம் என உங்களை கோருகிறேன் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், இலங்கை வந்துள்ள ஐநா மனித உரிமை ஆணையர் வொல்கர் டர்க்கிடம் நேரடியாக தெரிவித்தார்.

ஐநா மனித உரிமை ஆணையர் வொல்கர் டர்க்கிற்கும், எதிர் கட்சி தலைவர்களுக்கும் இடையில் சந்திப்பு பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது. இதன் போது தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் மேலும் கூறியதாவது.

இலங்கையில் மக்கள் மத்தியில் மிகவும் பின் தங்கிய பிரிவினராக வாழ்கிறார்கள். காணி உரிமை, வீட்டு உரிமை, வறுமை, சிசு மரணம், சுகாதாரம். தொழில் நிலைமைகள் என்ற எதுவாக இருந்தாலும், அவை அனைத்திலும் மிகவும் குறை வளர்ச்சி கொண்ட மக்களாக இலங்கையில் வாழும் சமீபத்திய இந்திய வம்சாவளி மலையக மக்கள் குறிப்பாக, பெருந்தோட்டங்களில் வாழும் மக்கள், இருக்கிறார்கள்.

சில வருடங்களுக்கு முன் இலங்கை வந்த ஐநா விசேட அறிக்கையாளர்



டொமொயா ஒபொகடா, தனது அறிக்கையில் பெருந்தோட்ட மக்கள் தொடர்பில் காத்திரமாக குறிப்பிட்டு உள்ளார். அந்த அறிக்கையை அவர் உங்கள் ஐநா மனித உரிமை ஆணையகத்தின் 51வது அவைக்கு சமர்பித்தார். அதை கவனத்தில் கொள்ளுமாறு உங்களை கோருகிறேன்.

இலங்கையை பற்றி அறிக்கை சமர்பிக்கும் போது, தவறாமல் இலங்கையின் வடகிழக்குக்கு வெளியே வாழும் மலையக மக்கள் குறிப்பாக, பெருந்தோட்டங்களில் வாழும் மக்கள் தொட ர்பில் கவனம் செலுத்தும் படி, தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் என்ற முறையில் நான் உங்களை மேலும் கோருகிறேன்.

இலங்கையில் வாழும் மலையக மக்கள் இன்னமும் முழுமையான குடி மக்களாக இந்நாட்டில் வாழ வில்லை. இரண்டாம் தர பிரஜைகளாகவே வாழ்கிறார்கள். காணி உரிமை உட்பட உரிமைகள் உரித்தாகும் போதுதான், அவர்களது குடி உரிமை முழுமை அடையும். அதை ஐநா சபையும், அதற்குள் வரும் மனித உரிமை ஆணையமும் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும்.



# அநுர அரசு கால் வைக்கும் இடமெல்லாம் கோரமாய் கண்ணிவெடிகள்

**"ஜனாதிபதிக்கும் அரசுக்கும் உள்நாட்டுக்குள் தான் கால் வைக்கும் இடமெல்லாம் கண்ணி வெடிகள், மிதிவெடிகள் என்று பார்த்தால் இஸ்ரேல் - காஸா போர், இஸ்ரேல் - ஈரான் யுத்தம் போன்றவற்றில் ஏவப்படும் ஏவுகணைகளும் எங்கே மீண்டும் இலங்கையில் எரிபொருள் வரிசை யுகத்தை உருவாக்கி மீண்டும் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி விடுமோ என்ற அச்சத்தை அரசுக்கு ஏற்படுத்தும் வகையில் இலங்கையிலும் வெடிக்க ஆரம்பித்துள்ளன."**

**-------------------------------------------------------- - கே. பாலா ----**

இலங்கையின் அரசியலில் எவருமே நிகழ்த்தாத சாதனைகளை நிகழ்த்தி ஆட்சி பீடம் ஏறிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் அவரின் ஜே.வி.பி. - தேசியமக்கள் சக்தி அரசும் தற்போது இலங்கை அரசியலில் எந்த ஜனாதிபதியும் அரசும் எதிர்கொள்ளாதளவுக்கு நெருக்கடிகள், சர்ச்சைகள், குற்றச் சாட்டுக்கள், விமர்சனங்கள், கேலிகளுக்குள் சிக்கி படாதபாடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். ஜனாதிபதியும் அரசும் கால் வைக்கும் இடமெல்லாம் கண்ணிவெடிகளும் மிதி வெடிகளாகவுமேயுள்ளன. அதுமட்டுமன்றி இஸ்ரேல் - காஸா போர், இஸ்ரேல் - ஈரான் யுத்தம் போன்றவற்றில் ஏவப்படும் ஏவுகணைகளும் இலங்கை ஆட்சியாளர் தலைக்கு மேலாகவும் வெடிக்க ஆரம்பித்துள்ளன.

ஜனாதிபதி தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்க பெற்ற வெற்றியின் மூலம் பாராளுமன்றத்தேர்தலில் 159 ஆசனங்கள் என்ற வரலாற்று வெற்றியுடன் தேசியமக்கள் சக்தி அரசு அரியணை ஏறிய நாள் முதல் கலாநிதிப் பட்டம், அரிசி, தேங்காய், குரங்கு, உப்பு, பாதாள உலகம், படுகொலைகள், சர்வாதிகாரம், இந்திய பிரதமரின் வருகை, ஜனாதிபதியின் இந்திய, சீன விஜயங்கள், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் வாக்கு வீழ்ச்சி, மின்சாரக் கட்டணம், வடக்கு காணி சுவீகரிப்பு, 323 சிவப்பு முத்திரை கொள்கலன்கள் விடுவிப்பு, என பல சர்ச்சைகளில் சிக்கி சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கின்றது.

ஆனாலும் ஜனாதிபதிக்கும் தேசிய மக்கள் சக்தி அரசுக்கும் எதிரான இவ்வாறான சர்ச்சைகள், குற்றச்சாட்டுக்கள், விமர்சனங்கள், கேலிகளுக்கு ஜனாதிபதியோ அரசோ இன்றுவரை சரியான பதிலையோ தீர்வுகளையோ விளக்கங்களையோ வழங்காது இவற்றை மக்களை மறக்கடிக்கச்செய்யும் முயற்சியாகவும் இவ்வாறான சர்ச்சைகளை குற்றச்சாட்டுகளை, விமர்சனங்களை முன்வைக்கும் எதிர்க் கட்சிகளை அச்சுறுத்தும், அடக்கும் விதமாகவும் அரசியல் கைதுகளை அதிகரித்துள்ள நிலையில்தான் "சிறைக்கைதிகளுக்கான ஜனாதிபதியின் பொதுமன்னிப்பில் மோசடி" என்ற கண்ணிவெடிமீது அரசு காலை வைத்தது.

ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படுகின்ற சிறைக் கைதிகள் தொடர்பிலேயே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவும் அவரின் தேசிய மக்கள் சக்தி அரசும் தற்போது கடும் குற்றச்சாட்டுகளையும் விமர்சனங்களையும் எதிர்கொண்டுள்ளனர். தேசிய பொசன் தின கொண்டாட்டத்தை முன்னிட்டு ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்ய அனுமதிக்கப்பட்ட சிறை கைதிகளுக்கு பதிலாக வேறு கைதி ஒருவர் ஊழல், மோசடிக் குற்றச்சாட்டில் குற்றவாளியாக நீதிமன்றத்தினால் தீர்ப்பு வழங்கப்பட்ட 10 நாட்களுக்குள் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டதை அடுத்தே அரசுக்கு எதிரான இந்த சர்ச்சை வெடித்துள்ளது.

தேசிய பொசன் தின கொண்டாட்டத்தை முன்னிட்டு நாடு முழுவதும் 29 சிறைகளிலிருந்து 338 கைதிகள் ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டனர். இவர்களில் அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தால் குற்றவாளி என அறிவிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்ட சிறைக் கைதி ஒருவரும் இம்முறை ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டிருந்தார். நாற்பது லட்சம் ரூபா நிதி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட நிதி நிறுவனமொன்றின் அநுராதபுரம் கிளை முகாமையாளரான இவருக்கு சிறைத் தண்டனை வழங்கப்பட்ட 10 நாட்களுக்குள் ஜனாதிபதியால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

தேசிய பொசன் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியால் வழங்கப்பட்ட பொது மன்னிப்பின் கீழ் இந்தக் குற்றவாளி விடுதலை செய்யப்படுவதாக சிறைச்சாலை அதிகாரிகள் நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்தனர். அநுராதபுரம் சிறைச்சாலை அதிகாரிகள், எழுத்து மூலம் நீதிமன்றத்திற்கு முன்வைத்த ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு வடமத்திய மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி லக்மாலி ஹேவாசமினால், இந்தக் குற்றவாளி இவருக்கு எதிரான வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டார்.

இந்நிலையில் 2025 பொசன் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் அநு ராதபுரம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த டபிள்யூ.எச். அதுல திலகரத்ன என்பவர் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு தீர்ப்புவழங்கப்படட 10 தினங்களுக்குள் விடுவிக்கப்பட்டதாக பாராளுமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவந்த எதிர்க்கட்சி, இந்தச் சம்பவத்தின் பின்னணியில் கடுமையான முறைகேடு இருப்பதாக குற்றம்சாட்டிய நிலையிலேயே கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதையாக "சிறைக்கைதிகளுக்கான ஜனாதிபதி பொது மன்னிப்பு" என்ற போர்வையில் நடந்த மோசடிகள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்க பதவியேற்ற பின்னர் "சிறைக்கைதிகளுக்கான ஜனாதிபதி பொது மன்னிப்பு" என்ற போர்வையில் சட்டவிரோதமாக 68 கைதிகள் இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இவ்வாறான நிலையில் "ஜனாதிபதி பொதுமன்னிப்பு" என்றபெயரில் கைதி ஒருவர் மோசடியாக விடுதலை செய்யப்பட்டமை தொடர்பில் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய பணி இடைநீக்கம் செய்யப்பட்டு கொழும்பு மேலதிக நீதவான் மஞ்சுள ரத்நாயக்க முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது, நீதிமன்றத்தில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ், 2024 ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் தினத்தில் 57 கைதிகளும், இந்த ஆண்டு சுதந்திர தினத்தின் போது மேலும் 11 கைதிகளும் தேவையான நிபந்தனைகளை பூர்த்தி செய்யாமல் முறைகேடாக விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து அதிர்ச்சியை ஏற்படுத்தினார்.

ஜனாதிபதியின் பொதுமன்னிப்பை தவறாக பயன்படுத்தி சில கைதிகளை விடுதலை செய்ததாக குற்றம்சாட்டி சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் து'ர உபுல்தெனிய, அநுராதபுரம் சிறைச்சாலையின் அத்தியட்சர் மோகன் கருணாரத்ன ஆகியோர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில், இலங்கையில் தேசிய நிகழ்வுகளைக் கருத்தில் கொண்டு வழங்கப்படும் ஜனாதிபதியின் பொதுமன்னிப்புக்கான நிபந்தனைகளை, இனிவரும் காலங்களில் நீதி அமைச்சு கடுமையாக்கும் என்று நீதியமைச்சர் ஹர்சன நாணயக்கார தெரிவித்துள்ளார். அதேநேரம் கடந்த ஆட்சிகளிலும் இவ்வாறு ஜனாதிபதி பொது மன்னிப்பு தவறாக பயன் படுத்தப்பட்டுள்ளதா என்பதுதொடர்பில் விசாரணைகள் நடத்தப்படுமென அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ அறிவித்துள்ளார்.

இதேவேளை தேசிய பொசன் தினத்தையொட்டி ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்ட 388 கைதிகளின் முழுப் பட்டியலையும், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கோரியுள்ளது. ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிற்கு அனுப்பப்பட்ட கைதிகளின் பரிந்துரை பட்டியல் மற்றும் அவர் அங்கீகரித்த உரிய பட்டியல் இரண்டும் பொதுமக்களுக்கு பகிரங்கப்படுத்தப்பட வேண்டும். ஜனாதிபதி யார் யாருக்கெல்லாம் மன்னிப்பு வழங்க அங்கீகாரம் அளித்தார் என்பதைப் பற்றி மக்களுக்கு பதிலளிக்கும் கடமை ஜனாதிபதிக்கு இருக்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சி வலியுறுத்தியுள்ளது.

"ஜனாதிபதி பொதுமன்னிப்பு" மோசடியாக பயன்படுத்தப்பட்டதாக குற்றம்சாட்டப்பட்டு சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய, அநுராதபுரம் சிறைச்சாலையின் அத்தியட்சர் மோகன் கருணாரத்ன ஆகியோர் கைது செய்யப்பட்டாலும் சிறைக்கைதிகள் மோசடியாக விடுவிக்கப்பட்டதன் பின்னணியில் அரசியல் இல்லாமல் இல்லை. இவ்விருவர் கைது தொடர்பிலும் அரசு காட்டிய அவசரம் அதன் பின்னால் உள்ள அரசியலை மூடி மறைக்கும் ஒரு கைங்கரியமாகவே பார்க்கப்படுகின்றது. அரசியல் அழுத்தங்கள் அல்லது அரசியல் செல்வாக்கு இல்லாமல் ஜனாதிபதியின் பொது மன்னிப்பை மோசடியாக பயன்படுத்தும் தைரியம் இலகுவில் யாருக்கும் வராது.

ஜனாதிபதியின் பொதுமன்னிப்பை முறையற்ற வகையில் பயன்படுத்தி விடுதலை செய்யப்பட்டதாக கூறப்படும் அதுல திலகரத்ன என்ற நபர் குற்றப்புலனாய்வு பிரிவினரால் தேடப்படும் நிலையில், அவர் தனக்கு எதிரான வேறு வழக்கு விசாரணையொன்றுக்காக அநுராதபுரம் நீதவான் நீதிமன்றத்திற்கு வந்துள்ளமையும் அந்த நீதிமன்றத்தில் இடம்பெற்ற அநுராதபுரம் சிறைச்சாலை பணிப்பாளருக்கு எதிரான வழக்கு விசாரணையையும் பார்வையிட்டுள்ளமையும் தான் நீதிமன்றத்தில் இருக்கின்றேன் என்று கையுயர்த்தி நீதவானிடமும் தெரிவித்துள்மையும் இதனை உறுதிப்படுத்துகின்றன.

அவர் அநுராதபுரம் நீதிமன்றத்தில் இடம்பெற்ற தனக்கு எதிரான வேறு வழக்கொன்றில் தனது சட்டத்தரணியுடன் கலந்துகொண்டிருந்ததுடன், அந்த விசாரணை முடிவடைந்த பின்னர், சிறைச்சாலை பணிப்பாளருக்கு எதிரான வழக்கு விசாரணை நடைபெற்ற பகுதிக்கு சென்று அங்கு பார்வையாளர் பகுதியில் இருந்து வழக்கு விசாரணைகளையும் பார்வையிட்டுள்ளார். இவ்வேளையில் சிறைச்சாலை பணிப்பாளர் சார்பாக ஆஜராகிய சட்டத்தரணி நீதிமன்றத்தில் விளக்கமளித்து, இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள சிறைச்சாலை பணிப்பாளர் சட்டவிரோதமான முறையில் அதுல திலகரட்ணவை விடுவிக்கவில்லை என்றும், விடுதலையான நபர் இந்த நீதிமன்றத்தில் இப்போது இருக்கின்றார் என்றும் கூறியுள்ளார். அவர் சட்டப்படி விடுதலையான காரணத்தினாலேயே இங்கே இருக்கின்றார் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்போது அங்கிருந்த அதுல திலகரட்ன, தான் இங்கே இருக்கின்றேன் என்று கையுயர்த்தி கூறியுள்ளார். இவ்வேளையில் நீதிமன்ற வளாகத்தில் குற்றப்புலனாய்வு அதிகாரிகளும் இருந்துள்ளனர். எவ்வாறாயினும் குறித்த வழக்கு விசாரணை முடிந்த பின்னர், அங்கிருந்து அதுல திலகரட்ன தனது நண்பர்களுடன் சிறிது நேரம் கலந்துரையாடியதுடன், குற்றப்புலனாய்வு பிரிவு அதிகாரிகளுக்கு முன்னாலேயே அங்கிருந்து வெளியேறி சென்றுள்ளார்.

அவர் ஜனாதிபதியின் பொது மன்னிப்பை மோசடியாக பயன்படுத்தி விடுதலை செய்யப்பட்டிருந்தால் ஏன் அவரை அங்கிருந்த குற்றப்புலனாய்வு பிரிவினர் கைது செய்யவில்லை? அவரை கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிடவில்லை. அதனால் கைது செய்யவில்லை என்றால் ஏன் அவரை கைது செய்யுமாறு உத்தரவிடக்கோரி அரசு தரப்பு நீதிமன்றத்தை இதுவரையில் நாடவில்லை? அவர் அவ்வாறு மோசடியாக விடுதலை செய்யப்பட்டிருந்தால் எவ்வாறு இதுவரையில் தலைமைறைவாகாது தைரியமாக நீதிமன்றம் வந்து தான் இங்கு தான் இருப்பதாக கூறியிருப்பார்? ஆகவேதான் ஜனாதிபதி பொதுமன்னிப்பு என்ற விடயத்தை சிறை அதிகாரிகள் தவறாகப் பயன்படுத்துகின்றனரா அல்லது அமைச்சர்கள் தவறாக பயன்படுத்துகின்றனரா அல்லது ஜனாதிபதியே தவறாகப் பயன்படுத்திவிட்டு அதிகாரிகளை பலிக்கடாவாக்குகின்றாரா என்ற நியாயமான சந்தேகம் எழுந்துள்ளது. எனினும் இதனையும் இந்த அரசு எந்த நியாயமான பதிலும் தீர்வும் வழங்காது கடந்து சென்று இன்னுமொரு சர்ச்சையில் சிக்கிக்கொள்ளும்.

ஜனாதிபதிக்கும் அரசுக்கும் உள்நாட்டுக்குள் தான் கால் வைக்கும் இடமெல்லாம் கண்ணி வெடிகள், மிதிவெடிகள் என்று பார்த்தால் இஸ்ரேல் - காஸா போர், இஸ்ரேல் - ஈரான் யுத்தம் போன்றவற்றில் ஏவப்படும் ஏவுகணைகளும் எங்கே மீண்டும் இலங்கையில் எரிபொருள் வரிசை யுகத்தை ஏற்படுத்தி விடுமோ என்ற அச்சத்தை அரசுக்கு ஏற்படுத்தும் வகையில் இலங்கையிலும் வெடிக்க ஆரம்பித்துள்ளன, ஜனாதிபதியாகவிருந்த கோத்தபாய ராஜபக்ஸவின் வீழ்ச்சிக்கும் அவரின் அரசின் வீழ்ச்சிக்கும் ஆரம்ப புள்ளியாக அமைந்தது எரிபொருளுக்கான வரிசை என்பதை எவரும் இலகுவில் மறந்துவிட முடியாது. அதனால் தான் தற்போதைய இஸ்ரேல் - ஈரான் யுத்தமும் ஜனாதிபதி அநுரகுமாரவுக்கும் அவரின் அரசுக்கும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

# "ரஷ்யா ஈரானுக்கு ஆதரவாக நிற்கின்றது: ஈரானிய இறையாண்மை மீதான கொடூர தாக்குதலுக்கு பின்னர் புடின் அமெரிக்க ஆக்கிரமிப்பை கண்டித்து ஆதரவளிக்கிறார்"




### யூரேஷிய கூட்டணிகளில் ஒரு திருப்புமுனை

1979 இஸ்லாமிய புரட்சிக்குப் பிறகு ஈரானிய அணு வசதிகளின் மீது அமெரிக்கா நடத்திய மிகக் கடுமையான தாக்குதல்களுக்கு உடனடியாக பிறகு, மாஸ்கோவில் ஒரு முக்கியமான இராஜதந்திர சந்திப்பு நடந்தது. ஜூன் 23, 2025 அன்று, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் ஈரானின் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்பாஸ் அராக்சியை சந்தித்தார். மேலும் ஆயத்தலா அலி காமெனேயியால் நேரடியாக அனுப்பப்பட்ட ஒரு அவசர செய்தி: "ஈரானுக்கு பேசாமல் செயல்படும் கூட்டாளிகள் தேவை."

கிரெம்லினில் நடந்த இந்த வரலாற்று சந்திப்பு, மாஸ்கோ - தெஹ்ரான் கூட்டை மேலும் வலுப்படுத்தியது. மேற்கத்திய இராணுவவாதம், பிராந்திய ஸ்திரத்தன்மை மற்றும் இஸ்ரேல் - அமெரிக்காவின் படையெடுப்புகளுக்கு எதிராக இறையாண்மையை பாதுகாப்பதில் இரு நாடுகளும் ஒன்றிணைந்துள்ளன.

### மாஸ்கோ சந்திப்பு: போர் விமானங்களுக்கு இடையே இராஜதந்திரம்

வெளியுறவு அமைச்சர் அராக்சி, ஆயத்தலா காமெனேயியின் தனிப்பட்ட கடிதத்துடன் மாஸ்கோ வந்தார். அதில், புடின் கடுமையான நிலைப்பாட்டை எடுத்து, ஈரானுக்கு நடைமுறை ஆதரவை வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. ஒரு நாளுக்கு முன்பு, அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய விமானங்கள் ஈரானின் ஃபோர்டோ, நதான்ஸ் மற்றும் இஸ்பஹான் அணு தளங்களை தாக்கி, உள்கட்டமைப்பை சேதப்படுத்தின. ஆனால் ஈரானிய மக்களின் உறுதியை முறியடிக்க முடியவில்லை.

புடின், அராக்சியை நேரில் சந்தித்து, தெளிவான செய்தியை தெரிவித்தார்: "இது ஒரு இறையாண்மை மிக்க நாட்டின் மீதான தூண்டப்படாத தாக்குதல். ஈரானுடன் ரஷ்யா நின்று, நீதியையும் சமநிலையையும் மீட்டெடுக்க நடவடிக்கைகளை எடுக்கும்."

இந்த தாக்குதல்களை "சர்வதேச சட்டத்தின் கடுமையான மீறல்" மற்றும் "உலக சமாதானத்தை அச்சுறுத்தும் செயல்" என்று புடின் கண்டித்தார்.

### ஈரானின் கோரிக்கைகள் - மற்றும் அது ஏன் முக்கியமானது?

இராஜதந்திர ஆதாரங்களின்படி, ஈரானின் கோரிக்கைகள் தெளிவாகவும், உறுதியாகவும், அவசரமாகவும் இருந்தன:

- அமெரிக்கா - இஸ்ரேலின் தாக்குதல்களை கடுமையாக சர்வதேச அளவில் கண்டிக்க வேண்டும்.
- சேதமடைந்த அணு தளங்களை சரிசெய்ய உடனடி தொழில்நுட்ப உதவி.
- எதிர்கால தாக்குதல்களை தடுக்க உத்தியோடபூர்வ ஒத்துழைப்பு (இராணுவ/உளவுத்துறை ஒருங்கிணைப்பு உட்பட).
- ஐ.நா.வில் அமெரிக்க - இஸ்ரேல் வதந்திகளை எதிர்க்க விரிவான ஆதரவு.

ஈரான் தனது அணு திட்டம் அமைதியானது மற்றும் IAEA விதிமுறைகளுக்கு உட்பட்டது என்று வலியுறுத்தியது. 2025 ஜனவரியில் கையெழுத்தான ரஷ்யா - ஈரான் உத்தியோடபூர்வ கூட்டாண்மை ஒப்பந்தத்தை ரஷ்யா மதிக்க வேண்டும் என்று கோரியது.

### ரஷ்யாவின் பதில்: தீவிர வார்த்தைகள், உத்தியோகபூர்வ செயல்கள்

புடினின் பதில் முழுமையானதாக இருந்தது. நேரடியான இராணுவ நடவடிக்கைகளை முன்வைக்காமல், அவர் பின்வருவனவற்றிற்கு உறுதியளித்தார்:

- ஐ.நா. பாதுகாப்பு அவை உட்பட சர்வதேச சட்ட மன்றங்களில் ஈரானுக்கு ஆதரவு.
- சீனா மற்றும் BRICS நாடுகளுடன் இணைந்து தாக்குதல்களை கண்டித்தல்.
- புஷேர்-2 திட்டத்திற்கான அணு உதவிகளை துரிதப்படுத்துதல்.
- ரஷ்ய நிபுணர்கள் மூலம் சேத மதிப்பீடு மற்றும் மீட்பு உதவி.

கிரெம்லின் பேச்சாளர் டிமிட்ரி பெஸ்கோவ் அறிவித்தார்: "ஈரான் தனியாக இல்லை. ஈரானிய இறையாண்மையை ரஷ்யா மதிக்கிறது. ஈரானிய மக்களின் அரசியல் மற்றும் அறிவியல் முன்னேற்றத்தை தடுக்கும் எந்த நடவடிக்கையையும் நாங்கள் கண்டிக்கிறோம்."

### பரந்த தாக்கங்கள்: புதிய புவியியல் அரசியல் முன்னணி

இந்த சந்திப்பு ஒற்றுமையை விட அதிகமானது - இது யூரேஷிய புவியியலில் ஒரு பெரிய மாற்றத்தை குறிக்கிறது:

- ரஷ்யா - ஈரான் - சீனா முக்கோணம்: மேற்கத்திய ஆதிக்கத்தை எதிர்க்கும் இந்த கூட்டணி மத்திய கிழக்கு முதல் மத்திய ஆசியா வரை இராஜதந்திரத்தை மாற்றும்.
- பிளவுபட்ட உலக ஒழுங்கு: மேற்கு நாடுகள் சர்வதேச சட்டத்தை மீறும்போது, ரஷ்யா மற்றும் ஈரான் பலதுருவ உலகை ஊக்குவிக்கின்றன.
- ஆற்றல் அரசியல் மறுசீரமைப்பு: ஈரானிய எண்ணெய் ஏற்றுமதி மீண்டும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும்போது, மாற்று வழிகள் மற்றும் உத்தியோடபூர்வ இருப்புக்கள் பேச்சுவார்த்தையில் உள்ளன.
- உண்மையான ஆக்கிரமிப்பாளர்: அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் முரட்டுத்தனமான விளையாட்டு.


உலகம் இப்போது கேட்க வேண்டும்: உண்மையில் சமாதானத்தை யார் மீறுகிறார்கள்?

- ஈரான்: ஐயுநுயு மேற்பார்வையில் அமைதியான அணு ஆற்றலை வளர்த்து வரும் நாடு.
- ரஷ்யா: இராஜதந்திரத்தை ஊக்குவிக்கும் நிலைப்படுத்தும் சக்தி.
- அமெரிக்கா மற்றும் இஸ்ரேல்: ஒருதலைப்பட்சமாக தாக்கி, உள்கட்டமைப்பை சேதப்படுத்தியவர்கள்.

உண்மை தெளிவாக உள்ளது: அமெரிக்காவின் பேரரசு திமிர் மீண்டும் குழப்பத்தை உருவாக்கியுள்ளது. ஆனால் இந்த முறை, உலகம் எழுச்சியடைந்துள்ளது - எதிர்ப்பும் ஒற்றுமைப்படுத்தப்பட்டுள்ளது.

### ஈரான் தனியாக இல்லை என்பதை அமெரிக்காவும் இஸ்ரேலும் உணரவேண்டும்

மேற்கத்திய ஆக்கிரமிப்பின் இன்னொரு நாள் முடிவடைகிறது. ஆனால் அதை எதிர்க்கும் நாடுகளுக்கு ஒரு புதிய விடியல் தொடங்கியுள்ளது.




கிரெம்லின் முதல் தெஹ்ரான் தெருக்கள் வரை, செய்தி தெளிவாக உள்ளது: "நாங்கள் தலைவணங்க மாட்டோம். நாங்கள் வீழ மாட்டோம். கொடுங்கோன்மை இல்லாத எதிர்காலத்தை - எங்கள் சொந்தக் கைகளாலும் எங்கள் சொந்தக் கூட்டாளிகளாலும் - உருவாக்குவோம்."

புடின் மற்றும் அராக்சியின் கைகுலுக்கல் ஒரு இராஜதந்திர ரீதியானது மட்டுமல்ல - இது ஒற்றுமை, இறையாண்மை மற்றும் வலிமையின் சின்னம்.

நீண்டகாலமாக தனித்து நிற்கும் ஈரான், இப்போது ஒரு உத்தியோடபூர்வ கூட்டாளியை கண்டுள்ளது.

**எழுதியவர்: ஈழத்து நிலவன்**


## GTA Association of Tamil Seniors வழங்கும்
## கனடா தின கொண்டாட்டம்

நிகழ்வு விபரங்கள்:
-- நாள்: செவ்வாய், ஜூலை 1, 2025
-- நேரம்: காலை 10:00 மணி
-- இடம்: 3001 Markham Road, Unit #21 Scarborough Ontario M1X 1L6

**நிகழ்ச்சியின் சிறப்பம்சங்கள்:**
- எங்கள் தலைமை விருந்தினர் தலைமையில் கொடியேற்றும் விழா
- தேசிய கீதம்
- எம்.பி., கௌரவ ஷான் சென் அவர்களின் உரை
- எங்கள் தலைவர் . பேரம்பலம் சிங்கராஜா அவர்களின் வரவேற்பு உரை
- மூத்தவர்கள் மற்றும் இளைஞர்களின் துடிப்பான நடனங்கள், இசை நிகழ்ச்சிகள்

**இடம்பெறும் கலாச்சார நிகழ்ச்சிகள் மற்றும் அப்பம் தோசை வழங்கப்படும்.**
**அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகிறீர்கள்.**

GTA Association of Tamil Seniors
ராஜா: (416) 454-189

கனடிய செய்திகள் Canadian News

# ஸ்காபரோவில் முதன்மை பராமரிப்பு வசதிகள் மற்றும் சுகாதார சேவைகளை ஒன்றாறியோ அரசாங்கம் விரிவுபடுத்துகிறது



ஸ்காபரோ போன்ற அதிக தேவை உள்ள பகுதிகள் உட்பட மாநிலம் முழுவதும் 130 இற்கும் மேற்பட்ட புதிய மற்றும் விரிவாக்கப்பட்ட குழுக்களுக்கு உதவுவதன் மூலம் 300,000 பேரை முதன்மை பராமரிப்புடன் இணைக்க ஒன்ராறியோ அரசாங்கம் 235 மில்லியனை டொலர்களை அளிக்கிறது. இந்த முதலீடு, அதிகமான குடியிருப்பாளர்கள் ஒரு குடும்ப மருத்துவர் அல்லது செவிலியர் பயிற்சியாளரைப் பெற்றுக்கொள்ளும் வசதியை உறுதி செய்கிறது, காத்திருப்பு நேரங்களையும் அவசர மருத்துவ அறைகளின் நெருக்கடியையும் குறைக்கும். ஸ்கார்பரோ பொது மருத்துவமனையில் நோயினைக்க கண்டறியும் புதிய துறை மற்றும் ஸ்காபரோ மருத்துவம் மற்றும் ஒருங்கிணைந்த சுகாதார அகாடமியில் (SAMIH) கட்டப்பட்டு வரும் முதல் மருத்துவப் பள்ளி போன்ற திட்டங்கள் மூலம் ஸ்காபரோ பெரிய சுகாதார மேம்பாடுகளையும் காண்கிறது.

“எங்கள் அரசாங்கம் மக்களை சிறந்த பராமரிப்பில் வைத்திருகிறது. ஸ்காபரோ குடும்பங்களுக்கு சிறப்பான மருத்துவர் வசதியை ஏற்படுத்தி, விரைவான நோயைக் கண்டறிதல்கள் மற்றும் வீட்டிற்கு அருகில் உயர்தர சேவைகள் இருப்பதை உறுதி செய்கிறது. ஸ்காபரோ குடியிருப்பாளர்களுக்கு தகுதியான சுகாதார சேவையை நாங்கள் வழங்குகிறோம்” என்று அமைச்சர் விஜய் தணிகாசலம் கூறினார். இந்த முதலீடுகள் சுகாதாரப் பராமரிப்பை வலுப்படுத்துவதற்கும் மாநிலம் முழுவதும் வளர்ந்து வரும் சமூகங்களை ஆதரிப்பதற்கும் ஒன்றாறியோவின் துணிச்சலான திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

# கனடா ஒன்றாறியோ மாகாணத்தில் முதியோர் மாதத்தைக் கொண்டாடும், வகையில் ஆரோக்கியமானதும், சுறுசுறுப்பானதுமான முதுமையை ஆதரித்து நடைபெற்ற முதலாவது ஸ்கார்பரோ முதியோர் கண்காட்சி

## அமைச்சர் றேமண்ட் சோ அவர்களின் தொகுதி அலுவலகம் ஏற்பாடு செய்த அற்புதமான விழா

2025.06.26

“சுறுசுறுப்பான வாழ்க்கை, ஆரோக்கியமான முதுமை” என்ற தொனிப் பொருளில் 2025 ஆம் ஆண்டு கொண்டாடப்படும் “ஒன்ராறியோ முதியோர் மாதத்தை சிறப்பிக்கும் வகையில் ஸ்காபரோ சட்டமன்ற உறுப்பினரும், முதியோர் விவகார, அணுகுமுறை அமைச்சருமான ரேமண்ட் சோ ஏற்பாடு செய்த முதலாம் ஆண்டு முதியோர் கண்காட்சி சீன கலாசார மண்டபத்தில் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வெற்றிகரமாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய சட்டமன்ற உறுப்பினரும், முதியோர் விவகார, அணுகுமுறை அமைச்சருமான ரேமண்ட் சோ, சுறுசுறுப்பான, ஆரோக்கியமான வாழ்க்கைக்குத் தேவையான உபகரணங்களையும் சேவைகளையும் உள்ளூர் அமைப்புகள், வணிக நிறுவனங்களிடம் முதியோர் பெறுவதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைந்தேன். எங்கள் முதியோர் இந்த வாய்ப்புக்களைப் பெற முழுமையாக தகுதியானவர்கள்.” என்று தெரிவித்தார்.

டொரண்டோ பெருநகரின் சீன கலாசார மையமும், ஸ்காபரோ வர்த்தக சங்கமும் இணைந்து இந்த நிகழ்வை நடத்தியிருந்தன.

இதில் சுமார் 1000 முதியோர் பங்கேற்று பயன்பெற்றிருந்தனர். ஸ்காபரோவில் முதியோருக்கான சேவைகளை வழங்கும் 40 இற்கும் மேற்பட்ட அமைப்புகளும் நிறுவனங்களும் தமது காட்சிக்கூடங்களை அமைத்திருந்தன. குறிப்பாக கண், காது, உடல் பரிசோதனை உள்ளிட்ட சுகாதார சேவைகளும் இங்கு இடம்பிடித்திருந்தன.

மூத்த குடிமக்களின் சமநிலை, பாதுகாப்பு, சுயாதீனம் என்ற தலைப்பிலும் முதியோர் இல்லத்தைத் தேர்ந்தெடுக்கும்போது அறிய வேண்டிய விடயங்கள் என்ற தலைப்பிலும் கருத்தரங்குகள் நடைபெற்றன. அத்துடன் முதியோரை இலக்குவைத்து மோசடியாக பணம் திருடப்படுவதைத் தவிர்ப்பதற்கான விழிப்புணர்வு கருத்தரங்கொன்று RCMP பொலிசாரினால் வழங்கப்பட்டிருந்தது.

இந்தக் கண்காட்சியில் தமிழ், சீன உள்ளிட்ட பல்வேறு கலாசார நிகழ்வுகளும் நடைபெற்றன. Frontline Community Centre அமைப்பைச் சேர்ந்த முதியோர் வழங்கிய தமிழ் பாரம்பரிய நடனமான கோலாட்டம், குழு யோகா, சீனர்களின் கலாசார நடனங்கள் உள்ளிட்ட அம்சங்களும் நிகழ்வை வண்ணமயமாக்கின.

இங்கு மேலும் உரையாற்றிய சட்டமன்ற உறுப்பனர் ரேமண்ட் சோ, “எமது முதியோரை கொண்டாடுவதில் நான் பெருமைப்படுகிறேன். முதியோர் உண்மையிலேயே நமது சமூகத்தின் இதயம். அவர்களின் அறிவு, அனுபவம், பங்களிப்பு சிறந்த ஒன்ராறியோவை வடிவமைத்துள்ளது. ஆரோக்கியமான, சுறுசுறுப்பான மற்றும் சுதந்திரமான வாழ்க்கையை வாழ உதவும் முக்கிய தகவல்களையும் வளங்களையும் அவர்களுக்கு வழங்குவதற்காக இந்த நிகழ்வு வடிவமைக்கப்பட்டுள்ளது. “சுறுசுறுப்பான வாழ்க்கை, ஆரோக்கியமான முதுமை” என்ற தொனிப் பொருளில் இந்த ஆண்டு ஒன்ராறியோ முதியோர் மாதம் கொண்டாப்படுகிறது. இதனுடன் இணைந்து முதியோருக்கு உடல், மன ஆரோக்கியத்தை முன்னிலைப்படுத்த அனைவரையும் ஊக்குவிக்கிறோம்,” என்று கூறினார்.

“எங்கள் மையத்தில் இந்த முக்கியமான நிகழ்வை இணைந்து நடத்துவதில் நாங்கள் பெருமைகொள்கிறோம்” என்று டொராண்டோ பெருநகரின் சீன கலாசார மையத்தின் தலைவர் ஆலன் லாம் கூறினார். “எங்கள் பல்நோக்கு மண்டபம் நிறைந்திருப்பதைப் பார்க்கும் போது உற்சாகமாக இருக்கிறது. இது வெறும் கண்காட்சியாக மட்டுல்லாமல் சுறுசுறுப்பாகவும் ஆரோக்கியமாகவும் வாழவதற்கான வளங்களையும் அவர்களுக்குப் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது. நல்வாழ்வு, கற்றல் மற்றும் இணைப்புக்கான ஒரு சிறந்த இடமாக இது இருக்கிறது. இதுபோன்ற நிகழ்வுகள் சமூகம் ஒன்று சேர்ந்து ஒருவரையொருவர் மேம்படுத்தவும் ஆதரிக்கவும் உந்துசக்தியாக அமைகிறது.”

“நாங்கள் முதியோர் மாதத்தைக் கொண்டாடும் இந்த வேளையில் ஸ்காபரோ வணிக சங்கம், இந்த கண்காட்சியில் ஒரு சமூக பங்காளியாக பங்கேற்பதில் பெருமை கொள்கிறது.” என்று ஸ்காபரோ வணிக சங்கத்தின் தலைவர் ரியான் சோமர் கூறினார். “இந்த நிகழ்வு நமது முதியோர்களுக்கு சேவை செய்யும் பணிகளை வெளிப்படுத்துவது மட்டுமல்லாமல், சமூக இணைப்பின் சக்தியையும் எடுத்துக்காட்டுகிறது. நமது முதியோரை ஆதரிப்பதும் அவர்களை பங்களிக்கச் செய்வதும் குடும்பங்களை வலுப்படுத்துவது மட்டுமன்றி உள்ளூர் பொருளாதாரத்திற்கும் பங்களிக்கிறது.” என்று தெரிவித்தார்.

கண்காட்சிக்கு வந்திருந்த முதியோருக்கு மதிய உணவு (இலகு) வழங்கப்பட்டதுடன் கண்காட்சிக் கூடங்களில் முதியோர் தமக்குத் தேவையான தகவல்களையும் பெற்றுப் பயனடைந்தனர்.

படங்கள் இணைப்பு:
படம் 1 : அமைச்சர் சோ, சீனா தாய்-சீ நிகழ்வில் பங்கேற்ற போது
படம் 2 : FCC அமைப்பின் முதியோர் யோகா நிகழ்வு
படம் 3 : கண்காட்சிக் கூடத்தில் முதியோர் சுகாதார பரிசோதனை செய்தபோது
படம் 4 : ஸ்காபரோ வர்த்தக் சங்கத் தலைவருக்கு சானறிதழ் வழங்கிய போது
படம் 5 : சுமார் 1000 முதியோரும் 40இற்கு மேற்பட்ட அமைப்புக்களும் பங்கெடுத்த கண்காட்சியின் ஒருபகுதி
படம் 6 : அமைச்சர் சோ நிகழ்வில் உரையாற்றிய போது
படம் 7 : கண்காட்சிக்கு இணை அனுசரணை வழங்கிய சீன கலாசார மையத்தினருக்கு ஸ்காபரோ ஏஜின்கோர்ட் சட்டமன்ற உறுப்பினர் ஆரிஸ் பாபிகியன், அமைச்சர் சோ ஆகியோர் நற்சான்றிதழ் வழங்கியபோது

**ஸ்காபரோ வடக்கு சட்டமன்ற உறுப்பினர் ரேமண்ட் சோ அலுவலகம்**
**(416) 988-9314 | raymond.cho@pc.ola.org**

















இலங்கை செய்திகள் Sri Lanka News

# செம்மணி புதை குழியில் எம் மக்கள் புதைக்கப்படவில்லை

## அவர்கள் அனைவரும் விதைக்கப்பட்டுள்ளனர் என்கிறார் மனுவல் உதயச்சந்திரா

மன்னார் நிருபர்



- எஸ்.ஆர்.லெம்பேட் (26-06-2025)

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக கடந்த 16 வருடங்களுக்கு மேலாக நாங்கள் வீதியில் நின்று போராடி வருகிறோம். தமது உறவுகளுக்காக போராடிய எத்தனையோ தாய்மார்கள் மரணித்து விட்டனர். எனினும் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்தால் மட்டுமே எங்களுக்கான நீதியைப் பெற்றுக் கொள்ள முடியும் என வடக்கு - கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளை தேடும் சங்கத்தின் இணைப்பாளர் மனுவல் உதயச்சந்திரா தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் ஏற்பாடு செய்த "நீதிக்கான நீண்ட காத்திருப்பு" எனும் கருப்பொருளில் "காணாமல் ஆக்கப்பட்டோரின் கண்ணீர்க்கதை" ஆவணப்படம் திரையிடலும்,கருத்துப் பகிர்வும் 26ம் திகதி அன்று வியாழக்கிழமை காலை 10 மணியளவில் மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன் போது கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இசைப்பிரியன் தயாரிப்பில் வெளியிடப்பட்ட நீதிக்கான நீண்ட நாள் காத்திருப்பு காணாமல் போனோரின் கண்ணீர்க்கதை ஆவணப்படம் மன்னாரில் வெளியிடப்பட்டது.

வடக்கு கிழக்கில் உள்ள 8 மாவட்டத்திலும் குறித்த ஆவணப்படம் வெளியிடப்பட்டது. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி மறுக்கப்பட்டு வருகிறது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் நிலை வெளிக்கொண்டு வரும் வகையில் இந்த ஆவணப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது. காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக தாய்மார் பட்ட கஷ்ட துன்பங்களை ஏனையோரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக வெளியிட்டு வருகிறோம்.

அந்த வகையில் மன்னாரிலும் இந்த ஆவணப்படம் திரையிடப்பட்டது. இந்த ஆவணப் படத்தை தயாரித்த இசைப்பிரியன் இன்று எங்களுடன் இல்லை.

ஆனால் அவர் எங்களுடன் இணைந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக போராடி குரல் கொடுத்தவர். அவர் மரணித்தாலும் அவர் எங்களுக்காக குரல் கொடுத்தவர்.அவரது ஆத்மா சாந்தியடைய வேண்டும்.

கடந்த 16 வருடங்களுக்கு மேலாக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக நாங்கள் வீதியில் நின்று போராடி வருகிறோம். தமது உறவுகளுக்காக போராடிய எத்தனையோ தாய்மார்கள் மரணித்து விட்டனர். எத்தனையோ பேர் வலு இழந்து விட்டனர்.

எத்தனையோ வருடங்களாக போராடி விட்டோம்.எமக்கு நீதி கிடைக்கவில்லை. இதற்கு பின்னரும் இந்த அரசாங்கம் காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளுக்கு நீதியை பெற்றுத் தருமா? என்கின்ற கேள்வி எழுந்துள்ளது.அம்மாக்களும் போராடி சோர்வடைந்து விட்டனர்.

எவ்வாறாக இருந்தாலும் நாங்கள் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்தால் மட்டுமே எங்களுக்கான நீதியைப் பெற்றுக் கொள்ள முடியும்.காலம் தாமதிக்கும் நீதி மறுக்கப்படுகின்ற நீதி என கூறுகின்றனர். ஆனால் அவ்வாறு இருக்காது.

வடக்கு கிழக்கில் எத்தனையோ மனித புதைகுழிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. செம்மணி புதை குழியில் நான்கு வயது முதல் 15 வயதுக்குட்பட்டவர்களின் எலும்புக்கூடுகளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

ஒரு பிள்ளையை ராணுவம் பிடித்துச் செல்லும் போது தாய் ஒருவர் மேலும் ஒருவரை துணைக்கு அழைத்துச் சென்றிருப்பார். இந்த தாய் இவ்வாறு நிலை ஏற்படும்.தன்னை மண்ணுக்குள் புதைப்பார்கள் என்று நினைத்து அங்கே சென்றிருக்க மாட்டார்.

இவ்வாறு சென்றவர்களையே ராணுவம் கொலை செய்து மண்ணுக்குள் புதைத்துள்ளனர்.அவர்கள் அனைவரும் புதைக்கப்படவில்லை. விதைக்கப்பட்டுள்ளனர். தமிழர்கள் ஒவ்வொருவரும் அதற்காக குரல் கொடுக்க வேண்டும். நீதியையும், நியாயத்தையும் தட்டிக் கேளுங்கள். என அவர் மேலும் தெரிவித்தார்.

இதன் போது உயிரிழந்த இசைப்பிரியனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதோடு, ஆவணப்படமும் திரையிடப்பட்டது. குறித்த நிகழ்வில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், பொது அமைப்பு,சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.





இலங்கை செய்திகள் Sri Lanka News

# மட்டக்களப்பில் ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் பத்மாபாவின் 35 வது தியாகிகள் தின நினைவேந்தல் அனுஷ்டிப்பு

கனகராசா சரவணன்




படுகொலை செய்யப்பட்ட ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் பத்மநாபாவின் 35வது தியாகிகள் தினத்தையிட்டு "தியாகிகளின் சமாதிகளே ஆராதனைக்குரிய தேவாலயங்கள்" எனும் தொனிப்பொருளில் உயிர் நீத்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் நினைவேந்தல் 21ம் திகதி அன்று சனிக்கிழமை கட்சி காரியாலயத்தில் இடம்பெற்றது இதில் படுகொலை செய்யப்பட்ட கட்சியின் தலைவரான பத்மநாபாவின் திருஉருவ படத்திற்கு மலர்மாலை அணிவித்து தீபச்சுடர் ஏற்றி மலர் தூவி இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அனுஷ்டித்தனர்.





ஈ.பி.ஆர்.எல்.எப். சிரேஸ்ட உறுப்பினரும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நினைவேந்தலில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பனரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளருமான கோவிந்தன் கருணாகரம், ஜனநாயக தமிழ் கூட்டமைப்பின் ஏறாவூர் நகரசபையின் பிரதி தவிசாளர் ஞா.கஜேந்திரன், மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சியின் உறுப்பினர்கள், உயிர் நீத்த தியாகிகளின் உறவினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது படுகொலை செய்யப்பட்ட கட்சியின் தலைவர் தோழர் பத்மநாபாபின் திருஉருவ படத்திற்கு முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம் மலர்மாலை அணிவித்து பொது சுடர் ஏற்றினர் இதனை தொடர்ந்து நினைவேந்தலில் பங்கெடுத்து கொண்ட அனைவரும் சுடர் ஏற்றி மலர் தூவி மௌன அஞ்சலி செலுத்தினர்.

# மட்டக்களப்பில் திருடனை கைது செய்ய சென்ற பொலிசார் மீது தாக்குதல் நடத்திய சம்பவத்தில் கைது செய்யப்பட்ட 5 பேருக்கு 30 வரை விளக்கமறியல்

மட்டு சின்ன ஊறணி (வன்னியில்) பகுதியில் திருடன் ஒருவனை கைது செய்ய சென்ற பொலிசார் மீது கத்துகுத்து தாக்குதல் மேற்கொண்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட இரு பெண்கள் உட்பட 5 பேரை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் எதிர்வரும் 30ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு 26ம் திகதி அன்று வியாழக்கிழமை உத்தரவிட்டார்.

மட்டு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள பகுதியிலுள்ள வீடு ஒன்றில் தொலைக்காட்சி பெட்டி ஒன்றை திருடிச் சென்ற சம்பவம் தொடர்பாக வன்னி என அழைக்கப்படும் சின்ன ஊறணி பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவரை அவனது வீட்டில் வைத்து 25ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 01.30 மணியளவில் கைது செய்ய முயற்சித்த இரு பொலிசார் மீது சந்தேக நபர் மற்றும் இரு பெண்கள் உட்பட 6 பேர் கொண்ட கழுவினர் கத்தியால் குத்தியும் பொல்லுகளால் அடித்து தாக்குதலை மேற்கொண்டனர்.

இதன்போது இரு பொலிசார் படுகாயடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் தாக்குதலை மேற்கொண்டு தப்பி ஓடி தலை மறைவாகிய பிரதான சந்தேகநபரான திருடன் உட்பட 3 ஆண்கள் இரு பெண்கள் என 5 பேரை கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்களை 26ம் திகதி வியாழக்கிழமை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது இவர்களை எதிர்வரும் 30ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# தேசிய விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் மன்னார் மாணவியின் வரலாற்றுச் சாதனை

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்




- எஸ்.ஆர்.லெம்பேட் (21-06-2025)

கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட தேசிய விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் பிரிவு 8,9ல் மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரி மாணவி செல்வி. அ. நயோலின் அப்றியானா மாகாண மட்ட போட்டியில் முதலாம் இடத்தையும், தேசிய மட்ட ஒலிம்பியாட் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்று வரலாற்று சாதனை புரிந்துள்ளார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற மாகாண மட்ட போட்டியில் முதலாம் இடத்தையும், மஹரகம ஜனாதிபதி கல்லூரியில் கடந்த ஆவணி மாதம் நடைபெற்ற தேசிய மட்ட ஒலிம்பியாட் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்று வரலாற்று சாதனை புரிந்துள்ளார்.

அவருக்கு சான்றிதழ் கல்வி அமைச்சில் கடந்த வெள்ளிக்கிழமை 20ம் திகதி அன்று கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர் டாக்டர் மதுர செனவிரத்ன (Dr. Madhura Senevirathna) அவர்களால் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இவருடன் வட மாகாணத்தை சேர்ந்த இரு மாணவர்கள் இரண்டு இரண்டாம் நிலைகளைப் பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் வடமாகாண மாணவர்கள் பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையில் மாகாணங்களுக்கிடையிலான தரப்படுத்தல் வரிசையில் வட மாகாண மாணவர்கள் வடமாகாணத்திற்கு முதல் இடத்தைப் பெற்றுக் கொடுத்தது பெருமைக்குரிய விடயம் ஆகும்.





# மன்னார் ஆயரை சந்தித்த மன்னார் உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், உப தவிசாளர்கள் ஆகியோர் அவரது ஆசியைப் பெற்றனர்



- எஸ்.ஆர்.லெம்பேட் (24-06-2025)

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் 24ம் திகதி அன்றையதினம் செவ்வாய்க்கிழமை மாலை மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கலாநிதி அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகையை சந்தித்து ஆசி பெற்றுள்ளனர்.

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோ நோகராதலிங்கம், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன், மன்னார் பிரதேச சபையின் உப தவிசாளர் றொய் ற்றன் சாந்தினி குரூஸ், மாந்தை மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் ஞானப்பிரகாசம் பிரேம் குமார் மற்றும் உள்ளூராட்சி உறுப்பினர்கள் இணைந்து செவ்வாய்க்கிழமை மாலை மன்னார் ஆயர் இல்லத்திற்கு விஜயம் செய்து மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கலாநிதி அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை சந்தித்து ஆசி பெற்றனர்.

இதன் போது மன்னார் மாவட்டத்தின் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாட பட்டதாக அறிய முடிகின்றது.



# இவ்வார ராசிபலன்

**27-06-2025 வெள்ளி தொடக்கம் 03-07-2025 வியாழன் வரையும்**




**மேஷம்:** விறுவிறுப்பாக செயல்படும் வாரம். கூட்டுத்தொழில் லாபம் தரும். பழைய கடன் அடையும். திறமைகள் வெளிப்படும். ஏற்றுமதி தொழிலில் லாபம் அதிகரிக்கும். யோகமான காலம். வேலை பளு அதிகரிக்கும். நல்லோர்களின் பாராட்டுக் கிட்டும். மனக்கசப்பு நீங்கும். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். இடமாற்றம் ஏற்படும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். பொது வி'யங்களில் நாட்டம் ஏற்படும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கூடும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். எண்ணங்கள் நிறைவேறும். மனைவி உறவு சீராகும். கருத்து வேறுபாடுகள் அகலும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். அரசியல் ஆதாயம் தரும். உறவினர்கள் வழியில் செலவுகள் உண்டு. வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். கோரிக்கை நிறைவேறும். நாவடக்கம் தேவை. வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. காதலர்களுக்கு மனக்கசப்பு ஏற்படும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். பொதுப்பிரச்சனைகள் விலகும். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். தேக ஆரோக்கியம் மிளிரும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். மாணவர் பாராட்டுப் பெறுவர். நிர்வாகச் செலவுகள் கூடும். வாய்ப்புக்கள் வந்து சேரும். வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். திடீர் கடன் உருவாகும். காரிய தாமதம் ஏற்படும். புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தனவரவில் தடங்கல் உண்டு. உன்னதமான காலம். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதார சிறப்பு தரும். மனைவி உடல் நலம் பாதிக்கும். உறவினர்களால் பாதகம் உண்டு. கால்நடைகளால் பலன் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: நந்தி பகவான், அதிர்ஷ்ட எண்: 2,9,5,4
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,K




**ரிஷபம்:** லஷ்மி கடாட்சம் பெருகும் வாரம். இன்னல்கள் அகலும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தொல்லைகள் குறையும். உஷ்ணம் அதிகரிக்கும். பொருளாதாரம் உயர்வு தரும். காரியம் இழுபறியாகும். அரசு வழியில் கவனம் தேவை. பழிச்சொல் தேடி வரும். முயற்சி பலன் தரும். அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். உன்னதம் நிறைந்த காலம். வீண் பழி அகலும். சஞ்சலம் மறையும். மற்றவர்கள் தொல்லைகள் குறையும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும். நினைத்தது நிறைவேறும். அரசாங்க அனுகூலம் உண்டு. நிர்வாகத் திறமை அதிகரிக்கும். தன்னம்பிக்கை கூடும். கையிருப்பு கரையும். பொருள் சேதம் தரும். கல்வி மேன்மை தரும். புதிய முயற்சி பலன் தரும். இனிய எண்ணங்கள் உதயமாகும். பழையக் கடன் ஒழியும். வருமானத் தடை ஏற்படும். வாய்ச்சொல் பலன் தரும். புதிய வாய்ப்புத் தேடி வரும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. கலைத்தொழில் திருப்பம் தரும். கல்வியில் மந்தநிலை ஏற்படும். பணியாட்களால் தொல்லை ஏற்படும். வாகனச்செலவு ஏற்படும். நினைத்தபடி திருமணம் நடக்கும். காரிய தாமதம் ஏற்படும். திடீர் கடன் உருவாகும். உறவினரால் பாதகம் உண்டு. சிந்தனை வளர்க்கப்படும். எதிரிகளால் ஏற்றம் உண்டு. விளையாட்டு சிந்தனைகள் மேலோங்கும். புதியப்பொருள் சேரும். அந்நிய தேச பயணம் உண்டு. சிக்கனம் தேவை. விரக்திகள் மறையும். தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். கலைஞர்களுக்கு ஆதாயம் பெருகும். வழக்குகள் சாதகமாகும். வரவுகள் திருப்தி தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 1,4,9,6
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,L




**மிதுனம்:** சாதனை படைக்கும் வாரம். உயர்கல்வி ஆர்வம் அதிகரிக்கும். மங்களச்செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. சாதகமான வாய்ப்பு உருவாகும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். வியாபாரம் லாபம் தரும். புதிய கடன் வாங்க நேரிடும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். வெளியூர் பயணம் உண்டு. தந்தை உடல்நலனில் கவனம் தேவை. நவகிரஹ அனுகிரஹம் உண்டு. வெகுமதி பெருகும். நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். இடமாற்றத்தால் நன்மை உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். மன ஆரோக்கியம் சிறக்கும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். மனதில் ஆனந்தம் குடிக்கொள்ளும். புத்தி சாதுர்யம் பெருகும். நட்பு வட்டம் விரிவடையும். இல்லத்தில் அமைதி பெருகும். சுபகாரியம் நடந்தேறும். தேகப்பலம் கூடும். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். வாகனங்களில் முதலீடு உண்டாகும். குடும்பத்தில் அமைதி நிலவும். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. சேமிப்பு உயரும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. பணவரவு திருப்தி தரும். பொதுவாழ்வில் புகழ் கூடும். உடல்நலம் சீராகும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். பெரியோர்களின் வாழ்த்து கிடைக்கும். உடன்பிறப்புக்களால் உதவி உண்டு. செயல்பாட்டின் தீவிரம் கூடும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. ஞாபகத்திறன் அதிகரிக்கும். சுபகாரியம் கைகூடும். மனக்குழப்பங்கள் தீரும். பொருளாதார நிலை உயரும். தொட்டக்காரியம் ஜெயமாகும். வஸ்திர தானம் வளம் சேர்க்கும். காதலர்கள் தம்பதியாவார்கள். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். விருப்பமான வாய்ப்பு கூடி வரும். கர்மவினைகள் அகலும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சூரியபகவான், அதிர்ஷ்ட எண்: 3,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,L




**கடகம்:** நன்மைகள் அதிகரிக்கும் வாரம். முயற்சி பலன் தரும். சமுதாய விழிப்புணர்வோடு செயல்படுவது நல்லது. அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். குடும்ப வளம் கூடும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். மருத்துவச் செலவு உண்டு. திடீர் செலவுகள் அதிகரிக்கும். புதிய முயற்சியினை உடனே செயல்படுத்தவும். காலம் தாழ்த்துவது நல்லதல்ல. மங்கள் செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும். பிள்ளைகளால் பெருமை சேரும். தனவரவுகள் தடைப்படும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். பெண்களுக்கு ஆனந்தம் குடிக்கொள்ளும். திருடு போன பொருள் திரும்ப கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. பொன், பொருள் சேரும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். தொல்லை தருகிறவர்




விலகிடுவர். வயிற்று உபாதை வந்து சேரும். டிரான்ஸ்போர்ட் தொழில் சிறந்த லாபம் தரும். சீரான வாழ்வு அமையும். சுபவிரயம் ஏற்படும். பயணத்தால் பலன் உண்டு. வராத கடன் வந்து சேரும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. மகான்களின் சந்திப்பு கிட்டும். மதிப்பு உயரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். நட்பு பெருகும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். எண்ணங்கள் வண்ணமயமாகும். வம்பு வழக்குகள் தீரும். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும். சுதந்திரமாக செயல்படுவீர்கள். மாணவர்களுக்கு அக்கறை கூடும். மாற்று யோசனை பயன் தரும். வியாபாரம் விருத்தியாகும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 4,9,6,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,P




**சிம்மம்:** பணமும், பாராட்டும் சேரும் வாரம். உறவினர் வருகையால் கலகலப்பு ஏற்படும். மருத்துவச் செலவுகள் குறையும். வரவு திருப்தி தரும். திருமணப் பேச்சு முடிவிற்கு வரும். பிரச்சனைகள் அகலும். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். சூழ்நிலைகள் சாதகமாகும். இல்லத்தில் மேன்மை ஏற்படும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். வாழ்வில் வசந்தம் கூடும். கணவன், மனைவி அன்யோன்யம் குறையும். விரோதங்கள் விலகும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். ஆரோக்கியம் சீராகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். மதிநுட்பம் மாபெரும் வெற்றியைத் தரும். நட்பு வட்டம் விரிவடையும். கூட்டுத்தொழில் குழப்பங்கள் நீங்கும். காரியம் வெற்றி தரும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். திடீர் மாற்றங்கள் நிகழும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். பழையக் கடன் வசூலாகும். ஆண்களுக்கு அதிகாரம் உயரும். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். கனிவான பேச்சு அவசியம். கலைகளில் ஆர்வம் கூடும். கையிருப்பு கரையும். கனவுகள் பலிதமாகும். கௌரவம் உயரும். தாய்வழி தகராறு குறையும். பிள்ளைகளால் தொல்லைகள் அதிகமாகும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். பயணம் வெற்றி தரும். உறவுகளால் நன்மை ஏற்படும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். தனலாபம் பெருகும். கடன் சுமை குறையும். பூமியால் லாபம் உண்டு. நூதனப்பொருள் சேர்க்கை ஏற்படும். வெற்றியும், வெகுமதியும் கூடும். தேவைகள் பூர்த்தியாகும். வழக்கமான பணியில் மாற்றம் ஏற்படும். பாகப்பிரிவினை சுமூகமாகும். கூடுதல் லாபம் குதூகலம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அஷ்ட தேவதை அதிர்ஷ்ட எண்: 5,9,3,2
அதிர்ஷ்ட நிறம்: அரக்குநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,Z




**கன்னி:** விரக்திகள் மறையும் வாரம். வேலை பளு அதிகமாகும். உற்சாகம் களை கட்டும். நல்லவர் நட்பு கிட்டும். தோற்றப் பொலிவு கூடும். முன்கோபத்தை குறைக்க வேண்டும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். புதிய சிந்தனை உருவாகும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. பொறியியல் துறை லாபம் தரும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். திருமண வாய்ப்புக்கள் கூடி வரும். மன அமைதி குறையும். கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். காரியங்கள் கைக்கூடும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். மனைவியால் சச்சரவு ஏற்படும். அரசு வாய்ப்பு தடைப்படும். செயல்திறமை அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். சகோதர உதவி கிட்டும். உறவினர் வருகை உற்சாகம் தரும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். தொல்லைகள் ஒழியும். நினைத்த காரியம் நிறைவேறும். கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். உத்தியோகத்தில் பாராட்டுக் கிட்டும். எதிர்பார்த்த வி'யம் தாமதமாகும். பிள்ளைகளின் கல்வி செலவு அதிகரிக்கும். நீண்ட நாளைய நோய் விலகும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். குதூகலம் தாண்டவமாகும். புதிய முதலீடு லாபம் தரும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெண் வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். முன்னேற்றம் அதிகரிக்கும். முத்தாய்ப்பான வாய்ப்புக்கள் பெருகும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் அதிகரிக்கும். சுறுசுறுப்பு அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ எல்லையப்பன், அதிர்ஷ்ட எண்: 1,9,5,4
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,D




**துலாம்:** பொன்னும், பொருளும் சேரும் வாரம். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். கலைத்தொழில் லாபம் தரும். சந்தோஷமான சூழ்நிலைகள் உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். சுறுசுறுப்பு அதிகமாகும். எதிரிகள் ஏமாற்றம் அடைவார்கள். திருமண வாய்ப்பு கூடி வரும். பேச்சில் நிதானம் தேவை. ஞாபக மறதி ஏற்படும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோக ஈடுபாடு அதிகமாகும். ஆனந்தம் பெருகும். வெளிநாட்டு தொடர்பு ஏற்படும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். புதிய நட்பு உருவாகும். மற்றவர் உதவி கிட்டும். மனக்குழப்பம் நீங்கும். திடீர் லாபம் உண்டு. பதவி வாய்ப்பு வரும். பாதகம் விலகும். மனோ தைரியம் அதிகரிக்கும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். புத்திரர்களால் மேன்மை உண்டு. சுபச்செய்தி வரும். கடன் பிரச்சனைகள் அகலும். கவலைகள் ஒழியும். புதிய எண்ணங்கள் உருவாகும். தகுதிகள் உயரும். கமிஷன் தொழில் லாபம் தரும். விருந்தினர் வருகை உண்டு. பணிவான பேச்சு அவசியம். விவசாயம் பலன் தரும். நண்பர்களால் உதவி உண்டு. பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். உணவு பிரியம் அதிகரிக்கும். பாராட்டுப் பெருகும். மனநிம்மதி தரும். இனிய தகவல் வந்து சேரும். கட்டிடத்தொழில் லாபம் தரும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். தன்னம்பிக்கை அதிகரிக்கும். வாகன அபிவிருத்தி உண்டு. எண்ணிய காரியம் கைகூடும். இன்னல்கள் அகலும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தோல்விகள் விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீவாஞ்சியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,7,3,1
அதிர்ஷ்ட நிறம்: இளம்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,B

(தொடர்ச்சி 26 பக்கம்)

கனடிய செய்திகள்
Canadian News

# "சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் பல ஈழத்து படைப்பாளிகளையும் கவிஞர்களை முதலில் வரவேற்று இடமளித்தது மொன்றியால் மாநகரே"

## மொன்றியலில் கவிதாயினி மோகனின் கடந்தவையும் கடப்பவையும் கவிதை நூல் வெளியீட்டு விழாவில் "உதயன்" லோகேந்திரலிங்கம் புகழாரம்



"எமது பிறந்த மண்ணாம் ஈழத்திலிருந்து சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர்அங்கு தமது வாழ்க்கையைத் தொடரை முடியாமல் பல ஈழத்து படைப்பாளிகளும் கவிஞர்களும் இலக்கிய ஆர்வலர்களும் எங்கு போவது என்று திட்டங்கள் இல்லாமல் மொன்றியால் நகரில் கால்பதித்த போது முதலில் வரவேற்று இடமளித்தது இந்த மொன்றியால் மாநகரமே. அவர்களுள் பலர் ரொறன்ரோ உட்பட பல நகரங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றாலும் இன்று பல இலக்கிய நெஞ்சங்கள் இங்கு தொடர்ச்சியாகத் தங்கியிருந்து உள்ளத்தில் உறுதியுடன் இங்கு படைப்புக்களைத் தொடர்ந்து தந்த வண்ணம் உள்ளார்கள். அவர்களின் இன்றை நாயகி கவிதாயின் உமா மோகனும் ஒருவர். இந்தவகையில் இன்று கனடா வாழ் தமிழ் மக்களின் இரண்டாவது தளமாகவும் மொன்றியால் மாநகர் திகழ்கின்றது என்றால் அது மிகையாகாது".












இவ்வாறு மொன்றியலில் கவிதாயினி மோகனின் கடந்தவையும் கடப்பவையும் கவிதை நூல் வெளியீட்டு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றி கனடா "உதயன்" லோகேந்திரலிங்கம் அவமர்கள் புகழாரம் சூட்டினார்.

மொன்றியல் நகர சபை மண்டபம் விருந்தினர்களால் நிரம்பி வழிந்தது ஜூன் 22ம் திகதி ஞாயிறு கவிஞர் எழுத்தாளர் திருமதி. உமா மோகன் வாழ்வில் ஓர் பொன் மலர் பொழுதாகும். கனடா உதயன் வார இதழில் பல மாதங்கள் சுமார் 102 வாரங்களாக எழுதப்பெற்று பல நூறு வாசகர்களால் தொடர்ச்சியாக வாசித்து நேசிக்கப் பெற்ற தொடர் கவ-ிதை வரிகளான கடந்தவையும் கடப்பவையும் தொகுப்பு நூலாக்கம் பெற்று பேராசிரியர் இ பாலசுந்தரம் அவர்களது தலைமையில் வெளியீட்டு விழா ஆரம்பமானது உதயன் வார இதழில் ஒன்றிய வாழ் ஆசிரியை முதுகலாமணி திருமதி உமா மோகன் எழுதி வெளியான முதலாவது படைப்பு இதுவா-கும். செந்தமிழ் பள்ளி என்னும் கல்வி சாலையை நிர்வாகம் செய்து தமிழ் மொழி பயிற்றுவித்து வரும் திருமதி உமா மோகன் சிறந்த ஓர் தமிழ்ப்பற்றாளரும் படைப்பாளியும் இலக்கியவாதியும் ஆவார். அது மட்டுமல்ல பேராசிரியர் பாலசுந்தரம் அவர்களின் நன் மாணவிகளுள் ஒருவர் அவர் குரு பக்தியை நன்றியுடன் மெய்ப்பிக்கும்வண்ணம் பேராசிரியர் அவர்களது நல்லாசிகளுடன் அவரையே தலைமை ஏற்க வைத்து தனது நன்றி உணர்வை காணிக்கையாகியமை குழுவிற்கு சிஷ்யைக்கும் உள்ள பக்தியை மரியாதையை காணக் கூடியதாக இருந்தது ரொறன்ரோவிலிருந்து மொன்றியாலுக்கு வருகை தந்திருந்த உதயன் பிரதம ஆசிரியர் திரு. ஆர்.எம். லோகேந்திரலிங்கம் - திருமதி. லோகேந்திரலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து விழாவிற்கு சிறப்பு செய்தனர்.

பத்திரிகை ஆசிரியரது சிறப்புரை மொன்றியல் வாழ் இலக்கியவாதிகளுக்கும் உதயனுக்கும் உள்ள இலக்கிய உறவை மெய்ப்பித்து மகிழ்ச்சியை வழங்கியது.

நூல் அறிமுகம் நூலாசிரியர் பற்றி மொன்றியல் வாழ் மூத்த எழுத்தாளர் திரு. வீணை மைந்தன் சிறப்புரை யாற்றினர் நூலை நன்கு வாசித்து ஆய்வுரை வழங்கிய திரு. ஆறு ஸ்ரீ கந்தராசாவின் விரிவான உரை கவிதை நூலை வாங்கி வாசிக்க தூண்டுவதாக அமைந்தது. பேராசிரியர்கள் கலாநிதி நா.சுப்பிரமணியன் கலாநிதி திருமதி. கௌசல்யா சுப்ரமணியன் இருவரினதும் வாழ்த்துரைகள் திரு. வீணைமைந்தன் அவர்களால் வாசிக்கப்பெற்றதுடன் பேராசிரியர் விசாக ரூபன்( தமிழ் துறை தலைவர் - யாழ் பல்கலைக்கழகம் - நூலாசிரியரின் சகோதரியும் தாயாரும் ஆஸ்திரேலியா - மெல்போன் நகரிலிருந்து அனுப்பிய ஒலி ஒளி வீடியோ பதிவு திரையில் காட்சிப்படுத்தப்பட்டன. திருமதி. உமா மோகனின் ஏற்புரையுடன் சுவையான சிற்றுண்டிகளும் உமாவின் கவிதை வரிகளும் சுவையூட்டின.

மேற்படி கவிதை நூல் வெளியீட்டு விழாவ-ில் மண்டபத்தை நிறைத்து இறுதிவரை காத்திருந்து நூற் பிரதிகளை பெற்றுச் சென்ற பார்வையாளர்கள் பாராட்டுக்குரியவர்கள் என்று அனைத்து உரையாளர்களும் தெரிவித் திருந்தமை குறிப்பிடத்தக்கது.

**- மொன்றியாலிருந்து**
**வீணை மைந்தன்**

## வனப்புறு கனடா
## (இன்னிசை வெண்பா)

*கனடா எனுமோர் கனிவுறு தேசம்*
*இனவெறி இல்லா இனிப்புறு நேசம்*
*வனவளம் எங்கும் வளர்ந்து இருந்து*
*கனமாய் வருமதி காண்.*

*பல்லின மக்கள் பரந்து வசிக்கிற*
*தொல்லை அகன்ற சுதந்திர பூமியே!*
*அல்லும் பகலுமே ஆலைகள் ஓடிட*
*செல்வம் கொழிக்கும் சிறப்பு.*

*வந்தோரை ஆதரிக்கும் வண்ணத் தலமது*
*நொந்தோர் பிணிகளை நீக்கிடும் தேசமாம்*
*சொந்தம் அறுந்தோர் சுகம்பெறு நாடிது*
*சந்தம் வருமெனச் சாற்று.*

*கல்வி வசதியும் காணி உரிமையும்*
*பல்வகை மக்களின் பண்புகள் காத்திடும்*
*பல்லோரும் போற்றும் பரப்பு நிலமதை*
*எல்லோரும் கூடியே ஏற்று.*

*அகதியாய் வந்த அனைத்து மனிதர்*
*சுகமாய் இருக்கச் சமத்துவம் ஈந்தே*
*தனத்துடன் வாழ்விடம் தந்திடும் நாட்டை*
*வனப்புடன் வாழவே வாழ்த்து.*

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
**(416) 844-7453**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணம்ல் தொட்டியில் நீந்திக்கொண்டிருந்த இளைஞர் வலிப்பு ஏற்பட்டு நீரில் மூழ்கி உயிரிழப்பு!

பு. கஜிந்தன்

25ம் திகதி புதன்கிழமை யாழில் தொட்டியில் நீந்திக்கொண்டிருந்த இளைஞர் ஒருவர் வலிப்பு ஏற்பட்ட நிலையில் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். இதன்போது இணுவில் மேற்கு இணுவில் பகுதியைச் சேர்ந்த சசிக்குமார் ஜீவன்சன் (வயது 20) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், இவருக்கு தெல்லிப்பழை பகுதியிலும் ஒரு வீடு உள்ளது. இந்நிலையில் குறித்த இளைஞன் அன்றையதினம் தந்தையின் மரக்காலைக்கு செல்வதாக தாயிடம் கூறிவிட்டு தெல்லிப்பழையில் உள்ள வீட்டுக்கு சென்றுள்ளார்.

பின்னர் அங்கு தொட்டியினுள் தண்ணீர் நிரப்பிவிட்டு நீச்சலடித்துள்ளார். இதன்போது அவருக்கு வலிப்பு ஏற்பட்டு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். பின்னர் மகனை காணாத நிலையில் பெற்றோர் அவரை தேடியவேளை அவரது சடலம் தண்ணீர் மிதந்தவாறு காணப்பட்டது.

பின்னர் அவரது சடலமானது மீட்கப்பட்டு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, உடற்கூற்று பரிசோதனைகளுக்காக அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

# பக்தர் புடைசூழ நயினை நாகபூசணி அம்மன் கொடியேற்றம் சிறப்பாக நடைபெற்றது!



வரலாற்று பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத் திருவிழாவின் கொடியேற்றத் திருவிழா, வியாழக்கிழமையன்று 26ம் திகதி வெகு சிறப்பாக நடைபெற்றது.

நாகபூசணி அம்மனுக்கு ஈழத்தில் காணப்படும் முக்கிய ஆலயம் இதுவாகும். அன்றையதினம் அம்பாளின் கொடியேற்றம் இடம்பெறுவதற்கு சில தினங்களுக்கு முன்னர் நாக பாம்பு ஆலயத்தின் முன்புறத்தே வந்து படமெடுத்தபடி பக்தர்களுக்கு காட்சியளித்தது.

குறித்த ஆலயத்தின் கொடியேற்றத்திற்கு புலம்பெயர் தமிழர்கள், சுற்றுலாப் பயணிகள் என பலரும் வருகை தந்தனர்.



# இவ்வார ராசிபலன்

(24 பக்கத் தொடர்ச்சி)




**விருச்சிகம்:** புண்ணிய காரியங்களில் ஈடுபடும் வாரம். உணவு விடுதி லாபம் தரும். புதிய வாய்ப்பு தேடி வரும். அரசு வழி ஆதாயம் உண்டு. அரசியலில் புகழ் கூடும். மாணவர் பாராட்டுப் பெறுவர். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். மனைவி உடல்நலம் பாதிக்கும். பிணிகள் அகலும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு கூடும். காரியத்தடை அகலும். உறவினர்களால் நன்மை உண்டு. எதிரிகளால் தொல்லை உண்டாகும். வாகனச் செலவு ஏற்படும். பயணம் அனுகூலம் தரும். பழையக்கடன் வசூலாகும். சகோதரியால் அனுகூலம் உண்டு. ஆபரணச்சேர்க்கை உண்டு. கலைத்துறையில் திருப்பம் உண்டு. தொழில் அபிவிருத்தி ஏற்படும். வரவுகள் திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும். உத்தியோக உயர்வு உண்டு. சச்சரவுகள் அகலும். குடும்ப கௌரவம் உயரும். போட்டிகள் உருவாகி மறையும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. தன லாபம் கூடும். வறுமைகள் ஒழியும். விவேகம் அதிகரிக்கும். கலையில் ஈடுபாடு அதிகரிக்கும். கமிஷன் தொழில் திருப்தி தரும். பேச்சில் இனிமை கூடும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். விளையாட்டுத்துறையில் லாபம் அதிகரிக்கும். அந்தஸ்து உயரும். மனதில் சந்தோஷம் அலைமோதும். மறைமுக எதிர்ப்புக்கள் விலகும். திறமையால் பெருமை சேரும். எதிரிகள் பலம் குறையும். வழக்கு வெற்றி தரும். மாற்று இன உதவி கிட்டும். புதிய சொத்துக்கள் வாங்குவீர்கள். தோதான எண்ணம் உருவாகும். செல்வாக்கு உயரும். உணவுத்தொழில் உயர்வு பெறும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீபெரிய பாளையத்தம்மன், அதிர்ஷ்ட எண்: 6,7,1,9
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,J




**தனுசு:** எண்ணிய காரியம் கைகூடும் வாரம். வணிகத்தொழில் வளம் கூடும். உதவும் குணம் அதிகரிக்கும். பேச்சில் நிதானம் தேவை. விபரீத எண்ணம் விலகும். தர்ம சிந்தனைகள் மேலோங்கும். பெருமைகள் சேரும். பழைய பாக்கி வசூலாகும். தொலைபேசி தகவல் மகிழ்ச்சியைத் தரும். மாணவர்களுக்கு படிப்பில் உற்சாகம் கூடும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். புதிய சொத்து சேரும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். பால்ய நண்பர்களை சந்திக்க நேரிடும். பறவைகளுக்கு உணவளித்து பலன் பெறலாம். புதிய எண்ணம் உருவாகும். தொழில் லாபம் கூடும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். மருத்துவச் செலவு உண்டு. ஆடை, அணிகலன் சேரும். பழைய பாக்கி வசூலாகும். சாதகமான சூழ்நிலை உருவாகும். வழக்குகள் வெற்றியை தரும். இன்றையப் பிரார்த்தனை நன்மையைக் கூட்டும். வரவுகளால் திருப்தி உண்டு. பிரபல்யங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். விவேகம் கை கொடுக்கும். வெற்றி வீடு தேடி வரும். செல்வச் செழிப்பு உயரும். தெளிவான முடிவுகள் உதயமாகும். மங்களகரமான காலம். மின்சாரத்தில் சற்று கவனம் தேவை. மனக்கட்டுப்பாடு அவசியம். மாற்றத்தை விரும்புவீர்கள். தோற்றப்பொலிவு கூடும். மனைவியின் கோபம் அதிகரிக்கும். குடும்ப சச்சரவுகள் அகலும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பர பொருள் சேரும். குடும்ப மேன்மை உண்டாகும். வீண் விரயம் தவிர்க்கவும். பாக்கிகள் வசூலாகும். வியாபார விரயம் ஏற்படும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பெண்களால் பெருமை சேரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: வைத்தீஸ்வர முருகன், அதிர்ஷ்ட எண்: 8,1,4,3
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,O




**மகரம்:** வறுமைகள் விலகும் வாரம். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிரபல்ய ஆசை ஏற்படும். பிரச்சனைகள் தீரும். தொழில் வாய்ப்புகள் கூடி வரும். சுபச்செய்தி வரும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். மனைவியால் மரியாதை உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். புதிய நட்பு உருவாகும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். திடீர் திருப்பம் ஏற்படும். கலைத்தொழில் லாபம் தரும். கடன் வாங்க நேரிடும். கண்நோய் வந்து போகும். கவலைகள் வந்து போகும். கால்நடைகளால் நன்மை உண்டு. புதுமைகள் நிறைந்த காலம். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். முயற்சிகள் வெற்றி தரும். அணிகலன் சேர்க்கை உண்டு. ஆடம்பர எண்ணம் அலைமோதும். பதவி உயர்வு கிட்டும். பொருளாதார சிக்கல் நீடிக்கும். சிரமங்கள் அதிகரிக்கும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். பயணம் பலன் தரும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. மனதில் உற்சாகம் கூடும். குழந்தைகளால் மகிழ்ச்சியுண்டு. நிதி நிலைமை சீராகும். மெத்தனப் போக்கு மாறும். பொருள் இழப்பு ஏற்படும். உடல்நலம் சீராகும். அந்தஸ்து உயரும். நண்பர்களால் உதவி உண்டு. வேற்று மனிதரால் லாபம் உண்டு. விருப்பங்கள் நிறைவேறும். வியாபாரம் செழிக்கும். காதல் கசக்கும். உயர்கல்வி ஆர்வம் அதிகரிக்கும். கூட்டுத்தொழில் லாபம் தரும். எதிலும் விடாமுயற்சி அவசியம். நல்லோர்களின் நட்பு கிட்டும்.
வழிபட வேண்டிய தெய்வம்: முப்பாத்தம்மன், அதிர்ஷ்ட எண்: 6,1,2,9
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,P




**கும்பம்:** பணவரவு அதிகரிக்கும் வாரம். துணிவோடு செயல்படுவீர்கள். காதல் கைகூடும். நிர்வாகத்தில் நிதானம் தேவை. வியாபார விருத்தி ஏற்படும். உறவினரால் அனுகூலம் உண்டு. கணவன், மனைவி ஒற்றுமை கூடும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். ஸ்திர சொத்து சேரும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். சுபகாரியம் கைகூடும். விவாக முயற்சி வெற்றி தரும். ஆரோக்கியம் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். நம்பிக்கை துளிர்விடும். பழைய பாக்கிகள் வசூலாகும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய தொழில் முதலீடுகளில் கவனம் தேவை. மனைவியின் அன்பு அதிகரிக்கும். சகோதர வழியில் சகாயம் கிடைக்கும். காதலர்கள் தம்பதியாவார்கள். பங்குச்சந்தையில் பணம் புரளும். செல்வாக்கு மேம்படும். வாகன மாற்றம் உண்டு. கர்ம வினைகள் அகலும். பழைய பகை தீரும். வீண் செலவுகள் அதிகரிக்கும். உழைப்பில் கவனம் தேவை. நண்பர்களால் பாராட்டு பெறுவீர்கள். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. புதுமையை விரும்புவீர்கள். மதிப்பும், மரியாதையும் உயரும். உடன்பிறப்புக்களால் உதவி கிடைக்கும். பணவரவு திருப்தி தரும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். மறைமுக எதிர்ப்புகள் விலகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: திருத்தணி முருகர், அதிர்ஷ்ட எண்: 1,9,5,7
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,R




**மீனம்:** வியாபார லாபம் அதிகரிக்கும் வாரம். மனக்கசப்பு நீங்கும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். உழைப்பிற்கான பலன் கிடைக்கும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். பண நடமாட்டம் கூடும். கணவன், மனைவி உறவு இனிக்கும். உடல்நலம் மேம்படும். அரசு வழியில் ஆதாயம் கிடைக்கும். மற்றவரிடம் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். நல்லோர்களின் பாராட்டுக் கிடைக்கும். துன்பங்கள் அகலும். திடீர் பயணம் உற்சாகம் தரும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். செய்த்தொழில் வியாபாரம் சிறந்து விளங்கும். சேமிப்பு வளரும். பெண்களுக்கு மன அமைதியும், மகிழ்ச்சியும் கிடைக்கும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். லஷ்மி கடாட்ஷம் பெருகும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். நட்பு வட்டம் விரிவடையும். வேண்டும் வரம் கிடைக்கும். நலமே விளையும் இனிய வாரமாகும். புண்ணியம் சேரும். பெயர், புகழ் செல்வாக்கு கௌரவம் உயரும். எதிர்ப்புக்கள் விலகும். தென்றல் வீசும். இல்வாழ்வில் இனிமை கூடும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிடைக்கும். பங்குச்சந்தையில் லாபம் அதிகரிக்கும். பொருளாதாரம் உயரும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து சேரும். உத்தியோக பெண்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். பண நடமாட்டம் கூடும். நீண்ட தூரப் பயணம் லாபம் தரும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். கஷ்ட காலம் விலகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பண்ணாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 2,9,6,3
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,K

# MORTGAGE

## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND
INDUSTRIAL · CONSTRUCTION



## OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal



CALL US

**NESAN**

**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8









26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்






உதயம் 1525 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 27, 2025

# "சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் பல ஈழத்து படைப்பாளிகளையும் கவிஞர்களை முதலில் வரவேற்று இடமளித்தது மொன்றியால் மாநகரே"

## மொன்றியலில் கவிதாயினி மோகனின் கடந்தவையும் கடப்பவையும் கவிதை நூல் வெளியீட்டு விழாவில் "உதயன்" லோகேந்திரலிங்கம் புகழாரம்




"எமது பிறந்த மண்ணாம் ஈழத்திலிருந்து சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர்அங்கு தமது வாழ்க்கையைத் தொடரை முடியாமல் பல ஈழத்து படைப்பாளிகளும் கவிஞர்களும் இலக்கிய ஆர்வலர்களும் எங்கு போவது என்று திட்டங்கள் இல்லாமல் மொன்றியால் நகரில் கால்பதித்த போது முதலில் வரவேற்று இடமளித்தது இந்த மொன்றியால் மாநகரமே. அவர்களுள் பலர் ரொறன்ரோ உட்பட பல நகரங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றாலும் இன்று பல இலக்கிய நெஞ்சங்கள் இங்கு தொடர்ச்சியாகத் தங்கியிருந்து உள்ளத்தில் உறுதியுடன் இங்கு படைப்புக்களைத் தொடர்ந்து தந்த வண்ணம் உள்ளார்கள். அவர்களின் இன்றைய நாயகி கவிதாயினி உமா மோகனும் ஒருவர். இந்தவகையில் இன்று கனடா வாழ் தமிழ் மக்களின் இரண்டாவது தளமாகவும் மொன்றியால் மாநகர் திகழ்கின்றது என்றால் அது மிகையாகாது"

இவ்வாறு மொன்றியலில் கவிதாயினி மோகனின் கடந்தவையும் கடப்பவையும் கவிதை நூல் வெளியீட்டு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றி கனடா "உதயன்" லோகேந்திரலிங்கம் அவர்கள் புகழாரம் சூட்டினார். (தொடர்ச்சி 25ம் பக்கம்)

# "துரோகியே வெளியேறு" — செம்மணியிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட சி.வி.கே. சிவஞானம்!



இலங்கை தமிழரசு கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் 25ம் திகதி அன்றையதினம் செம்மணியில் போராட்டம் நடைபெற்ற இடத்திற்கு சென்றவேளை அங்கிருந்த போராட்டக்காரர்களால் விரட்டியடிக்கப்பட்டார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி வேண்டி அணையா விளக்கு போராட்டமானது கடந்த 23ஆம் திகதி ஆரம்பமாகிய நிலையில் அன்றுவரை நடைபெற்று வருகிறது. குறித்த போராட்டம் நடைபெற்ற இடத்திற்கு இலங்கை தமிழரசு கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் சென்றவேளை அங்கு போராட்டத்தில் ஈடுபட்ட போராட்டக்காரர்கள் அவரை ஒருமையில் விழித்து கூச்சலிட்டு அந்தப் பகுதியில் இருந்து அவரை விரட்டியடித்தனர். இதனால் அங்கு பதற்றமான நிலை ஏற்பட்டது.



# இலங்கையில், ஐநா ஈழத்தமிழரை கைவிட்டது. அதேபோன்று மலையக தமிழரையும் கை விட்டுவிடாதீர்கள்.

## மனித உரிமை ஆணையாளர் வொல்கர் டர்க்கிடம் மனோ கணேசன் நேரடியாக வலியுறுத்தினார்

ஐநா சபையும், அதற்குள் வரும் மனித உரிமை ஆணையமும், இலங்கையில் வாழும் ஈழத்தமிழ் மக்களை கை விட்டு விட்டது. கொடிய யுத்தம் நடந்த போது ஐநா சபை வடக்கில் இருந்து முன்னறிவித்தல் இல்லாமல் வெளியேறி, அங்கே சாட்சியம் இல்லாத யுத்தம் **(War without Witness)** நடக்க காரணமாக அமைந்து விட்டது. இன்று யுத்தம் முடிந்து 15 வருடங்கள் ஆகியும், கொலையானோர், காணாமல் போனோர் தொடர்பில் பொறுப்பு கூறல் நடை பெறவில்லை. அரசியல் கைதிகள் பிரச்சினை முழுமையாக முடிவுக்கு வரவில்லை. யுத்தம் நடைபெற மூல காரணமாக அமைந்துள்ள இனப்பிரச்சினை தீர்வுக்கு வரவில்லை. ஆகவேதான், ஈழத்தமிழ் உடன் பிறப்புகள் ஐநா சபை தங்களை கைவிட்டு விட்டதாக நினைக்கிறார்கள். ஈழத்தமிழ் மக்களை கைவிட்டதை போன்று, இந்நாட்டில் வாழும் மலையக தமிழ் மக்களையும் கைவிட்டு விட வேண்டாம் என உங்களை கோருகிறேன் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், இலங்கை வந்துள்ள ஐநா மனித உரிமை ஆணையர் வொல்கர் டர்க்கிடம் நேரடியாக தெரிவித்தார்.

# யாழ்ப்பாணம் — கந்தர்மடம் மக்கள் ஒன்றியம் — கனடா நடத்திய வருடாந்த கோடைகால ஒன்றுகூடல் — 2025



கனடாவில் ஒன்றாரியோ மாகாணத்தில் நீண்ட காலமாக இயங்கிவரும் யாழ்ப்பாணம்- கந்தர்மடம் மக்கள் ஒன்றியம் நடத்திய இவ்வருடத்திற்குரிய வருடாந்த கோடைகால ஒன்றுகூடல் கடந்த சனிக்கிழமையன்று 21ம் திகதி ஸ்காபுறோவில் அமைந்துள்ள தொம்சன் பூங்கா வளாகத்தில் காலை 10.00 மணி தொடக்கம் நடைபெற்றது.

யாழ்ப்பாணம்- கந்தர்மடம் பகுதியைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட பல அன்பர்கள் தங்கள் குடும்பத்தினரோடு அங்கு வருகை தந்து பொழுது போக்கு விளையாட்டுகளில் கலந்தும் காலை மற்றும் மதியம் உணவருந்தியும் களித்தனர்.

இந்த அமைப்பினர் நடத்தும் வருடாந்த இராப்போசன விருந்துடனான வைபவமும் வருடந்தோறும் சிறப்பாக நடைபெறுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

இங்கு காணப்படும் படத்தில் அங்கு கலந்து கொண்ட ஒருபகுதியினர் மகிழ்ச்சியோடு கூடி நிற்பதைக் காணலாம்.